# விதியை மாற்றிய விதி



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
விதி எண்.110ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரைகளின் தொகுப்பு–2

விதியை மாற்றிய விதி

தொகுப்பு–2




**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்**

**110 விதியின் கீழ்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

# செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

**ஆற்றிய உரைகளின் தொகுப்பு-2**

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
சென்னை.

சிறப்பு வெளியீடு எண். 26

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2013

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.

# பதிப்புரை

**த**மிழகத்தின் மேம்பாட்டிற்காக சட்டங்கள் இயற்றி, திட்டங்களை அரங்கேற்றும் அவையாகத் திகழ்ந்திடும் தமிழக சட்டமன்றப் பேரவையில், இன்னலப்படும் ஏழை மக்களின் தலைவிதியை மாற்றும் வகையில், விதி எண். 110 ன் கீழ் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை அடுக்கடுக்காக வழங்கிய ஒரே முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தான்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011 மே திங்களில் மூன்றாம் முறையாக தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், விதி எண் 110இன் கீழ் அளித்த அறிக்கைகளின் வாயிலாக வெளியிட்டுள்ள நலத் திட்டங்கள் குறித்த விவரங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், அனைத்து அறிக்கைகளையும் தொகுத்து டிசம்பர் 2012இல் **"விதியை மாற்றிய விதி"** என்ற தலைப்பில் நூலாக செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வெளியிடப்பட்டது.

மேலும் 1.4.2013 முதல் 15.5.2013 வரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத் தொடரில் அளித்த அறிக்கைகளைத் தொகுத்து 2ஆவது தொகுப்பாக இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலைத் தயாரித்து வழங்கிய செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. **ஜெ. குமரகுருபரன்,** இஆப அவர்களையும் இப்பணிக்கு உறுதுணைப் புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன். தமிழக மக்கள் அனைவரும் இந்நூலைப் படித்துப் பயன்பெறவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முனைவர் **மூ. இராசாராம்**, இஆப
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# பொருளடக்கம்


| வ. எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 1.4.2013 | ரூ.1,348.30 கோடி மதிப்பில் 131 ஆற்றுப்பாலங்கள் 67 அரசுச் சாலைகள் 18 இரயில்வே மேம்பாலங்கள் | 9 |
| 2. | 4.4.2013 | ரூ.258.73 கோடி மதிப்பில் 310 ஏரிகள் 63 அணைக்கட்டுகள் புனரமைப்பு | 14 |
| 3. | 4.4.2013 | மதுரைக்கு அருகே 586.86 ஏக்கரில் துணைக்கோள் நகரம்! சோழிங்கநல்லூரில் 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் | 17 |
| 4. | 5.4.2013 | மீனவர்களுக்கு 75 சதவிகித மானியத்தில் தகவல் தொடர்புக் கருவிகள்! | 22 |
| 5. | 8.4.2013 | சென்னையில் ரூ.29 கோடி நிதி ஒதுக்கீட்டில் உலக சதுரங்க வாகையர் போட்டி! | 26 |
| 6. | 8.4.2013 | ரூ.150 கோடி ஒதுக்கீட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள 4 மண்டல மையங்களில் அடிப்படை வசதிகள்! | 28 |
| 7. | 9.4.2013 | பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக உயர்வு! | 32 |
| 8. | 10.4.2013 | நடப்பாண்டில் ரூ.797.69 கோடி மதிப்பில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ! | 38 |
| 9. | 15.4.2013 | ரூ.400 கோடி மதிப்பில் "ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்" | 43 |
| 10. | 16.4.2013 | ரூ.1,000 கோடி மதிப்பில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் | 48 |
| 11. | 17.4.2013 | தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப்புரட்சி விரைவில் நிறைவேறும்! | 52 |

| | | | |
|---|---|---|---|
| 12. | 17.4.2013 | திருமண நிதியுதவித் திட்ட குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு உயர்வு! | 56 |
| 13. | 19.4.2013 | டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகள்! | 60 |
| 14. | 22.4.2013 | தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்களுக்கு வட்டிச் சலுகை திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பு! | 69 |
| 15. | 25.4.2013 | தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும்! | 73 |
| 16. | 30.4.2013 | வண்டலூரில் புதிய புறநகர் பேருந்து நிலையம் | 82 |
| 17. | 2.5.2013 | தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அகவிலைப்படி உயர்வு | 87 |
| 18. | 2.5.2013 | 1,000 வருவாய் கிராமங்களில் 97 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 2 கோடி மரக் கன்றுகள் | 89 |
| 19. | 2.5.2013 | ரூ.50 கோடியில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் மறுசீரமைக்கும் திட்டம் | 93 |
| 20. | 6.5.2013 | வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் ரூ.984 கோடியே 70 இலட்சம் மதிப்பில் திட்டங்கள் | 97 |
| 21. | 6.5.2013 | இந்தியாவிலேயே முதன்முறையாக ரூ.6.48 கோடியில் ஆதார செல் ஆராய்ச்சி மையம் | 102 |
| 22. | 6.5.2013 | நடப்பாண்டில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 47 சேமிப்புக் கிடங்குகள் | 106 |
| 23. | 7.5.2013 | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் புதிய ஆலை | 111 |
| 24. | 7.5.2013 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பல்வேறு சிறப்புச் சலுகைகள்! | 116 |

| | | | |
|---|---|---|---|
| 25. | 8.5.2013 | புகையிலையால் ஏற்படும் புற்றுநோய்களைத் தடுக்கும் வண்ணம் குட்கா, பான் மசாலா பொருட்களுக்குத் தடை | 122 |
| 26. | 8.5.2013 | பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கூடுதலாக நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டப்படும் | 133 |
| 27. | 8.5.2013 | அரசு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இணைப்பு! | 140 |
| 28. | 9.5.2013 | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம்! | 145 |
| 29. | 9.5.2013 | 54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல விடுதிகளுக்கு ரூ. 52 கோடி மதிப்பில் சொந்தக் கட்டடங்கள்! | 149 |
| 30. | 9.5.2013 | மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் | 153 |
| 31. | 10.5.2013 | 25 புதிய அரசுப் பேருந்து பணிமனைகள் அமைப்பு மற்றும் மலைப்பிரதேசங்களில் 250 சிற்றுந்துகள் அறிமுகம் | 156 |
| 32. | 10.5.2013 | ரூ.5 கோடி செலவில் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவக தொழில் நுட்பவியல் நிறுவனம் சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக நிலை உயர்வு! | 161 |
| 33. | 10.5.2013 | பி.ஏ.பி.எல்., (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை! | 167 |
| 34. | 10.5.2013 | ரூ.30 கோடி செலவில் மதுரை மற்றும் கோவையில் பெண் சிறைவாசிகளுக்கென புதிய சிறைகள் அமைப்பு | 172 |
| 35. | 13.5.2013 | வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்படும் | 175 |

| | | | |
|---|---|---|---|
| 36. | 13.5.2013 | அனைத்து ஐ.டி.ஐ. மாணவர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்படும் | 181 |
| 37. | 14.5.2013 | 100 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம்! | 187 |
| 38. | 14.5.2013 | "முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்" என்ற புதிய திட்டம் அறிமுகம்! | 193 |
| 39. | 14.5.2013 | மகளிர் கல்வி வளர்ச்சிக்காக "தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம்!" | 201 |
| 40. | 14.5.2013 | ரூ.100 கோடி மதிப்பீட்டில் மதுரையில் தமிழ்த்தாய் சிலை! | 207 |
| 41. | 15.5.2013 | ரூ.1,481 கோடி மதிப்பீட்டில் கடலோரப் பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம்! | 214 |
| 42. | 15.5.2013 | 150 பள்ளிகள் நிலை உயர்வு! புதிதாக 54 தொடக்கப் பள்ளிகள் அமைப்பு! | 219 |
| 43. | 15.5.2013 | சென்னையைப் போன்றே இதர 9 மாநகராட்சிகளிலும் மலிவு விலை உணவகங்கள்! | 224 |
| 44. | 15.5.2013 | விவசாயிகளுக்கு 80 விழுக்காடு மானியத்தில் 2,000 சூரியசக்தி பம்பு செட்டுகள்! | 226 |
| 45. | 15.5.2013 | வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம்– ஹைதர் அலி, திப்புசுல்தான் மற்றும் சுவாமி சகஜானந்தா ஆகியோருக்கு மணிமண்டபங்கள்! | 229 |

## ரூ.1,348.30 கோடி மதிப்பில் 131 ஆற்றுப் பாலங்கள் 67 அரசுச் சாலைகள், 18 இரயில்வே மேம்பாலங்கள் - 1.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதிலும், மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிப்பதிலும் மிக முக்கியப் பங்கினை வகிப்பது சாலை கட்டமைப்பு என்பதைக் கருத்தில் கொண்டும்; ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை கணிப்பதில் சாலைக் கட்டமைப்பு இன்றியமையாததாக விளங்குகிறது என்பதைக் கருத்தில் கொண்டும்; சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை கொடுத்து வருகிறது.

அந்த வகையில், போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையிலும்; பயண நேரம் மற்றும் வாகன இயக்கச் செலவினை குறைக்கும் வண்ணமும்; புதிய பாலங்கள் அமைத்தல்; வட்டச் சாலைகள் அமைத்தல்; புறவழிச்சாலைகள் அமைத்தல் உட்பட பல்வேறு சாலைப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளன.

இதன்படி, சென்னை பெருநகர தகவல் தொழில்நுட்ப சாலையில் பெருகி வரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்; உயரமான அடுக்குமாடி குடியிருப்பு வசதிகள்; கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றால் உருவாகும் வாகன நெரிசலை குறைக்கும் வண்ணம் தரமணி முதல் சிறுசேரி வரை முதல் தொகுப்பாகவும்;

சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை இரண்டாவது தொகுப்பாகவும்; மொத்தம் 45 கிலோ மீட்டர் நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைத்திட எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது. இந்த திட்டத்தினை செயல்படுத்தும் வகையில், விரிவான திட்ட அறிக்கை விரைந்து தயாரிக்கப்படும். இதற்கென 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2005ஆம் ஆண்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கேட்டுக் கொண்டபடி, திருநின்றவூர் முதல் பாடி வரையிலான 22 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும், சுங்கம் வசூலிக்க சாத்தியக்கூறு இல்லாத காரணத்தால் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்படி சாலை எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே, அதிக அளவு வாகனப் போக்குவரத்தால் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள இந்தச் சாலை, மீண்டும் நகர்புற மாநிலச் சாலையாக எடுத்துக் கொள்ளப்பட்டு, 168 கோடி ரூபாய் மதிப்பில் ஆறு வழிச்சாலையாக அகலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, 98 கோடி ரூபாய் மதிப்பில் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சென்னை உலர் துறைமுகத்திற்காக, திருவள்ளூர் மாவட்டம், மப்பேட்டில், 126 கோடி ரூபாய்க்கு சிப்காட் மூலம் சென்னை துறைமுகக் கழகத்திற்கு நிலம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. உலர் துறைமுகத்திலிருந்து தேசிய

நெடுஞ்சாலை–4 வரை டிரக்குகள் எளிதில் செல்லும் வகையில் இணைப்புச் சாலை அமைக்கும் பொருட்டு, மாவட்ட முக்கியச் சாலையான தண்டலம் – பேரம்பாக்கம் – தக்கோலம் அருகில் 39.40 கிலோ மீட்டர் நீள பாடி சாலை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தி, மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் – கூடலூர் – மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெரம்பலூர் – மானாமதுரை மாநில நெடுஞ்சாலையில் மனக்கரம்பை வரை, இரண்டாம் கட்டமாக 14.27 கிலோ மீட்டர் நீளத்திற்கு 98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் புறவழிச்சாலை அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன், அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 131 ஆற்றுப் பாலங்கள் மற்றும் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 215 கிலோ மீட்டர் நீளமுடைய 67 அரசு சாலைகள் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், 948 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் சின்னக்காவனம் மற்றும் நந்தியம்பாக்கம் ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; திருவண்ணாமலை மாவட்டத்தில் திருவண்ணாமலை மற்றும் போளூர் ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; வேலூர் மாவட்டத்தில் வேலூர் மற்றும் வடுகன்தாங்கல் ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; திருச்சி மாவட்டத்தில் மணக்கால் மற்றும் கீழ கல்கண்டார் கோட்டை ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; சேலம் மாவட்டத்தில் முள்ளுவாடி

கேட் மற்றும் வாழப்பாடி ஆகிய இடங்களில் இரண்டு ரயில்வே மேம்பாலங்களும்; திருவாரூர் மாவட்டத்தில் பேரளம், நீடாமங்கலம் மற்றும் சிங்கலாஞ்சேரி ஆகிய இடங்களில் மூன்று ரயில்வே மேம்பாலங்களும்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; விழுப்புரம் மாவட்டம், மடப்பட்டில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; கோயம்புத்தூர் மாவட்டம் இராசிப்பாளையத்தில் ஒரு ரயில்வே மேம்பாலமும் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் ஒரு ரயில்வே மேம்பாலமும்; ஆக மொத்தம் 11 மாவட்டங்களில் 18 இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகளை செயல்படுத்தும் வகையில், நில எடுப்பு, பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைத்தல் மற்றும் தல ஆய்வு போன்ற ஆரம்பகட்ட பணிகள் 201 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

சிறுசேரியில், சிப்காட்டிலிருந்து தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினால் 2005ஆம் ஆண்டில் 99 வருட குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள 4.9 ஏக்கர் நிலத்தில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், 20 அடுக்கில் 2,000 வாகனங்கள் மற்றும் 50 பேருந்துகள் ஒரே சமயத்தில் நிறுத்த உதவும் பல்லடுக்கு வாகன நிறுத்தத்திற்கான கட்டடம் கட்டப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அருகே அமைந்திருக்கும் சிப்காட் தொழில் வளாகத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப் பொருட்களை கொண்டு செல்வதற்கும்; உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை நாட்டின் இதர பகுதிகளுக்கு அனுப்புவதற்கும்; நல்ல சாலைக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை கருத்தில் கொண்டு; பர்கூரில்

உள்ள சிப்காட் தொழில் வளாகத்தினை அருகிலுள்ள தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும் வகையில் போச்சம்பள்ளி–கொடமண்டப்பட்டி சாலையினை **8** கோடியே **68** இலட்சம் ரூபாயில் அமைக்கவும்; போச்சம்பள்ளி–கொடமண்டப்பட்டி சாலையிலிருந்து சிப்காட் தொழில் வளாகத்தை இணைக்கும் வகையில் **3** கோடியே **22** இலட்சம் ரூபாய் செலவில் புதிய சாலையினை அமைக்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின் மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன்; நகர்பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்கு குறைந்த நேரத்தில் சென்றடையவும், தொழில் வளர்ச்சி மேலும் மேன்மை அடையவும் வழிவகை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# ரூ.258.73 கோடி மதிப்பில் 310 ஏரிகள் 63 அணைக்கட்டுகள் புனரமைப்பு - 4.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டிற்கு உணவினைத் தந்து, நல்வளங்களைத் தந்து, வீட்டினை ஒளியுடையதாக்கி, நாட்டைக் காக்கும் நற்செயல்களை செய்து வரும் நீர்வள அமைப்புகளான அணைக்கட்டுகள், ஏரிகள் ஆகியவற்றை பராமரிப்பது மிக மிக அவசியம் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு பாசன உள்கட்டமைப்புகளை புனரமைக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தும் வகையில், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் IAMWARM, உலக வங்கி நிதியுதவியுடன் 2005ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் உப வடிநில கட்டமைப்பு, அதாவது Sub-Basin Framework முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகும். இந்தத் திட்டத்திற்கான மொத்த திருத்திய மதிப்பீடு 2,816 கோடி ரூபாய் ஆகும். இந்த நிதியிலிருந்து சுமார் 6.69 இலட்சம் ஹெக்டேர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் அணைக்கட்டுகள் முறைசார் மற்றும் முறைசாரா ஏரிகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களை புனரமைத்து நவீனப்படுத்த நீர்வள ஆதாரத் துறைக்கு 2,082 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. எஞ்சிய நிதி பிற துறைகளுக்கு ஒதுக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25 மாவட்டங்களில் 4,910 ஏரிகள், 662 அணைக்கட்டுகள் மற்றும் அதன் 8,071 கிலோ மீட்டர் நீர்வழங்கு வாய்க்கால்கள் ஆகியவற்றை புனரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ், மேலும் சில பாசன அமைப்புகளை புனரமைக்க வேண்டியிருப்பதால் தமிழக அரசின் வேண்டுகோளை அடுத்து இந்தத் திட்டத்தின் கால அளவை 2014ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை நீட்டித்து உலக வங்கி அனுமதித்துள்ளது.

இதனையடுத்து, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 17 மாவட்டங்களில் 26 உபவடி நிலங்களில் உள்ள 310 ஏரிகள், 63 அணைக்கட்டுகள் மற்றும் அதன் நீர்வழங்கு வாய்க்கால்களை புனரமைத்து, நீர் வழங்கும் திறனை மேம்படுத்துதல் மற்றும் மத்திய மண்டலத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் 258 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அதன்படி, நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே நடைபெற்று கொண்டிருக்கும் பணிகளையும், தற்பொழுது செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள பணிகளையும் செய்து முடிப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்ட கால அளவு 1.4.2013 முதல் 30.9.2014 வரை 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், வடகிழக்கு பருவ மழைக் காலத்தின் போது மருதையாறு நதியில் மிகக் குறுகிய காலத்தில் அதிக அளவில் வரப் பெறும் நீரை உரிய முறையில் பாசனத்திற்கு பயன்படுத்தும் வகையில் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம்,

கொட்டரை கிராமம் அருகில், மருதையாற்றின் குறுக்கே 108 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிதாக மருதையாறு நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப்படும். மருதையாறு நீர்த்தேக்க திட்டம் 211.58 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்டதாக அமையும்.

இத்திட்டத்தை செயலாக்குவதன் மூலம் பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொட்டரை, ஆதனூர், கூத்தூர், புஜங்கராயநல்லூர், நொச்சிக்குளம், தொண்டப்பாடி, அழகிரிபாளையம், கூடலூர், சாத்தனூர் ஆகிய 10 கிராமங்களிலுள்ள 4,194 ஏக்கர் புன்செய் நிலங்கள் புதிதாக பாசன வசதி பெறும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்க ஏதுவாக பாசனத்திற்கு தேவையான நீர் கிடைப்பதுடன், அப்பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டமும் உயர வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

## மதுரைக்கு அருகே 586.86 ஏக்கரில் துணைக்கோள் நகரம்! சோழிங்கநல்லூரில் 1,500 பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகள் - 4.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமானதாக விளங்கும் உறைவிடத் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் எண்ணற்ற பயன்களை பெறும் வகையிலும் தேவையான அனைத்து திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் வீட்டுவசதி வளர்ச்சியினை எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தி வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

மதுரை மாவட்டத்தில், தற்போது பெருகி வரும் வீட்டு வசதித் தேவையைக், கருத்தில் கொண்டு மதுரையிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் விமான நிலையத்திற்கு அருகில் மதுரை – திருநெல்வேலி நான்கு வழிப் பாதையில் தோப்பூர் மற்றும் உச்சப்பட்டி கிராமங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான 586.86 ஏக்கர் நிலத்தில் ஒருங்கிணைந்த துணைக்கோள் நகரம் ஒன்று உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துணைக்கோள் நகரத்தில் 19,500 மனைகள் உருவாக்கப்படும். இதில், 14,300 மனைகள் குறைந்த வருவாய் பிரிவினருக்கும், 2,500 மனைகள் மத்திய வருவாய் பிரிவினருக்கும், 750 மனைகள் உயர் வருவாய் பிரிவினருக்கும், 1,950 மனைகள் பொருளாதாரத்தில்

நலிவடைந்த பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த புதிய துணைக்கோள் நகரத்தில் அடிப்படை வசதிகளான, சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள், மழை நீர் சேகரிப்பு திட்டம் மற்றும் பூங்காக்கள் ஆகியவைகள் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், இங்கு குடியேறும் மக்களின் நலனுக்காக பள்ளி வளாகம், வணிக மனைகள், காவல் நிலையம், அஞ்சலகம், ஆரம்ப சுகாதார வசதி, தீயணைப்பு நிலையம் மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் என சமுதாயத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளும் இங்கே உருவாக்கப்படும். இந்தத் துணைக்கோள் நகரம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

இதே போன்று, சென்னைக்கு அருகிலுள்ள சோழிங்கநல்லூர் பகுதியில் தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கைவசம் உள்ள நிலத்தில் முன்கட்டுமான தொழில் நுட்பம், அதாவது, pre-fab technology என்ற நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 612 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500 பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குடியிருப்புகள் 10 மாடிகளை கொண்டதாக இருக்கும். இந்தத் திட்டத்தின் கீழ், குறைந்த வருவாய் பிரிவு, மத்திய தர வருவாய் பிரிவு, உயர் தர வருவாய் பிரிவினர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படும்.

டெல்லி, மும்பை, பெங்களூரு மற்றும் ஐதராபாத் போன்ற நகரங்களில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இந்த முன்கட்டுமான தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் கட்டுமானத்தின் காலம் 25 விழுக்காடு குறைவதோடு, கட்டுமானச் செலவும் 10 முதல் 15 விழுக்காடு வரை குறையும். கட்டட பாகங்களான, தூண், உத்திரம், மாடிப்படி, கூரை ஆகியவைகள், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு செல்வதற்கு முன் தண்ணீர் மூலம் curing செய்யப்பட்டு

உறுதிபடுத்தப்படும். கட்டுமானப் பாகங்கள் தயாரிக்கப்பட்ட பின் அவைகள் கட்டுமான இடத்திற்கு கொண்டு வரப்பட்டு அதற்குரிய இடங்களில் இயந்திரங்கள் மூலம் நிலை நிறுத்தப்பட்டு கலக்கப்பட்ட திண்காரை கலவை மூலம் இணைக்கப்படும். 24 மாடிகள் கொண்ட உயர் அடுக்குமாடி கட்டடங்களை இத்தொழில் நுட்பத்தின் மூலம் 24 மாதங்களில் கட்டலாம். கட்டுமானப் பாகங்கள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதால் கட்டடம் பார்ப்பதற்கு மிக நேர்த்தியாகவும், அழகாகவும் இருக்கும்.

இவை மட்டுமல்லாமல், சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய 9 மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் 1,630 தனி வீடுகள் மற்றும் 2,792 அடுக்குமாடி குடியிருப்புகள் சுமார் 918 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் என்பதையும், மேலும் 32 மனைகள் மேம்படுத்தப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள 7 இடங்களில் 13.80 ஏக்கர் நிலத்தில், 844 அடுக்குமாடி குடியிருப்புகள் 371 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் காஞ்சிபுரத்தில், இரண்டு இடங்களில் 22.70 ஏக்கர் நிலத்தில் 1500 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 32 மேம்படுத்தப்படும் மனைகள் 303 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் 3.90 ஏக்கர் நிலத்தில் 344 அடுக்குமாடி குடியிருப்புகள் 50 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டத்தில், 2 இடங்களில் 12.15 ஏக்கர் நிலத்தில் 468 அடுக்குமாடி குடியிருப்புகள் 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டத்தில் 36.20 ஏக்கர் நிலத்தில் 120 வீடுகள் 13 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10.50 ஏக்கர்

நிலத்தில் 258 அடுக்குமாடி குடியிருப்புகள் 19 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டத்தில் 3 இடங்களில் 32.50 ஏக்கர் நிலத்தில் 722 வீடுகள் 73 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் திண்டுக்கல் மாவட்டத்தில், இரண்டு இடங்களில் 1.03 ஏக்கர் நிலத்தில் 35 வீடுகள் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மற்றும் திருச்சி மாவட்டத்தில் 2 இடங்களில் 3.09 ஏக்கர் நிலத்தில் 104 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 27 வீடுகள், 25 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 4,454 அலகுகள், நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 24 மாதங்களில் முடிக்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம், இதுவரை, 1.29 இலட்சம் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில், சுனாமியால் பாதிக்கப்பட்ட 6,620 வீடுகள் தவிர, மீதமுள்ள அனைத்து குடியிருப்புகளும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாறுபட்ட தட்ப வெப்ப நிலை, குடியிருப்புகளை உபயோகித்தல், சுற்றுப்புற சூழல், அடுக்குமாடிக் குடியிருப்புகளில், குடியிருப்புதாரர்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள், குடியிருப்புகளை சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள், போன்ற காரணங்களினால் பல குடியிருப்புகளின் கட்டமைப்புகள் மிகவும் பழுதடைந்து வலு குறைந்துள்ளன. இக்குடியிருப்புகளின் கட்டமைப்பு வலுவிழந்துள்ளதுடன் தளங்களில் உள்ள கம்பிகள் காற்றிலுள்ள உப்புத் தன்மை காரணமாக துருப்பிடித்துள்ளன. இத்தகைய குடியிருப்புகளில் வாழும் ஏழை, எளிய மக்கள் மழைக் காலங்களில் தொடர்ந்து அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இக்குடியிருப்புகளுக்கான சராசரி ஆயுட் காலம் 70 ஆண்டுகள் என்றிருந்தாலும், பெரும்பாலான குடியிருப்புகள் வலு குறைந்து அவற்றின் ஆயுட் காலம் முடியும் முன்னரே தகுதியற்றவைகளாக ஆகிவிடுகின்றன. எனவே, வலுவிழந்த கட்டடங்களை இடித்துவிட்டு புது வீடுகள் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் மிகவும் பழுதடைந்த 3,500 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 2013–2014 ஆம் ஆண்டில் மீண்டும் 3,500 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் 280 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் ரங்கநாதபுரம் திட்டத்தின் கீழ் 480 குடியிருப்புகளும், பார்த்தசாரதி நகர் திட்டத்தின் கிழ் 120 குடியிருப்புகளும், பெரம்பூர் தொகுதியில், சத்தியவாணி முத்துநகர் திட்டத்தின் கீழ் 392 குடியிருப்புகளும், எழும்பூர் தொகுதியில் நேரு பார்க் திட்டத்தின் கீழ் 288 குடியிருப்புகளும், பிள்ளையார் கோயில் தெரு திட்டத்தின் கீழ் 32 குடியிருப்புகளும், சேப்பாக்கம் தொகுதியில் லாக் நகர் (நாவலர் நகர்) திட்டத்தின் கீழ் 304 குடியிருப்புகளும், அயோத்தியா குப்பம் திட்டத்தின் கீழ் 708 குடியிருப்புகளும், சைதாப்பேட்டை தொகுதியில் கோட்டூர்புரம் திட்டத்தின் கீழ் 136 குடியிருப்புகளும், மயிலாப்பூர் தொகுதியில் ஆண்டிமான்ய தோட்டம் திட்டத்தின் கீழ் 42 குடியிருப்புகளும், பல்லக்குமான்யம் திட்டத்தின் கீழ் 48 குடியிருப்புகளும், கோவை மாவட்டத்தில் ஆடுதொட்டி திட்டத்தின் கீழ் 246 குடியிருப்புகளும், திருச்சி மாவட்டம் திருச்சி – பீச்சான்குளம் திட்டத்தின் கீழ் 587 குடியிருப்புகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகை கூடைமுடைவோர் காலனி திட்டத்தின் கீழ் 117 குடியிருப்புகளும் என ஆக மொத்தம் 3,500 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் அரசின் நடவடிக்கைகள் தமிழக மக்களின் வீட்டுவசதித் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மீனவர்களுக்கு 75 சதவிகித மானியத்தில் தகவல் தொடர்பு கருவிகள்! - 5.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், புரதச் சத்துள்ள உணவைப் பெருக்குவதிலும், கணிசமான அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் மீன்பிடித் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றாலும் இந்தத் தொழிலை மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. மீனவர்களின் துயரினை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, மீன்பிடி தடை காலங்களில் வழங்கப்பட்டு வரும் தொகையை இரட்டிப்பாக்கியது, மீன்பிடிப்பு குறைந்த காலங்களில் சிறப்பு நிவாரண உதவித் தொகையாக 4,000 ரூபாய் வழங்கும் முன்னோடித் திட்டம்; விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட டீசல் வழங்கும் திட்டம், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் தற்போது 5,600 மீன்பிடி விசைப் படகுகள் உள்ளன. சில மீனவர்கள் தங்கள் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்களை பொருத்தியுள்ளனர். இன்னும் பெரும்பாலான விசைப் படகுகளில் தகவல் தொடர்பு சாதனங்கள் ஏதுமில்லை. மீனவர்களின் பாதுகாப்பிற்கு உயர் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத விசைப் படகுகளுக்கு மானிய விலையில் VHF ரேடியோ கருவிகள்

வழங்கப்படும் என்பதையும்; கடலோரப் பகுதிகளில் உயர் கோபுரங்களை அமைத்து மீனவர்கள் எளிதில் தொடர்பு கொள்ளத் தேவையான தகவல் தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 20,000 ரூபாய் விலையுள்ள இந்த VHF கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். இந்த கம்பியில்லா தகவல் தொடர்பு வசதிகள் மூலம் இடர் நேரிடும் காலங்களில் கரையில் இருக்கும் அரசு அலுவலர்களையும், குடும்பத்தினரையும் தொடர்பு கொள்ள இயலும். இதே போன்று, புயல் மற்றும் வெள்ளக் காலங்களில் எச்சரிக்கைத் தகவல்களை அரசு அலுவலர்கள் மீனவர்களுக்கு கொண்டு செல்ல இயலும். மேலும், ஐதராபாத்தில் உள்ள கடல் தகவல் பணிக்கான இந்திய தேசிய மையத்திலிருந்து, அதாவது Indian National Centre for Ocean Information Service–லிருந்து பெறப்படும் தகவல்களை தாமதமின்றி மீனவர்களுக்கு உடனடியாக அனுப்பிடவும் இந்தத் தகவல் தொடர்பு வசதி பயன்படும். இதனால் மீனவர்கள் துல்லியமாக மீன்கள் நிறைந்த பகுதிக்குச் சென்று மீன் பிடிக்க இயலும்.

தொலைதூரத்தில் ஆழ் கடல் பகுதியில் ஒரு மாதத்திற்கும் மேலாக தங்கி மீன்பிடி தொழிலை மேற்கொள்ளும் படகுகளுக்கு அதிக அலைவரிசைக் கொண்ட HF ரேடியோ கருவி வசதிகள் தேவைப்படுவதால், அதிக விலை கொண்ட இந்த HF ரேடியோ கருவிகள் தேவைப்படும் மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும். 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இந்த HF கருவிகளுக்கு 75 விழுக்காடு மானியம் வழங்கப்படும். இதற்கான கட்டுப்பாட்டு அறைகளை நிர்வகிக்கும் பொறுப்பினையும் மீன் வளத் துறை ஏற்கும். 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை மாநகரம் வேகமாக வளர்ந்து வரும் சூழ்நிலையிலும், தொடர்ந்து நீர்பிடிப்புப் பகுதியாகவே விளங்கும் மீன் வளத் துறைக்குச் சொந்தமான 15 ஏக்கர் பரப்பளவு உடைய சேத்துப்பட்டு ஏரி 42 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும் என்பதையும், அங்கு பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா அதாவது Sports Fishing-cum-Eco Park அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஏரியில் பொழுதுபோக்கு அம்சங்களான தூண்டில் மீன்பிடிப்பு, நீர் சாகச விளையாட்டுகள், படகு சவாரி, திறந்த வெளி அரங்கங்கள் மற்றும் சிறுவர்கள் விளையாட்டு திடல் போன்ற வசதிகள் அமைக்கப்படும். இந்தப் பூங்கா பசுமையுடன் விளங்கும் வகையில் ஏரியின் கரையோரங்களில் அழகிய மற்றும் அரிய வகை மரங்கள் வளர்க்கப்படும். இந்த பசுமைப் பூங்காவில் உருவாக்கப்படவிருக்கும் நடைபாதை மற்றும் தொடர் நடை ஓட்டப் பாதைகள் மக்களுடைய உடல் மற்றும் மன நலத்தை ஆரோக்கியமாக பேண உதவும். இங்கு ஏற்படுத்தப்படவிருக்கும் பல அடுக்கு வாகன நிறுத்த வசதிகள் அந்தப்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலை குறைக்க வழிவகை செய்வதோடு, சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்களும் இப்பூங்காவினை பயன்படுத்த வழி வகுக்கும். இங்கு அமைக்கப்பட இருக்கும் மீன் உணவகம் சென்னை வாழ் மக்களின் நாவிற்கு நல் விருந்தாக அமையும்.

காசிமேடு மீன்பிடி துறைமுகம் என்றும், ராயபுரம் மீன்பிடி துறைமுகம் என்றும் அழைக்கப்பெறும் சென்னை மீன்பிடி துறைமுகம் 1984 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 575 மீன்பிடி படகுகளை நிறுத்திட தேவையான வசதிகள் கொண்டதாக இந்த மீன்பிடி துறைமுகம் ஏற்படுத்தப்பட்டது. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி தாக்குதலால் மீன்பிடி இறங்கு தளம் மிகவும் பழுதடைந்தது. பழுதடைந்த இந்த மீன்பிடி இறங்கு

தளத்தை சீர்செய்ய 2011 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசு 16 கோடியே 24 இலட்சம் ரூபாயினை ஒதுக்கீடு செய்தது. படகு நிறுத்துமிடம் சீரமைக்கப்படுவதுடன், மீன் ஏலக் கூடம் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. தற்போது இந்த மீன்பிடி துறைமுகத்தில் படகுகளின் எண்ணிக்கை 1,395 ஆக உயர்ந்துள்ளதையும், கையாளப்படும் மீனின் அளவு அதிகரித்துள்ளதையும், இட நெருக்கடி காரணமாக மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதில் மிகுந்த இடையூறுகள் ஏற்படுவதையும் கருத்தில் கொண்டு 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தத் துறைமுகம் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, வடக்கு அலை தடுப்புச் சுவரில் 300 மீட்டர் நீளத்தில் புதிய படகு அணையும் துறை அமைத்தல், கண்ணாடி நாரிழை படகுகள் நிறுத்துவதற்கு ஏற்ற வகையில் 200 மீட்டர் நீளத்திற்கு புதிய படகு துறை அமைத்தல், தற்போதைய படகு துறையினை வடக்கு மற்றும் தெற்கு முனைகளில் தலா 50 மீட்டர் நீளத்திற்கு நீட்டிப்பு செய்தல், 150 மீட்டர் நீளத்திற்கு இரண்டு புதிய துணை படகு துறைகளும், 200 மீட்டர் நீளத்திற்கு ஒரு புதிய துணை படகு துறையும் அமைத்தல், படகினை பழுது பார்க்க வசதியாக சாய்வு தளம் அமைத்தல், இரண்டு புதிய வலை பழுது பார்க்கும் கூடங்கள் கட்டுதல், சூரிய சக்தி மூலமாக இயங்கும் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மீனவர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தவும், மீனவர்களின் வருவாயை பெருக்கவும், அந்நிய செலாவணியை அதிகரிக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# சென்னையில்
# ரூ.29 கோடி செலவில்
# உலக சதுரங்க வாகையர் போட்டி!
# - 8.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனதிலும், உடலிலும் உறுதியுள்ள இளைய தலைமுறையினரை உருவாக்குவதிலும், சர்வதேச அளவில் நமது நாட்டின் பெயரை நிலைநிறுத்துவதிலும் இன்றியமையாத் தன்மையை வகிப்பது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. இளைய சமுதாயத்திற்குத் தேவையான நற்பண்புகளை புகட்டி அவர்களை பொறுப்புள்ள மனிதர்களாக மலரச் செய்யும் விளையாட்டுத் துறைக்கு எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இதன் ஒரு பகுதியாக, கடந்த 2011 ஆம் ஆண்டு உலக சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. Kirsan Illyumzhinov அவர்கள் என்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்து 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டியினை, World Chess Championship-ஐ சென்னையில் நடத்தும்படி என்னிடம் வேண்டுகோள் விடுத்தவுடன், இதுவரை இந்தியாவில் நடைபெறாத இந்த உலக சதுரங்க வாகையர் போட்டியினை 20 கோடி ரூபாய் செலவில் சென்னையில் நடத்த ஒப்புதல் அளித்தேன்.

இருப்பினும், இந்தப் போட்டியை நடத்துவதற்காக நடத்தப்பட்ட ஏலத்தில், அதிகத் தொகையினை ரஷ்ய நாடு குறிப்பிட்டதால், 2012 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டி ரஷ்ய நாட்டில் நடைபெற்றது. 2012 ஆம்

ஆண்டுக்கான உலக சதுரங்க வாகையர் போட்டியினை நடத்த தமிழ்நாடு முன் வந்ததைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டியினை ஏல முறையின்றி சென்னையில் நடத்த உலக சதுரங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உலக சதுரங்க கூட்டமைப்பின் வேண்டுகோளினை ஏற்று, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள உலக சதுரங்க வாகையர் போட்டியினை சென்னையில் நடத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதையும், இதற்கென 29 கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்யும் என்பதையும் மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போட்டிகள் ஐந்து முறை உலக வாகையர் பட்டம் சூடிய தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், தற்போதைய உலக சதுரங்க வாகையருமான கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் தற்போதைய உலக தர வரிசையில் முதல் சதுரங்க வீரராகவும், FIDE தர வரிசைப் பட்டியலில் இதுவரை உயர்ந்த அளவில் 2,872 புள்ளிகள் பெற்று முன்னணியில் உள்ள நார்வே நாட்டைச் சேர்ந்த திரு. மேக்னஸ் கார்ல்சன் (Mr. Magnus Carlsen) ஆகியோருக்கும் இடையே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வதேச அளவிலான இது போன்ற போட்டிகள் சென்னையில் நடத்தப்படுவதன் மூலம் இளைய சமுதாயத்தினர் இடையே சதுரங்க விளையாட்டினை பயில்வதற்கான ஆர்வம் மேலும் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பல சதுரங்க விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

## ரூ.150 கோடி ஒதுக்கீட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழுள்ள 4 மண்டல மையங்களில் அடிப்படை வசதிகள்! - 8.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக விளங்கும் மனித வள மேம்பாட்டிற்கு அடிப்படையாக விளங்குவது உயர் கல்வி. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த உயர் கல்வியை நம் நாட்டிலுள்ள அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்தியாவிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, எவ்வித வசதியுமின்றி செயல்பட்டு வந்த ஐந்து அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை சென்னை அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைத்து, தமிழகத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் எனது தலைமையிலான அரசு கொண்டு வந்தது.

இது மட்டுமல்லாமல், கல்வி தொடர்பான விவரங்களை தங்களது கல்லூரிக்கு அருகில் இருந்து பெற்றுக் கொள்ள வசதியாகவும், கல்லூரிகளின் செயல்பாடுகளை கண்காணிக்க வசதியாகவும் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாநகராட்சிகளில் மண்டல மையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழுள்ள நான்கு மண்டல மையங்கள் மற்றும் உறுப்பு பொறியியல் கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் விதமாக, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மண்டல அலுவலகங்களுக்கான கல்வி சார்ந்த கட்டடங்கள் தலா 30 கோடி ரூபாய் செலவிலும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மண்டல மையங்களில் மாணவ மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் தலா 10 கோடி ரூபாய் செலவிலும், திண்டுக்கல், ராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகளில் மாணவ – மாணவியருக்கான விடுதிக் கட்டடங்கள் தலா 10 கோடி ரூபாய் செலவிலும், பட்டுக்கோட்டை மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் உள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகளில் விடுதிக் கட்டடங்கள் தலா 5 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்படும். அண்ணா பல்கலைக் கழகத்தின் பன்னிரெண்டு உறுப்புக் கல்லூரிகளுக்கும் மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி மற்றும் பிற வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தித் தரப்படும். மொத்தத்தில் மேற்காணும் பணிகளுக்காக 150 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டின் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் சுவாமி விவேகானந்தரின் போதனைகள் தற்கால சூழ்நிலைக்கும் பொருத்தமாக விளங்குவதைக் கருத்தில் கொண்டு, சென்னை பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகிய ஒன்பது பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் சுவாமி

விவேகானந்தரின் பெயரில் 25 இலட்சம் ரூபாய் செலவில் உயர் ஆய்வு மற்றும் கல்வி மையம் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், சுவாமி விவேகானந்தரின் போதனைகளான தேச பக்தி, ஒழுக்கம், கண்ணியம், அறிவாற்றல், மத சகிப்புத் தன்மை ஆகியவை மாணவ – மாணவியரிடமும், பொதுமக்களிடமும் எடுத்துச் செல்லப்படும்.

புதிதாக கல்லூரிகள் துவங்குவதைப் பொறுத்த வரையில், மூன்று அரசு பொறியியல் கல்லூரிகள், 22 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 10 அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்படும் என எனது தலைமையிலான அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி, ஒரு அரசு பொறியியல் கல்லூரி மற்றும் 22 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுவிட்டன. இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 10 அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகள் விரைவில் செயல்படத் துவங்கும்.

இது மட்டுமல்லாமல், 2013–2014 ஆம் கல்வி ஆண்டிலிருந்து மேலும் எட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். இது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் இடம் பெற்றிருக்கிறது. இதுதவிர, மேலும் நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டிலிருந்து துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி; தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கோயில்பட்டி; ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி, முதுகுளத்தூர் மற்றும் திருவாடானை; புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கரம்பக்குடி; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒசூர்; நாமக்கல் மாவட்டத்தில் உள்ள குமாரபாளையம்; திருப்பூர் மாவட்டத்தில் உள்ள காங்கேயம்; காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் மற்றும் தஞ்சாவூர்

மாவட்டத்தில் உள்ள பேராவூரணி ஆகிய 11 இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள காரிமங்கலத்தில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் ஆக மொத்தம் 12 கல்லூரிகள் இந்த ஆண்டு முதல் துவங்கப்படும்.

இது தவிர, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேப்பூரில் பல்கலைக்கழக உறுப்பு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் கடலூர் மாவட்டத்தில் உள்ள திட்டக்குடியில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இந்த ஆண்டு முதல் துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமின்றி, தமிழ்நாட்டின் மையப் பகுதியாக விளங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி இல்லாததைக் கருத்தில் கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் ஒரு அரசு பொறியியல் கல்லூரியும்; திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாரில் ஒரு அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரியும் இந்த ஆண்டு முதல் துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் தமிழ்நாடு உயர் கல்வியில் முன்னேற்றம் அடையவும், இதன் மூலம் தமிழக மக்கள் அனைத்துச் செல்வங்களையும் பெற்று பெருமையும், புகழும் அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை ரூ.1.80 இலட்சத்திலிருந்து ரூ.2.10 இலட்சமாக உயர்வு! - 9.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இந்திய மக்களாட்சியின் அடித்தளமாக அமைந்துள்ளன. கிராம ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நாம் வலுப்படுத்தவில்லை எனில், நமது மக்களாட்சி அமைப்பு வலுவானதாகவும், செயல் திறன் மிக்கதாகவும் இருக்க முடியாது” என்றார் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் வழியில் ஆட்சி நடத்தி வரும் எனது தலைமையிலான அரசு ஊரக பகுதி வாழ் மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

நான் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், முதலமைச்சரின் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் என்ற ஒரு புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தினேன். இந்தத் திட்டத்தின்படி, சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடு ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 300 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும் என்றும், ஆண்டிற்கு 60,000 வீடுகள் என்ற அடிப்படையில் ஐந்து ஆண்டுகளில் 3 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்றும் நான் அறிவித்தேன். எனது அறிவிப்பிற்கிணங்க, 2011–2012 ஆம்

ஆண்டில் 60,000 வீடுகள் 1,080 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதே போல், 2012–2013 ஆம் ஆண்டின் இலக்கான 60,000 வீடுகளில் இதுவரை 20,861 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் அனைத்தும் விரைவில் கட்டி முடிக்கப்பட்டுவிடும். அனைத்து வீடுகளும் பயனாளிகள் மூலமே கட்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், கட்டுமானப் பொருட்களான மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றின் விலையேற்றம் காரணமாக சூரிய சக்திக்கான "சூரிய தகடு", அதாவது Solar Panel மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவான, 30 ஆயிரம் ரூபாய் நீங்கலாக வீடு கட்டுவதற்கு அரசு நிர்ணயித்துள்ள அலகுத் தொகையான 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் வீட்டினை கட்டுவதற்கு சிரமமாக உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அலகுத் தொகையை உயர்த்திட வேண்டும் என்று கோரினர்.

பயனாளிகளின் வேண்டுகோளினையும், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கையினையும் ஏற்று, ஏழை மக்கள் பயன்பெறும் வகையில், சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை 2013–2014 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி வீடு கட்டுமானப் பணிக்கான தொகை 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் எனவும், சூரிய சக்திக்கான உபகரணங்கள் அமைத்திடும் பணிக்கான தொகை 30 ஆயிரம் ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்படும்.

இதே போன்று, இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட இந்த அரசு நிர்ணயித்துள்ள ஒரு இலட்சம் ரூபாய் என்ற அலகுத் தொகை 2013–2014 ஆம் ஆண்டு முதல் 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதில் மத்திய அரசின் பங்குத் தொகை 52 ஆயிரத்து 500 ரூபாய் எனவும், மாநில அரசின் பங்குத் தொகை 67 ஆயிரத்து 500 ரூபாய் எனவும் இருக்கும்.

கிராமங்கள் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டும், சுற்று சூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய "தூய்மையான கிராம இயக்கம்" என்ற ஒரு திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில், 2003 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இதன் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாகின. ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு, இந்தத் திட்டம் 2006–2007 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவில்லை.

2011–இல் நான் மீண்டும் முதலமைச்சராக பதவியேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற இந்த திட்டத்தை மீண்டும் செயல்படுத்த உத்தரவிட்டேன். இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு ஒரு தூய்மையான கிராம ஊராட்சியை தேர்ந்தெடுத்து, அந்த கிராம ஊராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும், "தூய்மையான கிராம இயக்கம்" என்ற விருதும் வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். இதன்படி 31 மாவட்டங்களில் உள்ள 31 கிராம ஊராட்சிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் பரிசு வழங்கும் வகையில், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார இயக்கத்தின் கீழ் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை ஒரு முக்கிய கூறாகும். எனவே தான், ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகளுக்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவன்றி, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைப் பணிகளுக்காக 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி 500 குடும்பங்களுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில் 20 இலட்சம் ரூபாய் வரையிலான மதிப்பீட்டில் திட மற்றும் திரவக் கழிவு பணிகளை மேற்கொள்ளலாம். மத்திய அரசு இதற்கென நமக்குரிய 100 கோடி ரூபாய் நிதி உதவித் தொகையை இந்தத் திட்டத்திற்கு அளிக்கும் என எதிர்பார்க்கிறேன்.

இந்த நிதியிலிருந்து, குப்பைகளை, மக்கும் மற்றும் மக்காத கழிவுப் பொருட்களாக பிரித்தல் மற்றும் அப்புறப்படுத்துதல்; தெருக்கள், திறந்தவெளிகள் மற்றும் சுற்றுப்புறங்களை கழிவுப் பொருட்கள் இல்லாமல் சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்; கழிவு நீரை அகற்றுதல், கழிவு நீர் உறிஞ்சு குழிகள் அமைத்தல், நீர் ஆதாரங்கள் மற்றும் வடிகால்கள் சுற்றிலும் முறையாக கழிவு நீர் செல்ல தளம் அமைத்தல்; பொதுவான இடங்களிலும், பொது நீர் நிலைகளுக்கு அருகிலும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்பட்டு மேலாண்மை செய்தல், கழிவு நீரை மறு சுழற்சி செய்தல்; உரக்குழிகள், மண்புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு கலன்கள் அமைத்தல் போன்ற மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சிகளில் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவு பணியாளர்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. கிராமங்களில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள தற்போது 9,896 துப்புரவுப் பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். எனவே, இப்பகுதிகளில் துப்புரவுப் பணியை மேற்கொள்ள கூடுதலான பணியாளர்களை நியமித்தல் அவசியமாகிறது. இதனை இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு, மக்கள் தொகை 3,000க்கும் கீழ் உள்ள 8,469 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக ஒன்று வீதமும்; 3,001 முதல் 10,000 வரை உள்ள 3,908 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக இரண்டு வீதமும்; 10,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 147 கிராம ஊராட்சிகளில் கிராம ஊராட்சிக்கு கூடுதலாக மூன்று வீதமும், ஆக மொத்தம் 16,726 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்திட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் பணியிடங்களில் பணி அமர்த்தப்படுபவர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் 2,000 ரூபாயும், அகவிலைப்படியாக 40 ரூபாயும் வழங்கப்படும். இதன் காரணமாக, ஒரு பணியிடத்திற்கு ஆண்டொன்றிற்கு தோராயமாக 25 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும். 16,726 துப்புரவு பணியாளர்களுக்கு கூடுதலாக 41 கோடியே 81 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படும்.

இது மட்டுமல்லாமல், ஊராட்சிகளின் செலவினத்தை கட்டுப்படுத்தும் வகையிலும், மின் சக்தியினை பயன்படுத்துவதில் சிக்கனத்தினை கடைப்பிடிக்கும் வகையிலும், புதுப்பிக்கத்தக்க

எரி சக்தியினை ஊக்குவிக்கும் வகையிலும் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியங்களில் சூரிய சக்தியைக் கொண்டு மின் வசதி ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, 2013–2014 ஆம் ஆண்டில் 50 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களில் சூரிய சக்தியுடன் கூடிய மின் வசதி ஏற்படுத்தப்படும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி அலுவலகங்களில் உள்ள மின் விசிறிகள், குழல் விளக்குகள், கணினி மற்றும் அச்சுப்பொறி ஆகிய மின் உபகரணங்கள் சூரிய சக்தி மூலம் செயல்படும் வகையில் சூரிய சக்தி கலன் அமைக்கப்படும்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 7 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்தி கலன் அமைத்திட 10 இலட்சம் ரூபாய் வீதம் 50 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு மொத்தம் 5 கோடி ரூபாயும்; ஒரு கிராம ஊராட்சிக்கு 0.50 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய சக்தி கலன் அமைத்திட 80 ஆயிரம் ரூபாய் வீதம் 500 கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கு 4 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

மேற்காணும் எனது அரசின் நடவடிக்கைகள் மக்களாட்சியின் அடித்தளமாக விளங்கும் கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வலுப்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# நடப்பாண்டில் ரூ.797.69 கோடி மதிப்பில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள்! -10.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட் தொகைக்கேற்ப குடிமைப்பணிகளைஉயர்ந்தஅளவில்நிறைவேற்றிக்கொடுப்பதும், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதும் உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமை என்றாலும், மாநில அரசுக்கும் இதில் பொறுப்பு உள்ளது. இதனை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப நல்ல சுற்றுப்புற சூழலை ஏற்படுத்துவதிலும், பொது சுகாதாரத்தை பராமரிப்பதிலும், பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்குவதிலும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அதிக அக்கறை செலுத்தி வருகிறது.

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் ஒன்றான ராமநாதபுரம் மாவட்டத்தின் குடிநீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் ராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் 3.80 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் எனது ஆட்சிக் காலத்தில் தான் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் 3.80 மில்லியன் லிட்டர் குடிநீரை பெற முடியும். இதே போன்று, ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தான் வடிவமைக்கப்பட்டு பின்னர் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் உள்ளூர் நீராதாரங்களின் தரமும், நம்பகத்தன்மையும் தற்போது குறைந்து வருவதால், இம்மாவட்டத்தின் குடிநீர்ப்

பிரச்சனையைத் தீர்க்க நிரந்தரத் தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது.

எனவே, சென்னை மாநகரத்தின் நீர்த் தேவையை சமாளிக்க கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது போல், ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நிலவும் நிலத்தடி நீரின் நிலையற்ற தன்மை மற்றும் குடிநீர் தர பிரச்சனை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அனைத்து காலங்களிலும் நிரந்தரமாக மக்களுக்கு குடிநீர் கிடைக்கும் வகையில் ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில், தலா 100 மில்லியன் லிட்டர் குடிநீர் திறனுடைய கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்த வரையில், ஊரகப் பகுதிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் என்ற இலக்கை எய்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு, காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, சாணார்பட்டி, நத்தம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வடமதுரை, வேடசந்தூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல், ரெட்டியார் சத்திரம் மற்றும் பழனி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,342 குடியிருப்புகளைச் சேர்ந்த 5,62,000 மக்கள் பயன் பெறுவர்.

இதே போன்று, தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பேராவூரணி, பெருமகளூர், அதிராம்பட்டினம் பேரூராட்சிகள்; மற்றும் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி,

மதுக்கூர், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு மற்றும் திருவோணம் ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 1,153 குடியிருப்புகளில் வசிக்கும் 5,76,000 மக்கள் பயன் பெறும் வண்ணம் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 125 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தொண்டாமுத்தூர், பூலுவபட்டி, தென்கரை, வேடப்பட்டி, தாளியூர், ஆலந்துறை, பேரூர் ஆகிய 7 பேரூராட்சிகள் மற்றும் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் 1,55,000 மக்கள் பயன் பெறும் வகையில் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 114 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம் மற்றும் காங்கேயம் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் உள்ள 1,262 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 2,80,140 மக்கள் பயன்பெறும் வண்ணம் காவேரி ஆற்றினை நீராதாரமாகக்கொண்டு 76 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அந்தநல்லூர், மணிகண்டம் மற்றும் மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 177 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் 1,27,720 மக்கள் பயன்பெறும் வண்ணம் காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். ஆக மொத்தம் 797 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருநெல்வேலி மாநகராட்சி, ஆரணி, திருவத்திபுரம், மற்றும் பெரியகுளம் ஆகிய 3 நகராட்சிகளில் 2013–2014 ஆம் ஆண்டில் ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதி ஆகியவற்றின் கீழ் 227 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சேகரிக்கப்படும் திடக் கழிவுகளில் 40 முதல் 60 விழுக்காடு திடக் கழிவுகள் மக்கும் தன்மை உடையதாக உள்ளன. அதிக அளவில் திடக் கழிவுகள் உற்பத்தியாகும் காய்கறி அங்காடிகள், உணவகங்கள், திருமணக்கூடங்கள், இறைச்சி கூடங்கள் ஆகியவற்றிலிருந்து கழிவுகளை தினசரி சேகரித்து அவற்றிலிருந்து உருவாகும் உயிரி எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யலாம். 5 டன் எடை கொண்ட மக்கும் கழிவிலிருந்து நாளொன்றுக்கு 440 யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்வதன் மூலம் சுமார் 750 தெரு விளக்குகளை 12 மணி நேரம் ஒளிரச் செய்ய இயலும்.

எனவே, திடக் கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் வகையில், 200 சதுர மீட்டர் பசுமை பகுதி உள்ளிட்ட 625 சதுர மீட்டர் பரப்பரளவில் திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாநகராட்சிகளிலும், கும்பகோணம், பள்ளிப்பாளையம், ஓசூர், பூந்தமல்லி, காயல்பட்டினம், மேட்டூர், திருத்தணி, ஆவடி, காஞ்சிபுரம், கடலூர், பல்லவபுரம், திருவண்ணாமலை, கரூர், திருச்செங்கோடு, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், உதகமண்டலம், ராஜபாளையம், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம்,

கோபிச்செட்டிபாளையம், நாகர்கோவில் மற்றும் பழனி ஆகிய **24** நகராட்சிகளிலும் **27** கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக் கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் நவீன உயிரி எரிவாயு கூடங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் சொந்த நிதி மூலமாகவும் மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடனும், உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி போன்ற அயல் நாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் நிதி மூலமாகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதால், நகராட்சிகளின் நிதி வளர்ச்சியானது பல மடங்கு உயர்ந்துள்ளது. எனவே, நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், ‘‘தமிழ் நாடு நகராட்சி கணக்கு பணி’’ என்ற பணியமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, பெருகி வரும் மக்கள் தொகை, அதிகரித்து வரும் வருவாய், பணிகளின் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இரு நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதையும்; காரைக்குடி மற்றும் சிவகாசி நகராட்சிகள் தேர்வு நிலையிலிருந்து சிறப்பு நிலை நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் நகர்ப்புற மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறவும், வாழ்க்கைத் தரம் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

## ரூ.400 கோடி மதிப்பீட்டில் "ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்" - 15.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு மாநிலத்தின் உயிர் நாடியாக விளங்குவது கிராமங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால் தான், மகாத்மா காந்தி அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபடுமாறு படித்த இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். கிராமங்களின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கிராம முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கிராம முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பது சாலைகள் ஆகும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் 74,981.29 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகள் உள்ளன. இச்சாலைகளை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிப்பது இன்றியமையாததாகும். இச்சாலைப் பராமரிப்புப் பணிகள், தற்போது நடப்பிலுள்ள ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருவதால் நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை.

இதனைக் கருத்திற் கொண்டு, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளை பராமரிக்க ஏதுவாக, "ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம்" 400 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதற்கான நிதி மாநில நிதிக்குழு மற்றும் 13–ஆவது நிதிக் குழு ஆகியவற்றின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சாலை அமைக்கும் செலவினத்தில் சேமிப்பினை ஏற்படுத்தும் வகையிலும், சுற்றுச்சூழல் பிரச்சனைகளை பெருமளவில் ஏற்படுத்தி தூய்மைக்கு கேடு விளைவிக்கும் மக்காத தன்மையுடைய பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி கிராமப் பகுதிகளில் தார்ச் சாலைகள் அமைக்கும் பணியினை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், கிராம ஊராட்சிப் பகுதிகளில் 153 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1254.13 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் 1,002 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலைப் பணிகள் விரைவில் முடிக்கப்பட உள்ளன. இச்சாலைகள் அமைக்க 917 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் கழிவுகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இந்த ஆண்டும் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள தார் சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, குடியிருப்புகளை அலகாகக் கொண்டு இந்தியாவிலேயே முதல் முறையாக ஒரு மாபெரும் செயல்திட்டம் “தாய்” என்ற பெயரில் 2011–2012இல் என்னுடைய அரசால் தொடங்கப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் கடந்த இரு ஆண்டுகளில் ஏறத்தாழ 97,000 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை தவிர, 45 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், மற்றும் 416 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களுக்கான பணிகள் 110 கோடியே

64 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் 2011–2012ஆம் ஆண்டில் பயன்பாடற்று இருந்த 12,796 ஊரக மகளிர் சுகாதார வளாகங்கள் 170 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அதே போல, 2012–2013ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் உள்ள 36,230 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 3,416 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் பிரதானக் குடிநீர்க் குழாய்கள் 175 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 13,954 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்து பணிகளும் ஏப்ரல், 2013 இறுதிக்குள் முடிக்கப்படும்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்கள் 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன பல்வேறு ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் போதிய இடவசதி இல்லாமல் சிறிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வட்டார அளவில், அந்தந்த வட்டாரத்திற்கு தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அலகாக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் திகழ்கின்றன. அந்தந்த வட்டாரத்தில் உள்ள பொதுமக்கள், தங்களின் அடிப்படை தேவைகளான வீட்டு வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், சாலை வசதி மற்றும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை அணுக வேண்டியுள்ளது. ஒன்றிய அளவிலான மக்கள் பிரதிநிதிகள் தங்களின் வட்டாரத்திற்கு தேவையான பணிகளை நிறைவேற்ற அரசு அலுவலர்களுடன் சேர்ந்து செயல்படவும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முக்கிய மையமாக செயல்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 25 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு தலா 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

புதிய அலுவலக கட்டடங்கள் கட்டப்படும். இதற்கென 50 கோடி ரூபாய் நிதி ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும். புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்களில் பொதுமக்களுக்கான காத்திருப்பு அறை, குடிநீர் வசதி, பெண்களுக்கான கழிவறை வசதி, கூட்ட அரங்கு, பயிற்சி அரங்கு மற்றும் இதர வசதிகள் அமையப் பெற்றிருக்கும்.

ஊராட்சி மன்ற அலுவலக கட்டடங்கள், போதிய இட வசதி இல்லாமல் பழுதடைந்த நிலையில் இருப்பதும் எனது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள் கட்ட மக்கள் பிரதிநிதிகள் இடமிருந்தும் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இதற்கிணங்க, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 200 கிராம ஊராட்சி மன்றங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கிராம ஊராட்சி மன்ற கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த புதிய கிராம ஊராட்சி அலுவலக கட்டடங்களில், மன்ற கூட்ட அறை, பொருட்களுக்கான தளவாட அறை, கழிவறை வசதி போன்ற வசதிகள் அமையப் பெற்றிருக்கும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள சமுதாயக் கூடங்கள், சத்துணவுக் கூடங்கள், அங்கன்வாடி கட்டடங்கள், நியாய விலைக் கடைகள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள், இடுகாடு மற்றும் சுடுகாடுகள், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் விளையாட்டு மையங்கள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளினால் சரிவர பராமரிக்கப்படாமல், மக்களால் முழுமையாக பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. இந்த நிலையை சரி செய்திடும் வகையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உறுதுணையாக

ஊரகச் சொத்துக்களை பராமரிப்பதற்காக செயல்படுத்தப்பட்டு வரும் ''ஊரகக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சீரமைப்புத் திட்டம்'' என்ற திட்டத்திற்காக 2013–2014 ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பணிகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் தமிழகத்திலுள்ள அனைத்து ஊரகப் பகுதிகளும் தன்னிறைவு பெற்ற பகுதிகளாக உருவாக வழி வகுக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# ரூ.1,000 கோடி மதிப்பில் கடல் நீரை குடிநீராக்கும் நிலையம் - 16.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் தலைநகராகவும், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகவும் விளங்கி வரும் நவீனமும், பாரம்பரியமும் மிக்க சென்னை மாநகரத்தை எழிலார்ந்த சென்னையாக உருவாக்கும் அதே சமயத்தில், சென்னை மாநகரத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளும் சென்னை மாநகருக்கு நிகராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், அதற்குத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.

சென்னை மாநகரத்தில் நிலவி வந்த குடிநீர்ப் பற்றாக்குறையை போக்கும் வகையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2004 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கும் புதிய வீராணம் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இது தவிர, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை மீஞ்சூரில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தான் எடுக்கப்பட்டன.

அந்த வகையில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில், நெம்மேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள கடல்நீரை

குடிநீராக்கும் நிலையத்திற்கு அருகில் காலியாக உள்ள 10.50 ஏக்கர் நிலத்தில் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம், விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரின் தென்பகுதியில் அமைந்துள்ள ஆலந்தூர், பெருங்குடி, கொட்டிவாக்கம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி மற்றும் ஒக்கியம்–துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் சுமார் 6.46 இலட்சம் மக்கள் பயனடைவர்.

மேலும், சென்னைக்கு அருகில் உள்ள பட்டிபுலம் பகுதியில் எதிர்காலத்தில் 400 மில்லியன் லிட்டர் வரை விரிவாக்கம் செய்யக் கூடிய வகையில், 200 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் நிலையம் ஒன்றினை 4 ஆண்டுகளுக்குள் அமைத்திட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு தொடங்கப்பட்ட சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் மூலம் 192 கோடியே 2 இலட்சம் ரூபாய் 2012–2013 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு 9 பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் 303 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இடையான் சாவடி, சடையான் குப்பம், கடப்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம், சின்ன சேக்காடு, முகலிவாக்கம், பெருங்குடி மற்றும் பாலவாக்கம் ஆகிய 14 பகுதிகளில் வசிக்கும் மக்களின்

குடிநீர் தேவையை நிறைவேற்றும் வண்ணம், குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 3.47 இலட்சம் மக்கள் தங்கள் வீடுகளிலேயே குழாய் மூலம் குடிநீர் பெற்று பயனடைவர்.

சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை நகருடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளான சூரப்பட்டு, கதிர்வேடு, நொளம்பூர் மற்றும் முகலிவாக்கம் ஆகிய 4 பகுதிகளில் 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவு நீரகற்றும் கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம் இப் பகுதிகளில் வசிக்கும் 80,000 மக்கள் பயன் அடைவர்.

சென்னை நகர மையப் பகுதிகளில் உள்ளது போன்ற நவீன மின் விளக்குகள் ஒரே சீராக மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் பொருத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும், மின்சாரத்தை சேமிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடனும் 1,10,000 எண்ணிக்கையில் மின்சாரத்தை சேமிக்கும் வகையிலான தெரு விளக்குகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் பொருத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள விரிவாக்கப் பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெரு விளக்குகள், நடை பாதைகள், தெரு கலன்கள் மற்றும் சேவைத் துறையினருக்கான அமைப்புகள் அதாவது Ducts ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த சாலைகளை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–2012 ஆம் நிதி ஆண்டில் 175.36 கிலோ மீட்டர் நீளமுள்ள 360 எண்ணிக்கையிலான சாலைகளில் 333 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2012–2013 ஆம் நிதி ஆண்டில் 122 கிலோ

மீட்டர் நீளமுள்ள **513** எண்ணிக்கையிலான உட்புறச் சாலைகளில் **253** கோடியே **76** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக **2013–2014** ஆம் ஆண்டில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப் பகுதிகளில் **225** கிலோ மீட்டர் நீளமுள்ள **900** சாலைகளில் ஒருங்கிணைந்த சாலைகள் **290** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மூலம் சென்னை விரைவில் எழில்மிகு சென்னையாக உருவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தமிழகத்தில் இரண்டாவது வெண்மைப் புரட்சி விரைவில் நிறைவேறும்! - 17.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உடனுக்குடன் ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல் மற்றும் நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலமும், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும், பால் கொள்முதலில் தமிழ்நாடு முதல் இடத்தை அடைவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

எனது அரசின் முனைப்பான நடவடிக்கைகள் காரணமாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நாளொன்றுக்கு சுமார் 20 இலட்சம் லிட்டர் என்று இருந்த பால் கொள்முதல் தற்போது 24.36 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. தமிழக வரலாற்றில் முதன் முறையாக 20.11.2012 அன்று 27.15 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல்செய்துஆவின்நிறுவனம்சாதனைபடைத்திருக்கிறது. மேலும், புதுப் புது பால் உப பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, பால் பொருட்கள் உற்பத்தியும், விற்பனையும் கணிசமான அளவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக, 2011–2012இல் 2,791 கோடி ரூபாயாக இருந்த விற்பனை 2012–2013ஆம் ஆண்டில் 3,584 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது

என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பால் கொள்முதல் அதிகரித்துள்ள நிலையில், மாவட்ட ஒன்றியப் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் வகையிலும், பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையிலும், 95 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பில் கீழ்க்காணும் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, வேலூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம் – திருவள்ளூர் பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளில் உள்ள குளிர்விப்புத் திறன் வசதி; குளிரூட்டப்பட்ட பாலைச் சேமிக்கும் கொள் கலன்கள் வசதி; பாலை திடப்படுத்தும் வசதி, பாலிலிருந்து நுண் கிருமியை நீக்குவதற்கான வசதி; பாலிலிருந்து வெண்ணெயை பிரித்தெடுத்து சமன்படுத்தும் வசதி; பால் விற்பனை செய்ய ஏதுவாக குளிர்பதனக் கிடங்கின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் மின் இயக்குதிறன் ஆகியவை 20 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

2. சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 10.20 இலட்சம் லிட்டராக இருந்த விற்பனை 11.25 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ள நிலையில், பெருகி வரும் பாலின் தேவையைக் கருத்தில் கொண்டு, 37 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் பால் கையாளும் திறன் கீழ்க்கண்டவாறு மேம்படுத்தப்படும்.

   ❖ அம்பத்தூர் பால் பண்ணையில் சக்தி சேமிப்பு உயர்நிலை அழுத்தக் கருவிகள், பால் திடப்படுத்தும் கருவிகள், வெப்பம் ஊடுருவாத சுவர் மற்றும் தானியங்கி இயந்திரங்கள் 14 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

❖ சோழிங்கநல்லூர் பால் பண்ணையில், மணிக்கு 6,500 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட உச்ச வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பாலை நுண்ணுயிர் நுழையா பைகளில் அடைக்கும் இயந்திரம் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

❖ மாதவரம் பால் பண்ணையில், சக்தி சேமிப்புக் கருவியுடன் கூடிய உறைநிலை நீர்த் தொட்டிக் கருவிகள், புதிய குளிர்விக்கும் கருவிகள் மற்றும் பசுமை பால்பண்ணை சார்ந்த திட்டங்கள் 5 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

❖ சென்னை மாநகர பால் பண்ணைகளில் உணவு பதப்படுத்துதல் திட்டத்தின் கீழ் குளிரூட்டம் செய்வதற்கான வசதிகள் 8 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்திற்கேற்ற விலை கிடைக்கும் வகையில், பாலின் தரம் அறிய உதவும் 6,500 பகுப்பாய்வுக் கருவிகள் 35 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் படிப்படியாக வாங்கப்பட்டு, தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

4. தரமான பாலினை தொடர்ந்து வழங்கி வரும் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்கள் கண்டறியப்பட்டு, ‘‘நட்சத்திர அந்தஸ்து’’ மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படும். இதன்படி, சங்கங்களுக்கு தரமான பால் வழங்கும் உறுப்பினர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் நூறு பேருக்கு முதல் பரிசாக 3,000 ரூபாய், இரண்டாவது நூறு பேருக்கு இரண்டாம் பரிசாக 2,000 ரூபாய், மூன்றாவது நூறு பேருக்கு மூன்றாம் பரிசாக 1,000 ரூபாய் என ஊக்கத் தொகை வழங்கப்படும்.

இதற்கென ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 6 இலட்சம் ரூபாய் என 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. இதே போன்று ஒன்றியங்களுக்கு தரமான பால் வழங்கும் முதல் 10 சங்கங்கள் கண்டறியப்பட்டு, முதல் பரிசாக 25,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 15,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 10,000 ரூபாயும், மற்ற ஏழு சங்கங்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும். இதற்கென ஒரு ஒன்றியத்திற்கு 85,000 ரூபாய் என மொத்தம் 14 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் முனைப்பான நடவடிக்கைகள் மூலம், தமிழகத்தில் இரண்டாவது வெண்மை புரட்சி விரைவில் நிறைவேறும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## திருமண நிதியுதவித் திட்ட குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு உயர்வு! -17.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்ற மகாகவி பாரதியாரின் வாக்கிற்கிணங்க, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்ணுரிமையை நிலைநாட்டும் வகையிலும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம், திருமண நிதியுதவித் திட்டங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது.

பெண் சிசுக் கொலையை முற்றிலும் ஒழிக்கும் வகையிலும், பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தும் வகையிலும்; எனது ஆட்சிக் காலத்தில் 1992 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவான பெண் குழந்தைகள் பெயரில் 1,500 ரூபாய்க்கான வைப்புத் தொகை பத்திரங்கள் வழங்கப்பட்டன. பின்னர் 2001 ஆம் ஆண்டு இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. இதன்படி, ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருந்தால், அப்பெண் குழந்தையின் பெயரில் 22,200 ரூபாய் வைப்புத் தொகையும், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா 15,200 ரூபாயும் வைப்பீடு செய்யப்பட்டது. இந்தத் தொகை 20 ஆண்டுகள் கழித்து

வட்டியுடன் திருப்பி அளிக்கப்படும். தற்போது இந்தத் தொகை முறையே 50,000 ரூபாய் என்றும், 25,000 ரூபாய் என்றும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் பெறும் முதிர்வுத் தொகை குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டும்; இவர்களுக்கு தற்போது திருமண உதவித் திட்டத்தின் பயன் அளிக்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களுக்கு மற்ற திருமண உதவி திட்டங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, இவர்களுக்கு 4 கிராம் தங்கத்துடன் கல்வித் தகுதிக்கேற்ப திருமண உதவித் தொகையும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அவர்கள் 20 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்பட்டு வந்தது. இக்குழந்தைகளின் உயர் கல்விக்கு பயனளிக்கும் வகையில், இந்த முதிர்வுத் தொகை இனிமேல் 18 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நடப்பு நிதி ஆண்டில் 30,000 பெண்கள் பயனடைவர்.

இதே போன்று, ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான நிதியுதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகியவற்றின் கீழ் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம்

24,000 ரூபாய் என உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு 24,000 ரூபாயிலிருந்து 72,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாய் சேய் நலத்திற்கு வழிகாட்டும் திட்டமான ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் பணியாற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சனிக்கிழமை அன்றும், அங்கன்வாடி பணியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அன்றும் விடுமுறை அளிக்கப்படுகிறது. அங்கன்வாடி உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களின் பணிகள் முற்றிலும் மாறுபட்டு ஒருவரையொருவர் சார்ந்து இருப்பதாலும், ஒருவருடைய வேலையை மற்றொருவர் முழுமையாக செய்ய முடியாத சூழ்நிலை உள்ளதாலும், இவர்களுக்கு வெவ்வேறு நாட்களில் விடுமுறை அளிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டும், ஞாயிற்றுக்கிழமை அனைவருக்கும் பொது விடுமுறை என்பதாலும், அங்கன்வாடி ஊழியர்கள் அனைவரும் தங்களது குடும்பத்துடன் வார இறுதி நாளை மகிழ்வுடன் செலவிடும் வகையில், அவர்கள் அனைவருக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அங்கன்வாடிகளில் சத்துணவு பெறும் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட வேண்டிய சத்துணவு, வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் சமைக்கப்படாத உணவுப் பொருளாக குழந்தைகளின் பெற்றோர்களிடம் அங்கன்வாடி ஊழியர்களால் சனிக்கிழமை அன்றே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் எடையை கண்காணிக்கும்

வகையில், தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்காக 16,988 எடை பார்க்கும் கருவிகளும், குழந்தைகளுக்கான 11,333 எடை பார்க்கும் கருவிகளும், பச்சிளம் குழந்தைகளுக்காக 54,439 எடை பார்க்கும் கருவிகளும் 7 கோடியே 11 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கி எடை கருவிகள் இல்லாத அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான ஓய்வூதியம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ள நிலையில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற ஊழியர்களின் கோரிக்கையினை ஏற்று, அவர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 56,830 சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் பயன் பெறுவர். இதற்காக 26 கோடியே 95 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் மகளிர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

## டெல்டா அல்லாத மாவட்டங்களுக்கு 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகள் - 19.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்கை இன்னல்களாகிய வறட்சி, புயல், வெள்ளம் ஆகியவற்றிலிருந்து மக்களைக் காக்கும் முன்னேற்பாடுகளை மேற்கொள்வதிலும், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை அளிப்பதிலும், முனைப்புடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

விவசாயிகளின் நலன்களுக்காகவும், விலைவாசியை கட்டுப்பாட்டிற்குள் வைப்பதற்காகவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு 20 கிலோ விலையில்லா அரிசி; வெளிச் சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலையை கட்டுப்படுத்தும் வகையில் விலை நிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து 25 கோடி ரூபாய் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒதுக்கீடு; அரிசி விலையை உடனடியாக கட்டுப்படுத்த அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலம் 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம்; சிறப்பு பொது விநியோக திட்டத்தின் கீழ், வெளிச்சந்தையில் 57 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், 76 ரூபாய்க்கு விற்கப்படும் ஒரு கிலோ

துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், 60 ரூபாய்க்கு விற்கப்படும் உளுத்தம்பருப்பு 30 ரூபாய்க்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் திட்டம் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

இது மட்டுமல்லாமல் உரங்கள் மீதான மதிப்புக் கூட்டு வரியும், சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரியும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் 200 மலிவு விலை உணவகங்கள் சென்னை மாநகராட்சியால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை இயல்பை விட குறைவாக பெய்ததாலும், இடர்பாடு பங்கீட்டு முறையின்படி காவேரியில் நமக்குரிய பங்கினை அண்டை மாநிலமான கர்நாடகம் திறந்து விடாததாலும், சம்பா சாகுபடி பாதிப்பு ஏற்படும் என்பதை முன்கூட்டியே அறிந்து, சம்பா சாகுபடி பாதிப்பை குறைக்கும் வகையில் 68 கோடி ரூபாய் செலவில் புதிய உத்திகளை கையாளும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்தது. இது மட்டுமல்லாமல், 69 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் பாதிப்புகளை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில் ஓர் உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றில் கள ஆய்வு மேற்கொண்டு, தனது அறிக்கையை அரசுக்கு 31.1.2013 அன்று சமர்ப்பித்தது.

உயர்மட்டக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையில், சென்னையை தவிர இதர 31 மாவட்டங்களும் வறட்சியால்

பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்றும், இந்த மாவட்டங்களில் நிலவரி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும், டெல்டா மாவட்டங்களில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள டெல்டா விவசாயிகளின் 3.61 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி, பயிர் காப்பீட்டு நிவாரணம் மற்றும் காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணம் என மொத்தமாக ஏக்கர் ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வழங்கப்படும் என்றும் நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தேன். இதற்கென 541 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதில், 524 கோடியே 25 இலட்சம் ரூபாய் அளவிற்கு 3,52,613 விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, விவசாயிகள் தங்கள் கடனை திரும்ப செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தினை கருத்தில் கொண்டு, அவர்கள் பெற்றுள்ள கூட்டுறவு கடன்கள் மாற்றியமைக்கப்படும், அதாவது reschedule செய்யப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்லாமல், டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 1,517/– கோடி ரூபாய் அளவிற்கு வேலைவாய்ப்பு தரும் பணிகளை செயல்படுத்த நான் உத்தரவிட்டேன். டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கால்நடை தீவனப் பற்றாக்குறையை போக்கும் வகையில் 47 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும், குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் 37 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களையும் மேற்கொள்ள உத்தரவிட்டதோடு, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் சென்னை தவிர இதர 31 மாவட்டங்களிலும் தற்போதுள்ள 100 நாட்கள் என்ற பணி வரம்பை 150 நாட்கள் என உயர்த்தவும் ஆணையிட்டேன். இந்தப் பணிகள் எல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் நிலவும் வறட்சி நிலையை நேரில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தலைமையில் ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழு 18 மாவட்டங்களில் தனது ஆய்வினை மேற்கொண்டதோடுமட்டுமல்லாமல்,உள்ளூர்விவசாயிகள்மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகளுடனும், மாவட்ட அலுவலர்களுடனும் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தது.

மேற்கண்ட குழுவினரின் ஆய்வு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட வறட்சி தொடர்பான அறிக்கைகளின் அடிப்படையில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் நெற்பயிர் உள்ளிட்ட பயிர் வகைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், டெல்டா அல்லாத மாவட்டங்களில்பாதிக்கப்பட்டவிவசாயிகளுக்கானசலுகைகளை நான் இந்த மாமன்றத்தில் அறிவிக்க விழைகின்றேன்.

1. மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். எனினும், 50 விழுக்காட்டிற்கு மேல் நெற்பயிர் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 5,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் நெற்பயிர் மகசூல் பாதித்துள்ள சுமார் 6,25,481 விவசாயிகளின் 6,25,786 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 5,000/– ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு 312 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் காப்பீட்டு நிவாரணத் தொகையை பொறுத்த வரையில், டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை அரசே செலுத்தியதால், முழு நிவாரணத் தொகையை முன்கூட்டியே தமிழக அரசு வழங்கியது. இந்தத் தொகை பின்னர் காப்பீட்டு நிறுவனங்களால் அரசு கணக்கில் செலுத்தப்படும். டெல்டா அல்லாத இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் காப்பீட்டுத் தொகையை நேரடியாக வழங்கும்.

3. பாசன ஆதாரமுள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொறுத்த வரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, பாசன ஆதாரமுள்ள நிலங்களில் நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத பயிர்களை சாகுபடி செய்து 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள சுமார் 1,01,802 விவசாயிகளின் 1,25,386 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 50 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

4. பாசன ஆதாரமற்ற நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களைப் பொறுத்த வரையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு

மாநில பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர் ஒன்றுக்கு **1,215** ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு **3,000/–** ரூபாய் என உயர்த்தி வழங்கப்படும். இதன்படி, பாசன ஆதாரமற்ற நிலங்களில் நெற்பயிர், நீண்டகால மற்றும் மல்பெரி அல்லாத இதர பயிர்களை சாகுபடி செய்து **50** விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள **10,05,549** விவசாயிகளின் **14,14,126** ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு **3,000** ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதனால் அரசுக்கு **424** கோடியே **24** இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

5. தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைப்படி **50** விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு **3,239** ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு **4,000** ரூபாய் வழங்கப்படும். இதன்படி **50** விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள தென்னை உள்ளிட்ட நீண்ட கால பயிர்களை சாகுபடி செய்த **50,908** விவசாயிகளின் **1,08,383** ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு **4,000** ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு **43** கோடியே **35** இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

6. இதே போன்று, மல்பெரி, அதாவது முசுக்கொட்டை சாகுபடி செய்து **50** விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் பேரிடர் நிவாரண வரையறைப்படி ஏக்கர்

ஒன்றுக்கு 1,296 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும், தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் வழங்கப்படும். இதன்படி 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் பாதித்துள்ள மல்பெரி சாகுபடி செய்த 10,602 விவசாயிகளின் 15,262 ஏக்கர் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 3,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு 4 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

7. மொத்தத்தில், தமிழகத்தில் டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் வறட்சியால் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ள 17,94,342 விவசாயிகளுக்கு 835 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும்.

8. இது தவிர, வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவன பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், டெல்டா அல்லாத ஏனைய மாவட்டங்களில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக 6 கோடியே 25 இலட்சம் ரூபாய்க்கு பசுந்தீவனம், 18 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு உலர்தீவனம் என 24 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

9. வறட்சி காரணமாக டெல்டா அல்லாத ஏனைய பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், முதல் கட்டமாக 40 கோடி ரூபாய் மதிப்பில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் நகராட்சிகளிலும், 20 கோடி ரூபாய் மதிப்பில் பேரூராட்சிகளிலும், 40 கோடி ரூபாய் மதிப்பில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மூலம் கிராமப் புறங்களிலும், 25 கோடி ரூபாய்

மதிப்பில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் மூலம் சென்னையிலும், 20 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும், ஆக மொத்தம் 145 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக 750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50,000 பண்ணைக் குட்டைகள் டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில் அமைக்கப்படும்.

டெல்டா அல்லாத இதர மாவட்டங்களுக்கென தற்போது 1,754 கோடியே 86 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண உதவிகளை நான் அறிவித்துள்ளேன். இந்தியாவிலேயே வறட்சிக்காக நிவாரண உதவிகள் வழங்கப்படுவது இதுதான் முதன்முறை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இதுவன்றி, வறட்சி கோரிக்கை மனு, அதாவது Drought Memorandum ஒன்று மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பப்படும். இந்த வறட்சி கோரிக்கை மனுவில், வேளாண்மைத் துறையில் உற்பத்தி இழப்பு ஏற்பட்டதற்காக 9,286 கோடியே 20 இலட்சம் ரூபாய்; விவசாயிகள் பெற்ற கூட்டுறவு கடன்களை மாற்றியமைத்த வகையில் கூட்டுறவு துறைக்கு 182 கோடியே 10 இலட்சம் ரூபாய்; விவசாயிகளுக்கு பயிரிழப்பு நிவாரணம் வழங்கிய வகையில் மாநில அரசுக்கு ஏற்பட்ட செலவினத்திற்காக 1,376 கோடியே 71 இலட்சம் ரூபாய்; வேளாண்மை தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களுக்காக 2,424 கோடியே 47 இலட்சம் ரூபாய்; தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இழப்பீடாக 2,661 கோடியே 32 இலட்சம் ரூபாய்; வனவிலங்குகளை பாதுகாப்பதற்காக 5 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் பணிகளுக்காக 1,195 கோடியே

79 இலட்சம் ரூபாய்; கால்நடை பராமரிப்பு துறைக்கென 247 கோடியே 16 இலட்சம் ரூபாய்; பண்ணை குட்டை மீன் வளர்ப்புக்கென 12 கோடியே 47 இலட்சம் ரூபாய்; பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பிற்கென 1,390 கோடியே 31 இலட்சம் ரூபாய்; ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட மையங்கள் மற்றும் சத்துணவு மையங்களில் உள்ள குழந்தைகளுக்கு கூடுதல் சத்துணவு வழங்க 333 கோடியே 60 இலட்சம் ரூபாய்; பொது விநியோகத் திட்டத்திற்கென 7.92 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் 550 கோடி ரூபாய்; என மொத்தம் 19,665 கோடியே 13 இலட்சம் ரூபாய்க்கான நிவாரண கோரிக்கைகள் அடங்கும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்களுக்கு வட்டிச் சலுகை திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிப்பு - 22.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் ஏழை, எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான வீட்டு வசதியை பூர்த்தி செய்வதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது.

இந்த வீட்டு வசதி இணையம், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 619 நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மற்றும் 197 வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டத் தேவைப்படும் நிதி உதவியை மாநில அரசின் பொறுப்புறுதியின் பேரில் ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளிடம் இருந்து பெற்று வழங்கி வந்தது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் செலுத்த வேண்டிய தொகை அரசு அளித்துள்ள பொறுப்புறுதியின் பேரில் அரசே தவணைத் தொகையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை தவிர்க்கும் பொருட்டு, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் கடன் வசூல் செய்யப்படும் தொகை முழுவதும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும், கடன்

வசூல் முன்னேற்றம் அடையும் வரையில் புதிய கடன் வழங்கக் கூடாது என்றும் 2009 ஆம் ஆண்டு தி.மு.க. அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன் காரணமாக, கடந்த நான்கு ஆண்டுகளாக கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் செயல்படாத நிலைக்கு தள்ளப்பட்டதோடு, நல்ல முறையில் செயல்படும் சங்கங்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாயின. பணியாளர்களுக்கு சம்பளம் கூட வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக புதிய கடன்கள் வழங்கப்படாததாலும், கடன் வசூல் பணி மட்டுமே நடைபெற்றதாலும் 1.9.2009 அன்று 2,136 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் கடன் நிலுவை தற்போது 1,280 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் பணியை மேம்படுத்தும் வகையில், 2012–2013 ஆம் நிதி ஆண்டில் வட்டி தள்ளுபடி சலுகைத் திட்டம் ஒன்றை எனது தலைமையிலான அரசு அறிமுகப்படுத்தியது. இதன்படி, கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள குறைந்த வருவாய் பிரிவினருக்கு 75 விழுக்காடு வட்டி தள்ளுபடியும், 100 விழுக்காடு அபராத வட்டி தள்ளுபடியும்; நடுத்தர வருவாய் பிரிவினருக்கு 50 விழுக்காடு வட்டி தள்ளுபடியும், 100 விழுக்காடு அபராத வட்டி தள்ளுபடியும்; உயர் வருவாய் பிரிவினருக்கு 25 விழுக்காடு வட்டி தள்ளுபடியும், 100 விழுக்காடு அபராத வட்டி தள்ளுபடியும் அளிக்கப்பட்டது. இந்தத் திட்டம் 31.3.2013 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 34,863 பயனாளிகள் 317 கோடியே 6 இலட்சம் ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெற்றுள்ளார்கள்.

இதில் அபராத வட்டித் தொகையான 196 கோடியே 26 இலட்சம் ரூபாயை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. வட்டித் தொகையான 120 கோடியே 80 இலட்சம் ரூபாயை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வட்டி தள்ளுபடி திட்டத்தின் மூலம் கடன் வசூல் 2 விழுக்காட்டிலிருந்து 32 விழுக்காடாக உயர்ந்துள்ளது. கடன் வசூலில் 699 சங்கங்கள் 50 விழுக்காடு வரையிலும், 45 சங்கங்கள் 51 விழுக்காடு முதல் 99 விழுக்காடு வரையிலும், 72 சங்கங்கள் 100 விழுக்காட்டினையும் எய்தியுள்ளன. வசூல் செய்த தொகை 354 கோடியே 44 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. 100 விழுக்காடு கடன் வசூல் எய்தியுள்ள 72 சங்கங்கள் மீண்டும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

31.3.2013–இல் தவணை தவறிய உறுப்பினர்கள் 88,356 பேர் உள்ளனர். இவர்களிடமிருந்து தவணை தவறிய அசலாக 633 கோடியே 73 இலட்சம் ரூபாய், வட்டியாக 673 கோடியே 67 இலட்சம் ரூபாய், அபராத வட்டியாக 543 கோடியே 10 இலட்சம் ரூபாய் என மொத்தம் 1,850 கோடியே 50 இலட்சம் ரூபாய் வசூலிக்க வேண்டியுள்ளது.

கூட்டுறவு வீட்டு வசதி சங்க உறுப்பினர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 31.3.2013 வரை வழங்கப்பட்ட வட்டி சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வட்டிச் சலுகை திட்டத்திற்கு நடப்பாண்டில் 269 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும். இந்த வட்டி சலுகை காரணமாக எஞ்சியுள்ள 744 சங்கங்களும் விரைவில் உறுப்பினர்களுக்கு கடன் வழங்க வழிவகை ஏற்படும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் அதற்கான தவணைத் தொகையை சரிவர செலுத்தாததன் காரணமாக வட்டி, அபராத வட்டி ஆகியவை சேர்ந்து அவர்கள் செலுத்த வேண்டிய தொகை அதிகரித்தது. இவர்களுக்கும் வட்டிச் சலுகை அளிக்கும் விதத்தில் மாதத் தவணைக்கான அபராத வட்டி தள்ளுபடி, வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி தள்ளுபடி, நிலத்திற்கான இறுதி நிலை வித்தியாசத் தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 மாத வட்டி தள்ளுபடி, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கு விலையில் நடைமுறையில் உள்ள 10 விழுக்காடு தொகைக்கு மட்டும் வட்டி வசூலிக்க ஆணை என பல்வேறு சலுகைகள் 28.9.2012 முதல் 27.3.2013 வரை அளிக்கப்பட்டன. இதன் மூலம், 6,730 ஒதுக்கீட்டாளர்கள் பயனடைந்தனர். இவர்கள் அனைவருக்கும் கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுவிட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து 150 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. இன்னமும் கிரயப் பத்திரம் வழங்கப்படாமல் உள்ள 45,939 ஒதுக்கீட்டாளர்கள் பயன்பெறும் வகையில், இந்த வட்டிச் சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் தமிழக அரசின் நடவடிக்கைகளால் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை, எளிய, நடுத்தர மக்களின் கடன் சுமை குறையும் என்பதையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு கிரயப் பத்திரம் கிடைக்க வழிவகுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தமிழகம் விரைவில் மின்மிகை மாநிலமாக மாறும் ! - 25.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் வளர்ச்சிக்கும், தொழில் மேம்பாட்டிற்கும், இளைய சமுதாயத்தினர் முன்னேற்றம் அடைவதற்கும் முக்கிய காரணியாக விளங்குவது மாறி வரும் இன்றைய நவீன வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருக்கும் மின்சாரம் என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த மின்சாரத்தின் தேவை தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டே செல்வதைகருத்தில்கொண்டு,தமிழகத்தைமின்மிகைமாநிலமாக மீண்டும் மாற்றிட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன், மின் உற்பத்தியைபெருக்குதல்,மின்கட்டமைப்புகளைவலுப்படுத்துதல், மின் தொடரமைப்புகளை நிறுவுதல், மின் அனுப்புகை மற்றும் மின் பகிர்மானத்தை விரிவாக்குதல் ஆகிய பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

எனது அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் **606.5** மெகாவாட் அளவுக்கான மின் உற்பத்தி திறன் கூடுதலாக சேர்க்கப்பட்டு உள்ளது. நான் ஏற்கெனவே அறிவித்திருந்தபடி, மேட்டூர் அனல் மின் நிலையம், வடசென்னை அனல் மின் நிலைய இரண்டாவது நிலையின் முதல் அலகு மற்றும் வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் இரண்டாவது அலகு ஆகிய புதிய மின் உற்பத்தி நிலையங்கள் முழு உற்பத்தி திறனை எட்டும் நிலையில் உள்ளன.

வட சென்னை அனல் மின் திட்டத்தின் அடுத்த அலகு மே மாதம் முதல் தனது உற்பத்தியை தொடங்க உள்ளது. வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் மூன்றாவது அலகு வருகின்ற அக்டோபர் மாதம் முதல் தனது உற்பத்தியை தொடங்க உள்ளது. தூத்துக்குடி கூட்டு மின் திட்டத்தின் 500 மெகாவாட் திறன் கொண்ட இரு அலகுகள் முறையே வருகின்ற டிசம்பர் மற்றும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் உற்பத்தியை தொடங்க உள்ளன.

இது மட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே அறிவித்தபடி 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் அமைப்பதற்கான சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. 2 x 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மையத் திட்டம் மற்றும் 2x660 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் திட்டம் ஆகியவற்றிற்கான ஒப்பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டுள்ளன. ராமநாதபுரம் மாவட்டம் உப்பூரில் 2 x 800 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் அமைக்கப் படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்சார உற்பத்தியில் தன்னிறைவு பெற்றால் தான் தமிழகம் தலை சிறந்த மாநிலமாக விளங்க முடியும் என்பதை நன்கு உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு, அதனை எய்தும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள மின் திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் உருவாக்கப்படும். இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும்.

முதற்கட்டமாக, குந்தா நதியின் துணை நதியான சில்லஹல்லா ஆற்றின் குறுக்கே, 90.8 மீட்டர் உயரத்திற்கு 2.25 டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட ‘சில்லஹல்லா மேல் நீர்த்தேக்கம்’ நிறுவப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ள 5.5 டி.எம்.சி அடி கொள்ளவு கொண்ட அவலாஞ்சி–எமரால்டு நீர்த்தேக்கங்களுடன் இணைக்கப்படும். இதனை இணைப்பதற்காக 2750 மீட்டர் நீளமுடைய சுரங்க நீர்வழித் தடம் Tunnel அமைக்கப்படும்.

இரண்டாவது கட்டமாக, உத்தேசிக்கப்பட்டுள்ள சில்லஹல்லா நீர்த் தேக்கத்திற்கும், பில்லூர் நீர்தேக்கத்திற்கும் இடையே உள்ள 1,500 மீட்டர் உயரத்தைப் பயன்படுத்தி 2,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக் கூடிய மின் நிலையம் அமைக்கப்படும்.

இந்த மின் நிலையம் நிலத்தடி மின் நிலையமாக, அதாவது Underground Power Station ஆக அமையும். மின் உற்பத்திக்குப் பின் உபயோகப்படுத்தப்பட்ட நீர், கடைவாயில் சுரங்கம், அதாவது Tailrace Tunnel வழியாக பில்லூார் நீர்த்தேக்கத்தை அடையும். நிலத்தடி மின் நிலையத்தை அடைய அணுகு சுரங்க வழி, அதாவது Approach Tunnel அமைக்கப்படும். இத்திட்டம் நிறைவு பெற சுமார் 8 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

மேலும் இத்திட்டம், அதிகரித்து வரும் காற்றாலை மின் உற்பத்தி, நிறுவப்படவுள்ள சூரிய மின் உற்பத்தி மற்றும் இரவு நேரங்களில் அனல் மற்றும் அணு மின் நிலையங்களில் மிகையாகக் கிடைக்கப் பெறும் மின்சாரத்தை சேமித்து வைக்கும் விதமாக, இந்த உபரி மின்சாரத்தைப் பயன்படுத்தி கீழ் நீர்த் தேக்கத்திலிருந்து மேல் நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏற்றி வைக்கப்படும். அவ்வாறு ஏற்றித் தேக்கப்பட்ட நீரையே பயன்படுத்தி உச்ச மின் தேவை காலங்களில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படும்.

மின்சாரத்தை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது, மின் விநியோகமும் சீராக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டின் மின் கட்டமைப்பையும், தொடரமைப்பையும் வலுப்படுத்த 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருதிட்டம்தயாரிக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தினைசெயல்படுத்த ஜப்பானிய நிறுவனம் 3,572 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கும். இந்தக் கடன் சிறப்பினமாகக் கருதப்பட்டு ஆண்டு ஒன்றிற்கு 0.55 சதவீத சலுகை வட்டியைக் கொண்டிருக்கும். மேலும் இந்தக் கடன் தொகையை, கடன் பெற்ற 10 ஆண்டுகள் கழித்து 20 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தலாம். இதன் மூலம் மாநிலத்தின், குறிப்பாக சென்னையின் மின் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு சீரான மின் விநியோகம் உறுதிபடுத்தப்படும்.

ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவி மூலம், 2,750 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 புதிய 400 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் மற்றும் அதற்குரிய மின்தொடர் பாதைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இந்தப் புதிய மின் நிலையங்கள் சென்னையில் கிண்டி, கொரட்டூர், மணலி மற்றும் ஒட்டியம் பாக்கத்திலும், கோவையில் காரமடையிலும் அமைக்கப்படும்.

இது மட்டுமல்லாமல், 822 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட 14 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தத் துணை மின் நிலையங்கள் சென்னையில் ஆலந்தூர், அம்பத்தூர் மூன்றாவது பிரதான சாலை, சென்னை சென்ட்ரல், ராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மின்சார வாரியத் தலைமை அகம் ஆகிய இடங்களிலும்; திருப்பூர் மாவட்டம் திருப்பூர் மற்றும் கருவலூர்; மதுரை மாவட்டம் கிண்ணிமங்கலம்; தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம்; அரியலூர் மாவட்டம் பொய்யூர்; திருவண்ணாமலை மாவட்டம் புரிசை; விருதுநகர்

மாவட்டம் சவ்வாஷ்புரம்; ஈரோடு மாவட்டம் செண்பகபுதூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.

தென் மாநிலங்களுக்கு இடையே மின் பகிர்மாற்றம் செய்யும் வகையில் வேலூர் மாவட்டம் திருவலத்தில் 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட ஒரு புதிய துணை மின் நிலையம் இந்திய மின் தொடரமைப்பு நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி, பிற மாநிலங்களிலிருந்து அதிக அளவு மின்சாரத்தை பெற ஏதுவாக, திருவலத்தில் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும் அதற்கான மின் தொடர்களும் அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு துவங்கப்படும்.

காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை வெளிக் கொணர்ந்து அதனை மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கோ, இந்த வகை மின்சாரம் அதிக அளவில் உற்பத்தியாகும் நேரங்களில் உபரி மின்சாரத்தை செலுத்தும் வகையிலோ, தேவையான மின் தொடரமைப்பு இல்லாத காரணத்தால் இந்த மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இந்தக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில், மாநிலத்தின் தென் பகுதியில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்தும் விதத்தில் 2,300 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறிலிருந்து சென்னைக்கு 1,488 சுற்று கிலோ மீட்டர் நீளத்திற்கு 400 கிலோ வோல்ட் மின் தொடர்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதே போன்று, 1,230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவை, உடுமலைப்பேட்டை மற்றும் தேனி பகுதிகளில் உற்பத்தியாகும் காற்றாலை மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வகையில் தேனி மாவட்டத்தில் தப்பகுண்டு, மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆனைக்கடவு மற்றும் ராசிபாளையம் ஆகிய இடங்களில் புதிய 400 கிலோ வோல்ட் திறன்

கொண்ட துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளும், அவற்றை இணைத்து 788 சுற்று கிலோ மீட்டர் நீளமுடைய 400 கிலோ வோல்ட் மின்தொடர் பாதை அமைக்கும் பணிகளும் தொடங்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், கானார்பட்டியில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மற்றுமொரு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

இது மட்டுமன்றி, காஞ்சிபுரம் மாவட்டம் ஒமேகா தொழிற்பூங்கா, திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு ஆகிய இரண்டு இடங்களில் புதிய 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும்; சென்னை கோடம்பாக்கம் மற்றும் திருமங்கலம் தெற்கு;திண்டுக்கல்மாவட்டம்ஏழுவானம்பட்டி மற்றும்பாப்பம்பட்டி; கோயம்புத்தூர் மாவட்டம் குரு நல்லிபாளையம்; புதுக்கோட்டை மாவட்டம் மழையூர்; திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம், நாங்குநேரி, மேலக்கல்லூர் மற்றும் பழையபேட்டை; வேலூர் மாவட்டம் முகுந்த ராயபுரம்; காஞ்சிபுரம் மாவட்டம் ஒமேகா தொழிற் பூங்கா, பெரும்பாக்கம் மற்றும் புதுத் தாங்கல்; கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி; தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம்; ஈரோடு மாவட்டம் தாளவாடி; திருவண்ணாமலை மாவட்டம் விண்ணவனூர் மற்றும் வேலூர் ஆகிய 19 இடங்களில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும்; ஈரோடு மாவட்டம் சிமிட்டஹள்ளி; கரூர் மாவட்டம் இ. கருங்கல்பட்டி மற்றும் செல்லிவலசு; தஞ்சாவூர் மாவட்டம் குருவிக்கரம்பை; காஞ்சிபுரம் மாவட்டம் இளையனூர் வேலூர், மேலபுடி மற்றும் இராமாபுரம்; திருநெல்வேலி மாவட்டம் நக்கல முத்தான்பட்டி; பெரம்பலூர் மாவட்டம் பென்னகோணம்; திருச்சி மாவட்டம் டி. ஆலை; தருமபுரி மாவட்டம் வி. முத்தாம்பட்டி ஆகிய இடங்களில் 11 புதிய 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும் அமைப்பதற்கான பணிகள் இந்த ஆண்டு துவங்கப்படும்.

மொத்தத்தில், இந்த ஆண்டு 400 கிலோவோல்ட் திறன் கொண்ட 10 துணை மின் நிலையங்கள், 230 கிலோவோல்ட் திறன் கொண்ட 16 துணை மின் நிலையங்கள், 110 கிலோவோல்ட் திறன் கொண்ட 19 துணை மின் நிலையங்கள் மற்றும் 33 கிலோவோல்ட் திறன் கொண்ட 11 துணைமின் நிலையங்கள் என மொத்தம் 56 துணை மின் நிலையங்கள் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

புதிய மின் உற்பத்தி நிலையங்களை இயக்கி வைத்தல், புதிய மின் திட்டங்களைத் தொடங்குதல் மட்டுமல்லாது, பற்றாக்குறையை 85 சதவீதம் வரை ஈடு செய்யும் வகையில், நீண்ட கால அடிப்படையிலான ஒப்பந்தப் புள்ளிகள், அதாவது Case-1 bidding மூலம் மின் கொள்முதல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில் முதல் கட்டமாக வருகின்ற அக்டோபர் மாதம் முதல் நீண்ட கால அடிப்படையில் 15 ஆண்டுகளுக்கு 1,000 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்படும்.

புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் துறையைப் பொறுத்த வரையில், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில் 7,140 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு முன்னிலையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மூன்றாண்டுகளில் 3,000 மெகாவாட் அளவிற்கு சூரிய ஒளி மூலம் மின் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் நிலையங்கள் நிறுவப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தேன். சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதை ஒரு மக்கள் இயக்கமாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. வீட்டு மின் உபயோகிப்பாளர்கள் வீட்டு மேற்கூரையில் சூரிய ஒளி மின் உற்பத்திச் சாதனங்களைப் பொருத்தி மின் உற்பத்தி

செய்வதன் மூலம் அதிக அளவில் மின்சார உற்பத்தி இலக்கை அடைய முடியும் என கண்டறிந்தேன். இதனை ஊக்குவித்து பெரும்பாலான வீட்டு மின் உபயோகிப்பாளர்கள் முன் வந்து இச்சாதனங்களைப் பொருத்தும் வகையில் அத்தகைய வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வழங்கி வரும் 30 சதவீத மானியத்துடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் உற்பத்திச் சார்ந்த ஊக்கத் தொகையும் வழங்க ஆணையிட்டிருந்தேன். இதன்படி, இந்த வீட்டுக் கூரை மின் உற்பத்திச் சாதனங்கள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றிற்கு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு ரூபாயும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு ரூபாயும், மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு 50 பைசாவும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என அறிவித்து இருந்தேன். தற்போது தமிழக அரசின் சார்பில் முதலீட்டு மானியம் வழங்குமாறு கோரிக்கைகள் வந்துள்ளதை ஏற்று, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள உற்பத்திச் சார்ந்த ஊக்கத் தொகை அல்லது கிலோவாட் ஒன்றிற்கு 20,000 ரூபாய் முதலீட்டு மானியம் மேற் கூரையில் சாதனங்களைப் பொருத்தி மின் உற்பத்தி செய்யும் வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் முதல் கட்டமாக 10,000 வீட்டு மின் நுகர்வோர் பயன் பெறுவர்.

தமிழ்நாடு மின் வாரியத்தில் ஏறத்தாழ 2.2 இலட்சம் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 10 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மின் நுகர்வோர்களுக்கு சீரான மின்சாரம் வழங்கவும், புதிய பயனீட்டாளர்களுக்கு தாமதமின்றி மின் இணைப்புகள் வழங்கிடவும், பழுதான மின்மாற்றிகளை மாற்றிடவும் புதிய மின் மாற்றிகளை கொள்முதல் செய்தல் மிகவும் அவசியமாகிறது.

இதுவரை ஆண்டொன்றிற்கு சராசரியாக 10,000 மின்மாற்றிகளுக்கும் குறைவாகவே வாங்கப்பட்டு வந்துள்ளது. மின் மாற்றிகள் பற்றாக்குறை காரணமாக மின் நுகர்வோர்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாவதாக அறிகிறேன். இதனைக் களையும் பொருட்டு இதுவரை இல்லாத அளவாக 500 கோடி ரூபாய் செலவில் 20,000 புதிய மின் மாற்றிகள் கொள்முதல் செய்யப்படும்.

மின்சாரத்திற்கானத் தேவை அதிகரித்து வரும் நிலையில் நுகர்வோர்களுக்கு சீரான மின்சாரத்தை உறுதி செய்யும் பொருட்டு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித் தடங்கள் அமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த ஆண்டு 850 கோடி ரூபாய் செலவில் 15,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித் தடங்கள் அமைக்கப்படும்.

இந்தியாவிலேயே 100 சதவீதம் மின் வசதி, அதாவது 100% Electrification பெற்றுள்ள ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாக உள்ளது. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 2 கோடியே 40 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. தாமதமின்றி உடனுக்குடன் மின் இணைப்பு வழங்கும் விதமாக இந்த ஆண்டு வீட்டு மின் இணைப்பு, விவசாய மின் இணைப்பு, வணிக மின் இணைப்பு, தொழிற்சாலை மின் இணைப்பு போன்ற 11 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் மூலம், தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும் என்பதோடு, மின் நுகர்வோருக்கு தடையற்ற சீரான மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# வண்டலூரில் புதிய புறநகர் பேருந்து நிலையம் - 30.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகர மக்கள் தொகை பெருக்கம், அதிகரித்து வரும் வெளி மாநில மற்றும் பிற மாவட்ட மக்களின் புழக்கம், பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வண்ணம் பேருந்து நிலையங்கள், சாலைகள், பாலங்கள் ஆகியவற்றை அமைப்பதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரில் நிலவி வரும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் கோயம்பேட்டில் சென்னை புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் பேருந்து நிலையத்தில் ஒரே நேரத்தில் 180 பேருந்துகள் இயங்கவும், மேலும் 60 இயக்கத்தில் இல்லாத பேருந்துகளை நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டு காலத்தில் இந்தப் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தற்போது, தென் மாவட்டங்களுக்குச் செல்லும் 1,250 பேருந்துகள் உட்பட மொத்தம் 2,100 பேருந்துகள் தினம் சுமார் 2,900 தடவை இயக்கப்பட்டு வருகின்றன. இடப் பற்றாக்குறை காரணமாக இந்தப் பேருந்து

நிலையத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கான பணி மனைகள் அமைக்கப்படவில்லை. இதன் காரணமாக பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகள் நாள் முழுவதும் பேருந்து இயக்குமிடம் மற்றும் சாலை ஓரங்களிலேயே நிறுத்தப்படுவதால் பேருந்துகள் நிலையத்திலிருந்து வெளியே செல்ல நீண்ட நேரமாகின்றது. பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் பயணிகளின் வசதிக்காக அதிக அளவிலான பேருந்துகள் இயக்கப்படுவதால் பேருந்து நிலையத்திற்குள்ளும், சுற்றுப் பகுதிகளில் உள்ள முக்கிய சாலைப் பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

சென்னை புறநகர் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ஒப்பந்த பேருந்துகளுக்கான பேருந்து நிலையம், கோயம்பேடு மொத்த விற்பனை வணிக வளாகம் ஆகியவையும் போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இதன் காரணமாக, வாகனங்கள் செல்லும் வேகம் மணிக்கு 10 கிலோ மீட்டர் என்ற நிலையில் உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்டு வரும் மொத்த உணவு தானிய அங்காடி மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்கள் திறக்கப்பட்டால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகரிக்கும்.

கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் கருத்தில் கொண்டும், இங்கிருந்து செல்லும் பேருந்துகளில் பாதிக்கு மேல் தென் மாவட்டங்களுக்கு செல்பவையாக இருப்பதைக் கருத்தில் கொண்டும், தென் மாவட்டங்களிலிருந்து வந்து செல்லும் பேருந்துகளுக்கென தெற்கத்திய பெருஞ்சாலை மற்றும் வெளி வட்டச்சாலை ஆகியவற்றிற்கு இடையே வண்டலூர் – வாலாஜாபாத் மாநில

நெடுஞ்சாலையை ஒட்டி வண்டலூர் ரயில் நிலையத்திற்கு அருகில் ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வண்டலூரில் புதியதாக உருவாக்கப்படும் இந்த புறநகர் பேருந்து நிலையத்தில், புறநகர் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், மாநகரப் பேருந்துகளை இயக்குவதற்கான இடம், வாகனங்கள் நிறுத்துவதற்கு தேவையான இடம், போக்குவரத்து பணிமனை வசதிகள், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பொதுமக்களுக்கு தேவையான உணவகங்கள், சிறு கடைகள், பொது கழிப்பிட வசதி ஆகிய எல்லா வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும்.

இத்திட்டத்தின் மூலம் கோயம்பேட்டின் தற்போதைய நெரிசல் விலகி பயணிகள் எளிதாகவும், வசதியாகவும், விரைவாகவும் பயணிக்க வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# ரூ.16,350 கோடி மதிப்பீட்டில் மின் திட்டங்கள் - 30.4.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சார உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவை எய்தும் வகையில் புதிய பல்வேறு மின் திட்டங்களின் விவரங்களை 25.4.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் நான் அறிவித்தேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை பல்வேறு நாளிதழ்களில் வெவ்வேறு விதமாக வெளி வந்துள்ளன. எனவே, புதிய திட்டங்களின் மொத்த மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதை தமிழக மக்கள் சரியாக அறிந்து கொள்ளும் வகையில், கீழ்க்காணும் விவரங்களை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவிக்க விழைகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 2,000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்;

400 கிலோ வோல்ட் திறன் கொண்ட 10 துணை மின் நிலையங்கள், 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட 16 துணை மின் நிலையங்கள், 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட 19 துணை மின் நிலையங்கள், 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட 11 துணை

மின் நிலையங்கள் என 56 துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள் அமைக்கும் திட்டம் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்;

20,000 புதிய மின் மாற்றிகள் அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; 15,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிய உயர்வழுத்த மற்றும் தாழ்வழுத்த மின் வழித்தடங்கள் அமைக்கும் திட்டம் 850 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படும் என்று நான் அறிவித்து இருந்தேன்.

மொத்தத்தில், 16,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்காணும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்ற விளக்கத்தை நான் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு அரசு ஊழியர்கள் அகவிலைப்படி உயர்வு! - 2.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் இடையே பாலமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள். ஒரு மனிதனை மனிதன் என்று அடையாளப்படுத்தும் கல்வியையும், ஒழுக்கத்தையும் போதிக்கும் சேவைப் பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பணியினை மேற்கொள்ளும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களை ஊக்கப்படுத்தும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை 1.1.2013 முதல் அவர்களுடைய அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் எட்டு விழுக்காடு உயர்த்தி, தற்போதுள்ள 72 விழுக்காடிலிருந்து 80 விழுக்காடாக வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது போல், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப்படியையும், அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் எட்டு விழுக்காடு உயர்த்திட நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அகவிலைப்படி உயர்வு உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள்; ஆசிரியர்கள்; வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள்; அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள்; ஊராட்சி உதவியாளர்; எழுத்தர்; ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி 1.1.2013 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,639 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# 1,000 வருவாய் கிராமங்களில் 97 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 2 கோடி மரக்கன்றுகள் - 2.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டின் வளம் காட்டு வளத்தில் அடங்கியுள்ளது என்பதையும் காடுகளின் வளர்ச்சியால் மனித இனம் நன்மை அடைகிறது என்பதையும் உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு காடுகளை கண் போல் காக்கும் கடமையினை கண்ணும் கருத்துமாக ஆற்றி வருகிறது.

அந்த வகையில், வளம் மிக்க தமிழ்நாட்டின் வன வளங்களை வலுப்படுத்தும் வகையில், தமிழ்நாடு பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தினை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியுடன் 686 கோடி ரூபாய் செலவில் 2011–2012 முதல் எனது தலைமையிலான அரசு தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது 10 வன உயிரின சரணாலயங்கள் உள்ளன. நாட்டிற்கு அழகையும், பொலிவையும் தரக் கூடியதும், மக்களுக்கு மிகுந்த பயனைத் தரக் கூடியதுமான வன விலங்குகளையும், பறவைகளையும் பாதுகாக்க மேலும் சரணாலயங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, 2013–2014 ஆம் ஆண்டில் மாநிலத்தில் வன உயிரினங்கள் அதிகமாக வாழும் பகுதிகளை இணைத்து புதிதாக நான்கு வன உயிரின சரணாலயங்களை ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள பகுதிகளை உள்ளடக்கி காவேரி வன உயிரின சரணாலயம், திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கைகொண்டான் புள்ளிமான் உயிரின சரணாலயம், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள பகுதிகளை உள்ளடக்கி கோடியக்கரை வன உயிரின சரணாலயம் மற்றும் திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் உள்ள பகுதிகளை உள்ளடக்கி கொடைக்கானல் வன உயிரின சரணாலயம் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டை பசுமையாக்கும் வகையில், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் ஆண்டில் 1,000 வருவாய் கிராமங்களில் தனியார் தரிசு நிலங்கள் மற்றும் விவசாய நிலங்களில் ஊடு பயிர்களாக 97 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் 2 கோடி மரக் கன்றுகள் நடப்படும்.

மேலும், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் கடன் தொகையில் எஞ்சியுள்ள 107 கோடியே 96 இலட்சம் ரூபாயினை பயன்படுத்தி, தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம் நிலை–2 பணிகளை 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ள திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், கூட்டு வன நிர்வாக அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள பயன்களை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் வகையிலும், ஏற்படுத்தப்பட்டுள்ள ஆதாரங்களை பராமரிக்கும் வகையிலும், கிராம வனக் குழு உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி, உள்கட்டமைப்பு மற்றும் அமைப்பு ரீதியான மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் வனங்களின் மேம்பாட்டிற்கும், வன வளங்களைப் பாதுகாக்கவும் பதின்மூன்றாவது நிதிக் குழுமம் 2010–2011ஆம் ஆண்டு முதல் 2014–2015 ஆம் ஆண்டு

வரையிலான காலத்திற்கு 142 கோடியே 48 இலட்சம் ரூபாயை மானியமாக வழங்கிட பரிந்துரை செய்துள்ளது. இந்த நிதியினைக் கொண்டு, நடப்பாண்டில் 35 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வன பராமரிப்பு பணிகளான உயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் தீத்தடுப்பு மேலாண்மை, உள்கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் காடு வளர்ப்பு மற்றும் கூட்டு வன மேலாண்மையினைப் பலப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இது மட்டுமல்லாமல், வனப் பகுதிகளிலிருந்து வெளியேறி மனித வாழ்விடங்கள் மற்றும் விவசாய நிலங்களில் யானைகளின் நடமாட்டத்தினைக் கட்டுப்படுத்த யானை புகா அகழிகள் ஏற்படுத்துவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே இதற்காக முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 4 கோடியே 30 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனது தலைமையிலான அரசால் ஒதுக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, தர்மபுரி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் யானைகள் தடுப்பு அகழிகள் அமைக்க 5 கோடியே 19 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக வால்பாறை பகுதியில் தடுப்பு குழிகள் அமைத்தல், எச்சரிக்கை மணி ஒலிக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், யானைகள் விரும்பி உண்ணும் பயிர்களை வளர்த்தல் போன்றவற்றிற்காக 2 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில், காட்டு யானைகளால் எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு 440 கிலோ மீட்டர் நீளத்திற்கு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் யானை புகா அகழிகள் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வனவளத்தைப்பாதுகாப்பதில்முக்கியப்பங்குவகிப்பவர்கள் வனப் பணியாளர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, 2011–2012 ஆம் ஆண்டில் வனப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் இடர்ப்படியினை காவல்துறை பணியாளர்களுக்கு இணையாக வழங்கும் வகையில், 60 ரூபாயாக வழங்கப்பட்டு வந்த இடர்ப்படியை 270 ரூபாயாக உயர்த்தி எனது தலைமையிலான அரசு வழங்கியது. இது மட்டுமல்லாமல், காவல் சிறப்பு அங்காடித் திட்டம் வனத் துறை சீருடைப் பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. வனப் பணியாளர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், 2013–2014 ஆம் ஆண்டில் வனத் துறை பணியாளர்களுக்கு காவல் துறை பணியாளர்களுக்கு நிகராக, 2 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் சீருடை வழங்குதல், சலவைப்படி, இடர்ப்படி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் 5,600 வனப் பணியாளர்கள் பயன் அடைவார்கள்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் வனப் பகுதிகள் வளமாக்கப்படவும், வனப் பணியாளர்கள் வளர்ச்சியுறவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.50 கோடியில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் மறுசீரமைக்கும் திட்டம் - 2.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயம் நலமாக அமையவும் பிணியற்ற மக்கள் பெருகவும் நலமுள்ள மனிதனும், வளமுள்ள நாடும் உருவாகவும் இன்றியமையாததாக விளங்குவது சுற்றுச் சூழல் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச் சூழல் துறை மூலமாகவும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாகவும் முனைப்பான திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

ஏரிகளை மறு சீரமைப்பு செய்தல், சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் சிறப்புடன் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு விருதுகள் வழங்குதல் பிளாஸ்டிக் கழிவுகளை கணிசமான அளவு குறைக்கும் வகையில், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார் சாலைகள் அமைத்தல் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தினை குறைத்து அவற்றை மறுசுழற்சி செய்ய பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு, ஊரகப் பகுதிகளில் 1,255 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைப் பணிகளை மேற்கொள்வதற்காக, 2011–2012 மற்றும் 2012–2013 ஆம்

ஆண்டுகளில் **153** கோடியே **50** இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் **1,002** கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள சாலைப் பணிகள் விரைவில் முடிக்கப்பட உள்ளன. இந்த ஆண்டும் **1,000** கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நகரப் பகுதிகளை எடுத்துக் கொண்டால் **2011** ஆம் ஆண்டு **566** கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்க **153** கோடியே **61** இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. **2012–2013** ஆம் ஆண்டில் **499** கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்க **219.58** கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இந்தப் பணிகள் எல்லாம் தற்போது நடைபெற்று வருகின்றன. **2013–2014** ஆம் ஆண்டில் **100** கிலோ மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் **2011–2012** ஆம் ஆண்டில் **50** கோடி ரூபாய் செலவில் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி **446** கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் மறு சீரமைக்கப்பட்டன. **2012–2013** ஆம் ஆண்டில் **84** கோடியே **90** இலட்சம் ரூபாய் செலவில் **577.70** கிலோ மீட்டர் நீளத்திற்கு பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகளை மறு சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பிளாஸ்டிக் சாலைகளின் தரம் சிறந்ததாகவும், மேம்பட்டதாகவும் உள்ளதால் **2013–2014** ஆம் ஆண்டிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் **50** கோடி ரூபாய் செலவில் பிளாஸ்டிக் கழிவுகளை பயன்படுத்தி சாலைகள் மறு சீரமைக்கும் திட்டம்

செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் பிளாஸ்டிக் கழிவுகள் முறையாக மறு பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் சாலைகளின் தரமும் உயர்கிறது.

மேலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில் நுண்ணுயிரி மூலம் ஏரிகளில் உள்ள நீரினைத் தூய்மையாக்குதல் திட்டம், சோலை காடுகளில் உள்ள தாவரங்களை மறு உற்பத்தி செய்தல் திட்டம், உதகை ஏரிப் பாதுகாப்பு நிதி மற்றும் மன்னார் வளைகுடா உயிர்கோள் காப்பக அறக் கட்டளையின் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

சுற்றுச் சூழல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் துவங்கப்பட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 32 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 15 மாவட்ட ஆய்வகங்களுடன் தற்போது செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்திற்கான தலைமை அலுவலகம் மற்றும் அரும்பாக்கம், அம்பத்தூர், வேலூர், ஓசூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் மறைமலை நகர் ஆகிய 9 மாவட்ட அலுவலகங்கள் சொந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், சிவகங்கை, திண்டுக்கல், நாமக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் செயல்படும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட அலுவலகங்களுக்கு சொந்த அலுவலக கட்டடங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடந்த 30 ஆண்டுகளாக இயங்கி வரும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வசதி இதுவரை வழங்கப்படவில்லை என்பது எனது

கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அவர்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய பணியாளர்களுக்கு 2013–2014 ஆம் நிதியாண்டு முதல் வீட்டுக் கடன் வசதி ஏனைய அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் சுமார் 700 வாரிய பணியாளர்கள் பயன் அடைவார்கள்.

இந்த அறிவிப்புகள் மாசுத் தொல்லையை கட்டுப்படுத்தவும், மாசுக் கட்டுப்பாடு வாரியப் பணியாளர்களின் வீட்டு வசதி தேவையை பூர்த்தி செய்யவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

## வேளாண் உற்பத்தியை அதிகரிக்கவும், விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் ரூ.984 கோடியே 70 இலட்சம் மதிப்பில் திட்டங்கள் ! - 6.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதாரவளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புறமக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, உணவு தானிய உற்பத்தி 2011–2012 ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன் என்ற அளவினையும் கடந்து சாதனை படைத்தது. 10 இலட்சம் முதல் 100 இலட்சம் மெட்ரிக் டன் வரை உற்பத்தி உள்ள மாநிலங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ள மாநிலங்களிடையே உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தை பெற்றது. இதற்காக "கிரிஷி கர்மான் விருதும்" 2 கோடி ரூபாய் பரிசும் தமிழகத்திற்கு கிடைத்தது என்பதை இங்கு பெருமையுடன் நினைவுகூர விரும்புகிறேன்.

2012–2013 ஆம் ஆண்டில், பருவமழை பொய்த்து, கர்நாடகம் வஞ்சித்த நிலையிலும், சாகுபடி பாதிப்பை குறைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டன.

இந்தியாவிலேயே முதன் முறையாக வறட்சி காரணமாக 50 விழுக்காட்டிற்கு மேல் பயிர் பாதிப்பு ஏற்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போதிய மழை இல்லாத காலங்களிலும் பயிர்களுக்கு நீர் கிடைக்க வகை செய்யும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 15,000 பண்ணைக் குட்டைகளும், இதர மாவட்டங்களில் 55,000 பண்ணைக் குட்டைகளும் அமைக்கப்படும் என நான் அறிவித்துள்ளதன் அடிப்படையில் தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் கிடைக்கும் நீரை சிக்கனமாக சேமித்து சாகுபடி செய்ய டீசல் எஞ்ஜின்களுடன் கூடிய 700 மழை தூவுவான் மற்றும் நகரும் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புகள், அதாவது Rain gun and Mobile Sprinklers வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவை 57 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, 350 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு இரண்டு என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

குறைந்துவரும் சாகுபடிப்பரப்பினால், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் சூழ்நிலையை தீவிரமாக ஆராய்ந்த எனது தலைமையிலான அரசு, நடப்பாண்டில் 12,500 ஏக்கர் பரப்பிலுள்ள தரிசு நிலங்களை சீர்திருத்தி உரிய நீராதார அமைப்புகளையும் உருவாக்கும் வகையில், ஏக்கருக்கு 4,000 ரூபாய் பின்னேற்பு மானியமாகவும், உரிய முக்கிய இடுபொருட்களை மானிய விலையில் வழங்கி சாகுபடி பணிகளை மேற்கொள்ள ஒட்டுமொத்தமாக 7 கோடியே 20 இலட்சம் ரூபாயினையும் வழங்கும்.

உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு நிலையினை விரைந்து அடைய ஏதுவாக, உற்பத்தி இடைவெளியினை குறைக்கும் முன்னோடி திட்டங்களை

ஒருங்கிணைத்து விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் ஒன்றுகூடி விவசாயிகள் அளவிலான பயிர்த்திட்டம் தயாரிக்கப்படும். இதன் தொடர்ச்சியாக கிராம, வட்டார, மாவட்ட அளவில் நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கான 3 வகையான விரைவு திட்டங்கள் மூலம் நடப்பாண்டில் உணவு தானிய உற்பத்தியினை பெருக்க ‘‘விரைவுத் திட்ட அணுகுமுறை’’ செயல்படுத்தப்படும். இத்திட்ட அணுகுமுறையினை மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் சிறப்புடன் செயல்படுத்த திட்டநிதியாக 114 கோடியே 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

ஊட்டச் சத்துக்கள் பாதுகாப்பிற்கு, குறிப்பாக புரதச்சத்து தேவையினை ஈடுசெய்யும் வகையில், துவரை உற்பத்தி திறனை ‘‘துவரை நடவு செய்தல்’’ தொழில் நுட்பம் மூலம் அதிகரிக்கவும், இதற்காக 50,000 ஏக்கர் பரப்பில் துவரை நடவினை மேற்கொள்ளவும், இதில் 10,000 ஏக்கர் நடவு துவரைக்கு சொட்டு நீர்ப்பாசனம் அளிக்கவும் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனைச் செயல்படுத்த 55 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

கரும்பு உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில், நீடித்த நிலையான கரும்பு உற்பத்தி திட்டம் 50,000 ஏக்கர் பரப்பளவில் 275 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் சர்க்கரை ஆலைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை திட்டங்களுக்கான தரமான இடுபொருட்கள் உரிய தருணத்தில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், ‘‘சிறப்பு நோக்க அமைப்பு’’, அதாவது Special Purpose Vehicle ஒன்று தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையரகத்தில் ஏற்படுத்தப்படும். இதற்காக 1 கோடி ரூபாய் சமபங்கு தொகையும், வட்டியில்லா சுழல்நிதியாக 100 கோடி ரூபாயும், இதற்கான

உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த 11 கோடியே 49 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 112 கோடியே 49 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

வேளாண் தொழிலில் தொடர்ந்து வருமானம் இல்லாததன் காரணமாக வேளாண் அல்லாத பிறபணிகளுக்கு கிராமப்புற மக்கள் செல்வதால் சாகுபடி பணிகளை குறித்த காலத்தே மேற்கொள்ள இயலாத சூழ்நிலை நிலவுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண்மையை எந்திரமயமாக்கவும், கிராமப்புற இளைஞர்கள் மூலம் வேளாண் தொழில் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டிலும் 124 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படும்.

விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய, அது குறித்த தொழில்நுட்பங்களை பயிற்றுவிக்கவும், தரமான இடுபொருட்கள் வழங்கி அத்துடன் தரமான விரிவாக்க சேவை வழங்கவும் 28 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 50 வட்டாரங்களில் ‘‘விவசாயிகள் சேவை மையம்’’ ஏற்படுத்தவும், 5 ‘‘மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்ப ஆதார மையங்கள்’’ ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டக்கலை விளைபொருட்களின் உற்பத்தி பெருகவும், தோட்டக்கலை விவசாயிகட்கு நல்லவிலை கிடைக்கச் செய்யவும், தரமான விதை அல்லது நடவுக்கன்றுகள் வழங்குவதோடு விளை பொருட்களை ‘‘அச்சு மற்றும் ஆரம்’’ அதாவது, Hub and Spoke model அமைப்பில், 50 சேகரிப்பு மையங்களில் சேகரித்து சுத்தப்படுத்துதல், தரம்பிரிப்பு, வகைப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், 10 முன்னோடி சந்தைகளில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு

மின்னணு ஏல முறையில் விற்பனை இணைப்பு ஏற்படுத்தி தருதல், குளிர்பதன சேமிப்பு, ஏலமிடும் அறை, மதிப்புக் கூட்டுதல் உள்ளிட்ட வசதிகளையும் செயல்படுத்த 186 கோடியே 46 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், கோவை மாவட்டத்தில் இளநீருக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்றும், வாழை விவசாயிகளுக்கென திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைக்கான சிறப்பு வணிக வளாகம் ஒன்றும், பத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு அணுகுசாலை வசதிகளும், தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், 23 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தரப்படும்.

ஆக மொத்தம் 984 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் இன்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த திட்டங்கள், வேளாண் உற்பத்தி அதிகரிக்கவும், வேளாண் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# இந்தியாவிலேயே முதன்முறையாக ரூ.6.48 கோடியில் ஆதார செல் ஆராய்ச்சி மையம்! - 6.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலமற்ற கிராமப்புற விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் முதுகெலும்பாகவும், பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கக் கூடியதாகவும், கிராமப்புற பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாகவும் விளங்குவது கால்நடைகள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடை பராமரிப்புத் துறைக்கான அலுவலகக் கட்டடங்களின் பராமரிப்பு செலவிற்காகவும், புதிய கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பதற்காகவும், 2009–2010 மற்றும் 2010–2011 ஆகிய இரண்டு ஆண்டுகளில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், சுமார் 12 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள், கிராமப்புற ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் இணைந்த கால்நடை

பராமரிப்பு துறைக்கு 2 புதிய கால்நடை மருத்துவ கல்லூரிகளை நிர்மாணிக்கவும், புதியதாக 639 கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டவும், 882 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்களை சீரமைக்கவும், 12 மாவட்ட கால்நடை பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், எப்போதுமில்லாத அளவாக 274 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 385 கிளை நிலையங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டு உள்ளன. இந்த 385 ஊரக கால்நடை மருந்தகங்கள் மற்றும் முந்தைய அரசால் தரம் உயர்த்தப்பட்டு கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாமல் இருந்த 200 ஊரக கால்நடை மருந்தகங்கள் என மொத்தம் 585 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு ஏற்படவிருக்கும் நோய்களிலிருந்து அவற்றை காப்பாற்றி, அவைகள் ஆரோக்கியத்துடன் வாழ, தற்போது பயன்பாட்டில் உள்ள இதர மருத்துவ சிகிச்சை முறைகள் மூலம் குணப்படுத்த இயலாத நோய்களை குணப்படுத்தும் திறன் கொண்ட, ஆதார செல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மறு சீரமைப்பு மருத்துவம் என்ற ஒரு புதிய மருத்துவ முறை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய மருத்துவ முறை இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகத்தில் தான் செயல்படுத்தப்படுகிறது என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகம் முழுவதும் மருத்துவ சிகிச்சை முறையானது மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் பொதுவானதாகவே கருதப்பட்டு, “ஒற்றை சிகிச்சை கோட்பாடு” முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

‘‘ஸ்டெம் செல்’’ எனப்படும் ஆதார செல்கள் கால்நடைகள் மற்றும் மனிதர்களின் கரு முட்டை, எலும்பு மஜ்ஜை, தொப்புள் கொடி உதிரம் மற்றும் கொழுப்புத் திசு போன்றவற்றிலிருந்து பிரித்து எடுக்கப்படும் முதிர்வுறா நிலையில் இருக்கும் செல்கள் ஆகும். தகுந்த ஊட்டச் சத்துக்களை கொண்டு இத்தகைய ‘‘ஸ்டெம் செல்’’–களை ஆய்வகத்தில் வளர்க்கும் போது, அவை பயன்படுத்தப்படும் காரணிகளுக்கு ஏற்ப எலும்பு, நரம்பு, ஈரல், இதயம், சிறுநீரகம் மற்றும் ஏனைய திசுக்களாக வளரும் தன்மையை பெறுகின்றன.

மறு சீரமைப்பு மருத்துவம் அதாவது REGENERATIVE MEDICINE என்பது மூல ஆதார செல்கள் மற்றும் உடலுக்கு வெளியே வளர்க்கப்படும் செல்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் மருத்துவ முறையாகும். இம்மருத்துவ முறை மூலம், நடப்பு சிகிச்சை முறைகளால் குணப்படுத்த இயலாத பல நோய்களும் குணமடைய வாய்ப்பு உள்ளது. சிதைந்து போன உடல் உறுப்புகள் அல்லது திசுப் பகுதிகளை மீண்டும் வளர்ச்சி அடையச் செய்து, அவற்றை வழக்கம் போல் இயங்க வைப்பதே மறு சீரமைப்பு மருத்துவத்தின் நோக்கமாகும். மனிதர்கள் மற்றும் விலங்குகளின் நலத்தை பாதிக்கும் பல நோய்களுக்கு மறு சீரமைப்பு மருத்துவமே மாற்றாக அமையும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், அமெரிக்க நாட்டின் Michigan State University, Virginia – Maryland Regional College of Veterinary Medicine, மற்றும் Wakeforest Institute of Regenerative Medicine - ஆகியவற்றுடன் இணைந்து ஸ்டெம் செல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் ஈடுபட உள்ளது.

இம்மருத்துவ முறையினால் எதிர்காலத்தில் மனித மருத்துவத்திற்கும் ஏற்படும் நன்மைகளை கருத்தில் கொண்டு, எனது தலைமையிலான அரசு கால்நடைகளுக்காக இந்தியாவிலேயே முதல் முறையாக ஸ்டெம் செல் எனப்படும் "ஆதார செல் ஆராய்ச்சி மையம்" ஒன்றை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் 6 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, மனிதர்களுக்கு இணையாக மேம்பட்ட மருத்துவ சேவைகள் மற்றும் நோய் கண்டுப்பிடிப்பு முறைகள் ஆகியவற்றை கால்நடைகளுக்கும் அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், 22 கால்நடை பெரு மருத்துவமனைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி அலகுகள் மற்றும் 11 கால்நடை பண்ணைகள் ஆகியவற்றில் மொத்தமாக 53 அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் எனப்படும் நுண்ணொலி அலகிடும் நோய் கண்டறியும் கருவிகள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 8 கோடியே 81 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம் ஆண்டு தோறும், 15,000 கால்நடைகள் பயன்பெறும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் திட்டங்கள் கால்நடை விவசாயிகள் பெரிதும் பயன் அடைய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# நடப்பாண்டில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் 47 சேமிப்புக் கிடங்குகள் - 6.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதை கொள்கையாகக் கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு பொது விநியோகத் திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான உற்பத்தி, சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றி வரும் நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றையும் வலுப்படுத்தி வருகிறது.

வேளாண் உற்பத்தியைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதால், உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

உணவு தானியங்களை கொள்முதல் செய்து சேமித்து வைப்பதற்கென கடந்த இரண்டு ஆண்டுகளில் தலா 3,750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மூன்று கிடங்குகள் கட்டப்பட்டு உள்ளன. இதனையும் சேர்த்து தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 6.68 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு வசதி கொண்ட கிடங்குகள் உள்ளன. நான் மூன்றாவது முறையாக

ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்து வருவதால், இவற்றை சேமித்து வைக்க கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் அவசியம், என்பதை கருத்தில் கொண்டு, நவீன வசதிகளுடன் கூடிய 4,33,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 47 சேமிப்புக் கிடங்குகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் வாயிலாக 1.25 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 15 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சேமிப்புத் திறன் 6.33 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 7.58 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவுக்கு உயரும்.

மேலும், கொள்முதல் பொருட்களை பதப்படுத்தி பாதுகாக்கும் வகையில், எருக்கூர் நவீன அரிசி ஆலையில் 25,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு கட்டமைப்புகள், அதாவது Silos 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவிழ்ச்சியின்போதுபொருட்களைபாதுகாத்து,பின்னர் விலை ஏற்றத்தின் போது விற்பனை செய்வது விவசாயிகளின் வருவாயை பெருக்க உதவும் என்பதையும், அறுவடைக் காலங்களில் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும் போது, உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதையும் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,270 ஊரகக் கிடங்குகள் கட்டப்பட்டன. இதன் காரணமாக, கூட்டுறவு சங்கங்களில் சேமிப்பு கிடங்குகளின்

சேமிப்புத் திறன் 11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில், 140 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 1,044 சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தானிய சேமிப்புக் கிடங்குகளின் சேமிப்புத் திறன் 12 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும்.

உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 33,519 நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி விலை ஏதுமின்றியும், சர்க்கரை, பாமாயில், மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை மானிய விலையிலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய உணவுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் இருந்துநியாயவிலைக்கடைகளுக்கு அத்தியாவசியப்பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதை கண்காணிக்க கணினி மயம் ஆக்கல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 50 கோடி ரூபாய் மதிப்பில் கணினி மயம் ஆக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனைச் செயல்படுத்த மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் அவர்கள் தலைமையில் திட்டச் செயலாக்கத்திற்காக மற்றொரு குழுவும் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் 4,530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாய உறுப்பினர்களுக்கு தேவையான பயிர்க் கடன் உதவி வழங்குவதுடன், விவசாய உற்பத்தியை உயர்த்த உரங்கள், விதைகள், பூச்சிகொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்களையும் விநியோகம் செய்து வருகின்றன.

விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றக் கூடிய இந்தச் சங்கங்களில் 606 சங்கங்கள் நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற போது மிகவும் நலிவுற்று செயலற்ற நிலையில் இருந்தன. எனது அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் 467 சங்கங்களின் செயல் திறன் தற்போது மேம்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியினைக் கூட பெறத் தகுதியில்லாத 41 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் குறுகிய காலக் கடனமைப்பு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 50 இலட்சம் ரூபாய் வீதம் 20 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இந்தச் சங்கங்கள் தற்போது நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. மேலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை கணினி மயம் ஆக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, ரொக்கம் மற்றும் நகைகளை பாதுகாக்கும் வகையில், பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்ட தலா 5 இலட்சம் ரூபாய் வீதம், 50 சங்கங்களுக்கு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இது போன்ற பாதுகாப்பு சாதனங்களை மேலும் 52 சங்கங்களில் நிறுவும் வகையில், ஒரு சங்கத்திற்கு 1 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் வீதம் 52 சங்கங்களுக்கு 69 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கும் வகையில், 1,236 வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன. அவை வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்ய 25 கோடியே 60 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

தற்போது நலிவுற்ற நிலையில் இருக்கும் 139 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், முதற்கட்டமாக 72 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் வணிகத்தை 1 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தும் வகையிலும், அவைகளை செயல் திறன் மிக்க சங்கங்களாக மாற்றும் வகையிலும், சங்கம் ஒன்றிற்கு 50 இலட்சம் ரூபாய் வீதம் 36 கோடி ரூபாய் சிறப்பு காசுக் கடன் உதவி அதாவது Cash Credit Facility வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்த வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூலம் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் புதிய ஆலை - 7.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவு படுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், 2023 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தி துறையில் 22 விழுக்காடு வளர்ச்சியை எய்துதல் ஆகிய குறிக்கோள்களின் அடிப்படையில் புதிய தொழில்களை ஏற்படுத்துவதிலும், தொழில் மற்றும் கட்டமைப்புத் திட்டங்களில் பெருமளவிலான முதலீடுகளைச் செய்வதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை தொடர்ந்து லாபகரமாகவும், பல விருதுகளை பெற்றுள்ளதுமான தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் காகிதம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் காகித ஆலையிலிருந்து உருவாகும் சுண்ணாம்புக் கழிவு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாகும் திடக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி காகித நிறுவனத்தால் அமைக்கப்படும் இந்தியாவின் முதல் சிமெண்ட் தொழிற்சாலையினை நான் அண்மையில் துவக்கி வைத்தேன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் டன் திறன் கொண்ட, இரு புறமும் மேற் பூச்சு செய்யப்பட்ட

அடுக்கு காகித அட்டை, அதாவது Multilayer Double Coated Board தயாரிக்கும் ஒரு புதிய ஆலை சுமார் 1200 கோடி ரூபாய் முதலீட்டில் நவீன இயந்திர வசதிகளுடன் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய ஆலை திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குளித்தலை–மணப்பாறை மாநில நெடுஞ்சாலையை ஒட்டிய மணப்பாறை வட்டத்தில் உள்ள மொண்டிப்பட்டி வருவாய் கிராமம் மற்றும் அதனை சுற்றியுள்ள வறட்சியான பகுதியில் சுமார் 989 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இதற்கான பணிகள் 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடங்கப்பட்டு, 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்கப்படும். இதன் மூலம், சுமார் 2,000 பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு உருவாகும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் தெற்கு கடற்கரையோரப் பகுதியில் ஓர் ஆழ் கடல் துறைமுகம், அதாவது Deep Water Port, ஒரு மிதக்கும் திரவ நிலை எரி வாயு முனையம், அதாவது Floating storage Re-gasification Unit மற்றும் 500 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலை, அதாவது Gas based Power Plant உள்ளடக்கிய ஒரு மாபெரும் தொழில் திட்டம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமாகிய டிட்கோ மூலம் கூட்டுத் துறையில் சுமார் 3,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

1. சிவகங்கை மாவட்டத்தில் ஏற்கெனவே அமைந்துள்ள மானாமதுரை சிப்காட் தொழில் வளாகத்துடன் கூடுதலாக 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் மற்றும் பிற தொழிற்சாலைகள் இடம் பெறும் வகையில் புதிய தொழிற் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

2. ராமநாதபுரம் மாவட்டத்தில் பெட்ரோலிய சுத்திகரிப்பு, ரசாயனம், உரம் போன்ற தயாரிப்பு தொழிற்சாலைகள் அமைத்திடும் வகையில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில், 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் பொறியியல், உலோகத் தொழிற்சாலைகள் மற்றும் உலர் தோல் தொழிற்சாலை பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. திண்டுக்கல் மாவட்டத்தில், பொறியியல் சார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் சார்ந்த தொழிற் பூங்கா ஒன்று சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்படும்.

5. தேனிமாவட்டத்தில்,சுமார்2,000ஏக்கர்நிலப்பரப்பில்உணவுப் பதப்படுத்தல் சார்ந்த தொழிற்பூங்கா உருவாக்கப்படும்.

6. விருதுநகர் மாவட்டத்தில், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், உணவுப் பதப்படுத்துதல், பொறியியல் மற்றும் அச்சுத் தொழிற் கூடங்கள் ஆகியவை இடம் பெறும் வகையில் ஒரு தொழில் பூங்கா 3,400 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்படும்.

7. தூத்துக்குடி மாவட்டத்தில், கடல்சார் தொழில்கள், கப்பல் கட்டுதல் மற்றும் பழுது நீக்கு தொழிற்சாலைகள், கன ரகப் பொறியியல் உலோகத் தொழில் மற்றும் இரசாயனத்

தொழில்கள் ஆகியவற்றை ஈர்க்கும் வகையில் சிப்காட் நிறுவனத்தால் சுமார் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

8. திருநெல்வேலி மாவட்டத்தில், ஒளி மின் தகடுகள், சூரிய ஒளி சேகரிப்பான்கள் மற்றும் இதர புதுப்பிக்கத் தக்க எரிசக்தி தொடர்பான இயந்திரங்கள், கருவிகள், வீட்டு உபயோகச் சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் பொறியியல் தொழில்கள் அமையும் வகையில், சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையம் Renewable Energy Hub ஒன்று ஏற்படுத்தப்படும்.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்சார் தொழிற்சாலைகளை Marine Industries-ஐ ஈர்க்கும் வகையில் தொழிற் பூங்கா சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இவற்றுடன் பொறியியல் சார்ந்த தொழில்கள், ரப்பர் தொழில்கள் மற்றும் சுற்றுலாத் தொழில் ஆகியவையும் ஊக்குவிக்கப்படும்.

தென் மாவட்டங்களில் தற்போது உள்ள மற்றும் அமைய உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களில் தொழிற்சாலைகளை அமைக்க முன் வரும் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் சலுகைகள் எனது தலைமையிலான அரசால் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. சிப்காட் நிறுவனத்தால் 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இம்மானியம் சிப்காட் நிறுவனத்திற்கு அரசால் நேரடியாக திரும்ப அளிக்கப்படும்.

2. நிலம் பத்திர பதிவுக்கான முத்திரைத் தாள் கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு அளிக்கப்படும்.

3. மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிக்கப்படும்.

4. தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.

5. மதிப்புக் கூட்டிய வரி, அதாவது VAT அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச முதலீட்டுத் தொகையான 50 கோடி ரூபாய் என்பது 10 கோடி ரூபாயாக குறைக்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் தென் தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்கள் அதிக அளவில் உருவாகவும், வேலைவாய்ப்புகள் மேலும் பெருகவும், தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதல் இடத்தை எய்தவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பல்வேறு சிறப்புச் சலுகைகள்! - 7.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், நிலைத்த வேலை வாய்ப்புகளை அளிப்பதிலும், தொழில் முனைவோர் மேம்பாடு அடைவதற்கும் நாற்றங்காலாக விளங்குவது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பல்வேறு சலுகைகளை அளித்து வரும் எனது தலைமையிலான அரசு, தொழில் முனைவோரை மேலும் ஊக்குவிக்கும் வகையில் வழங்க உள்ள சிறப்புச் சலுகைத் தொகுப்பினை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**(1)** தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் அமைக்கப்படும் குறுந்தொழில் நிறுவனங்கள் மற்றும் அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண் சார் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, அவற்றின் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மொத்த மதிப்பில் 15 விழுக்காடு என்ற அளவில் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியம்

இனி 25 விழுக்காடாக அதிகரித்து வழங்கப்படும். வழங்கப்படும் மானியத்தின் உச்ச வரம்பு 30 இலட்சம் ரூபாய் என இருக்கும்.

(2) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், புதிய தொழிற் பேட்டைகளை அமைக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக, அதாவது SIDCO மூலமாக சுமார் 2,000 ஏக்கர் பரப்பிலான நில வங்கி படிப்படியாக உருவாக்கப்படும்.

(3) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்களின் அருகில் அமையும் வாய்ப்பை பெற்று ஒருங்கிணைந்த பயன் பெறும் வகையில், பெரிய நிறுவனங்களுக்காக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், அதாவது SIPCOT ஆல் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படும் தொழிற் பேட்டைகளில் உள்ள மொத்த நிலப் பரப்பில் குறைந்த பட்சம் 20 விழுக்காடு நிலம் ஒரே தொகுப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு உரிய நிலக் கிரய விலையில் வழங்கப்படும். இவ்வாறு பெறப்படும் நிலத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேம்படுத்தி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது மட்டுமல்லாமல், சிறு தொழில் முனைவோர் விரைவாக தொழில் துவங்கும் வகையில், 5,000 சதுர அடிக்கு மேற்பட்ட தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்ய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையை மாற்றி, 50 சென்ட் வரையிலான தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்ய சிட்கோ நிறுவனத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்படும்.

(4) நகர்ப்புற குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற் கூடங்கள் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு மாசுகளை ஏற்படுத்துகின்றன. நகர்ப் புறத்தில் உள்ள இட நெருக்கடி காரணமாக தொழிற் கூடங்களை விரிவுபடுத்தவும் இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், தொழிற் கூடங்களை விரிவுபடுத்தும் நோக்கிலும், ஏற்கெனவே, நகர்ப் பகுதிகளில் ஆங்காங்கே அமைந்துள்ள தொழிற் கூடங்களை மாற்றி அமைத்து நகருக்கு வெளியே தொழிற் குழுமம் மற்றும் தொழிற் பேட்டைகளை உருவாக்க தனியார் தொழில் முனைவோர் அமைப்புகள் முன் வரும் பட்சத்தில், மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி / கருத்தரங்க கூடங்கள், விற்பனை வசதி மையங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்த அரசு மானியம் 75 விழுக்காடு என்ற அளவில் அதிக பட்சமாக 15 கோடி ரூபாய் வரை வழங்கப்படும். இதே போல், தனியார் தொழில் முனைவோர் அமைப்புகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கென புதிய தொழிற் குழுமம் மற்றும் தொழிற்பேட்டை அமைக்க முன் வரும் பட்சத்தில் அரசு மானியம் 50 விழுக்காடு என்ற அளவில் அதிக பட்சமாக 10 கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.

(5) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நடைமுறையில் உள்ள நில விலை நிர்ணய முறை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உகந்த வகையில் சீரானதாகவும் நிலையானதாகவும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள "முழு விலை விற்பனை" மற்றும் "தவணை முறை விற்பனை" ஆகியவற்றை மாற்றி அமைத்து தொழில் வளர்ச்சிக்கு உகந்த லாப நோக்கமற்ற விலை நிர்ணயக் கொள்கை உருவாக்கப்படும். அரசு மற்றும் சிட்கோ தொழிற் பேட்டைகளில் தொழில்

மனைகள் மற்றும் தொழிற் கூடங்களை 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் வழங்கிடவும், 30 ஆண்டு கால முடிவில் தொழில் முனைவோருக்கு முழு கிரய விலையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படும்.

**(6)** புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதில் தகுதியான தனியார் மற்றும் அரசு நிலங்களை தேர்வு செய்து பெறுவதிலிருந்து நில வரை படம் ஒப்புதல் பெற்று ஒதுக்கீடு செய்யும் வரை உள்ள பல்வேறு நிலைகளில், பல்வேறு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து தடையின்மைச் சான்று மற்றும் ஒப்புதல்களை பெற வேண்டியுள்ளதால் ஏற்படும் கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஒற்றைச் சாளர தீர்வுக் குழு, அதாவது Single Window Clearance Committee ஒன்று ஏற்படுத்தப்படும்.

**(7)** தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை முக்கிய நோக்கமாக கொண்டு பல்வேறு இடங்களில் தொழிற் பேட்டைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தனது சொந்த நிதி மட்டுமல்லாமல் மாநில மற்றும் மத்திய அரசு வழங்கும் மானியத்தை பயன்படுத்தி வருகிறது. சிட்கோ நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை மேலும் பலப்படுத்தி சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சிட்கோ நிறுவனத்திற்கு கூடுதலாக 16 கோடி ரூபாய் அரசின் பங்கு மூலதனமாக வழங்கப்படும்.

**(8)** சென்னைப் பெருநகரை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தின் விலை அதிகமாக உயர்ந்து வருவதாலும், தொழிற் பேட்டைகள் துவங்க போதுமான காலி இடங்கள் இல்லாததாலும், தற்போதுள்ள தொழிற்பேட்டைகளை

விரிவுபடுத்த போதிய இடம் இல்லாததாலும், சிறு தொழில் முனைவோர், தொழிற் கூடங்களை அமைக்க உதவும் வகையில், அடுக்கு மாடி தொழில் வளாகங்களை, அதாவது Multi-storeyed Industrial Complexes அமைத்துத் தர எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக, திருவள்ளூர் மாவட்டம் திருமழிசையில் சிறு தொழில் முனைவோருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் குறுந்தொழில் கூடங்களை ஒதுக்கும் பொருட்டு 20 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடி தொழில் வளாகம் ஒன்று சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்.

**(9)** தமிழ்நாடு அரசின் தொலை நோக்குப் பார்வை 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை எய்தும் வகையிலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களை உருவாக்கும் வகையிலும், தொழில் நுட்பம் சார்ந்த தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றை பல்வேறு தொழில் குழுமங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், அதாவது Entrepreneurship Development Institute மூலம் வழங்கிட எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. மேலும், சுயதொழில் நடத்தி வரும் மகளிர் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, மகளிர்க்கென சிறப்பு பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இந்தப் பயிற்சித் திட்டங்களை செயல்படுத்த நடப்பாண்டில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படும்.

**(10)** கூட்டு முயற்சியினை ஊக்குவிக்கும் வகையில், தனியார் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவன

அமைப்புகள் தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்க முன் வந்தால், சிட்கோ நிறுவனம் அவற்றுடன் இணைந்து 10 விழுக்காடு வரை மூலதனத்தைச் செலுத்தி புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கும்.

மேற்காணும் நடவடிக்கைகள் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் பயன் பெறவும், அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# புகையிலையால் ஏற்படும் புற்றுநோய்களைத் தடுக்கும் வண்ணம் குட்கா, பான் மசாலாப் பொருட்களுக்குத் தடை - 8.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு நாட்டினுடைய மனித வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியினை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிப்பது மக்கள் நல்வாழ்வு என்பதன் அடிப்படையில், உடலை உறுதியாக்கி, நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை அனைத்து மக்களும் பெற வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில், சுகாதார பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

டெங்கு, சிக்குன் குனியா, பன்றிக் காய்ச்சல் போன்ற பல நோய்களை கண்டறியும் IgM, ELISA போன்ற பரிசோதனை வசதிகளை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், பல்வேறு வகையான வைரஸ் நோய்களைக் கண்டறியக் கூடிய serotypes என்று சொல்லக் கூடிய சோதனைகளை ஒரே இடத்தில் பரிசோதிக்கும் வசதி தமிழ் நாட்டிலேயே சென்னையில் உள்ள அரசு கிங் இன்ஸ்டிட்யூட்டில் மட்டுமே உள்ளது. இதனால், அசாதாரண வைரஸ்களால் ஏற்படும் நோயினை கண்டுபிடிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

நோயினை கண்டு பிடிப்பதில் ஏற்படும் கால தாமதத்தினை தவிர்க்கும் வகையிலும், நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெகு விரைவில் சிகிச்சையை ஆரம்பிக்கும் வகையிலும்,

இந்த நோய் மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்கும் வகையிலும், அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய நுண்ணணு தொற்று நோய் ஆய்வகத்தை, அதாவது Molecular Virology Laboratory யினை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நுண்ணணு தொற்று நோய் ஆய்வகம், முதற்கட்டமாக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் துவக்கப்படும். ஒவ்வொரு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் 2 கோடி ரூபாய் செலவில் நுண்ணணு தொற்றுநோய் ஆய்வகம் நிறுவப்படும். இத்திட்டம், படிப்படியாக அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் ஆகிய ஐந்து மருத்துவத் துறைகளைக் கொண்டது இந்திய மருத்துவம் ஆகும்.

இந்திய மருத்துவத்திற்கான மத்திய கவுன்சில் விதிகளின்படி, இந்திய மருத்துவத் துறையின் மாணவர்கள், நவீன அறிவியல் தொழில் நுட்பத்துடன், உயரிய தரத்தில் கல்வி பயில, இந்திய மருத்துவக் கல்லூரிகளின் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளம் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற அவசியத்தைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தில் இயங்கி வரும் அனைத்து அரசு இந்திய மருத்துவக் கல்லூரிகளுக்கு உள்கட்டமைப்பு மற்றும் தேவையான வசதிகள் செய்ய 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் மருத்துவ மனைகளுக்கான தேசிய அங்கீகாரச் சான்றிதழ் பெறும் முதல் பாரம்பரிய மருத்துவ

மனையாக சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவ மனையினை உருவாக்கிடும் வகையில், இம்மருத்துவ மனைக்கு மனித வளம் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்திட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருந்துகளின் தர நிர்ணயம், புதிய மருந்துகளுக்கான ஆய்வு முதலான பல்வேறு மருத்துவ ஆய்வுகளை இந்திய மருத்துவ கல்லூரிகளும், மருத்துவ மனைகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனை இக்கல்லூரி ஆசிரியர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் மேற்கொள்வதன் மூலம், துறையின் மாண்பும், பயனும் சர்வதேச மருத்துவ ஆய்வு நூல்களில் வெளியாவதுடன், நம் பாரம்பரிய மருத்துவ முறைகளின் பயன் சர்வதேச அளவிற்குச் சென்றடையும். எனவே இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளுக்கென, தனி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒன்று 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய், இதய நோய், புற்று நோய், கழுத்து முதுகுத் தண்டு நோய்களுக்கான மேலாண்மையிலும் தடுப்பிலும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறையின் சிகிச்சைகளான நீர் சிகிச்சை, உணவு சிகிச்சை, மண் சிகிச்சை, அக்யூபங்சர் இவற்றின் பங்கு சிறப்பாக உள்ளது. எனவே தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவ மனைகளிலும், நவீன மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் யோகா மற்றும் இயற்கை மருத்துவம் வழங்கும் வாழ்வியல் மருத்துவ மனைகள், அதாவது Life Style Clinics 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசு இந்திய மருத்துவத் துறையில் பயின்று வரும் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கென

பல புத்தகங்களை வெளியிடுகிறது. இது தவிர இயக்குனர் அகத்தில் இருந்து, இத்துறையின் வளர்ச்சி மற்றும் ஆய்வுகளை மக்களிடையேயும் மருத்துவர்களிடமும் அவ்வப்போது எடுத்துச் செல்ல தனியாக இதழ் ஒன்று வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் செவ்வனே நடைபெற இந்திய மருத்துவத் துறை இயக்குனர் அகத்தில் நூல்கள் பதிப்பிற்கென, அதாவது Publications and Periodicals-க்கென திரட்டு நிதியாக 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஆலத்தூரில் இயங்கி வரும் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம், சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி முறை மருந்துகளை உற்பத்தி செய்யும் அரசுக்குச் சொந்தமான ஒரே நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தின் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில் உபகரணங்களை மேம்படுத்தும் வகையில், 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இந்திய முறை மருத்துவத்திற்கான மத்திய கவுன்சிலின் வழிகாட்டுதல்படி, தமிழக அரசின் யுனானி மற்றும் ஆயுர்வேத கல்லூரிகளில், மாணவர்களைப் பயிற்றுவிக்க ஒவ்வொரு துறையிலும் பணியாற்ற, பட்ட மேற்படிப்பு படித்த ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே, பணியில் இருக்கும் யுனானி மற்றும் ஆயுர்வேத பட்டதாரிகளை அரசின் செலவில் வேறு மாநிலங்களுக்குச் சென்று பட்ட மேற்படிப்பு பயின்று வர வழிவகை செய்யப்படும்.

இந்திய மருத்துவத் துறையில் போலிப் பதிவுச் சான்றிதழ் நிலவுவதை களையும் வகையில், 15 இலட்சம் ரூபாய் செலவில், தமிழக அரசின் சித்த மருத்துவக் கவுன்சில், ஓமியோபதி கவுன்சில், இந்திய மருத்துவப் பதிவு கவுன்சில்களில் இனி URL மற்றும் 2D BAR CODE தகவல் தொழில் நுட்பங்களைக்

கொண்டு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் வசதி அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்திய மருத்துவ முறை வாயிலாக தாய் சேய் நல மருந்துகள் 1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இரத்த சோகை நோயை தடுக்கவும், குணப்படுத்தவும் பாரம்பரிய மற்றும் இல்லங்களிலேயே கிடைக்கக் கூடிய கருவேப்பிலை பொடியின் பயன் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

தமிழகத்தில் உள்ள 18 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் ஒரு பல் மருத்துவக் கல்லூரியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் 43 மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்த புள்ளி விவரங்கள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளிலும் கிடைக்கும் வகையில் மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளில் 22 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் கணினி வழி மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம் மற்றும் மருத்துவமனை மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணி முழுவதும் கணினி மூலம் செயல்படுத்தப்படும். அனைத்து மருத்துவ மனைகளும் சென்னையில் உள்ள ஒரு மத்திய சர்வருடன் Central Server–உடன் இணைக்கப்படும். இதன் மூலம், நோயாளிகளுக்கு கிடைக்கும் பயன்கள் மட்டுமல்லாது, நோய் குறித்து சேகரிக்கப்படும் தகவல்கள், புள்ளி விவரங்களை எளிதில் ஆராயவும், அதன் அடிப்படையில் மருத்துவ சிகிச்சை முறைகளை மேற்கொள்ளவும், தமிழகத்தில் நோய் தாக்க விவரங்களை அறிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான தடுப்பு மற்றும் சிகிச்சை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் இயலும்.

எந்த ஒரு துறையும் திறம்பட செயல்பட அடித்தளமாக விளங்குவது பயிற்சி என்பதைக் கருத்தில் கொண்டு, சுகாதாரத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி அளிப்பதற்காக சுகாதார பயிற்சி மற்றும் மருத்துவமனை நிர்வாக பயிற்சி நிலையம் ஒன்று 10 கோடி ரூபாய் செலவில் சென்னையில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலையத்தில் மருத்துவர்களுக்கான மருத்துவமனை நிர்வாக பயிற்சி, செவிலியர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான நிர்வாக பயிற்சி, மகப்பேறு மற்றும் சிசு நலம் குறித்த பயிற்சி, மருத்துவக் கல்வி கற்பித்தல் குறித்த பயிற்சி உள்ளிட்ட பல்வேறு சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்படும். சுகாதாரத் திட்டம் குறித்த ஆய்வுகளும் இந்த நிலையத்தில் மேற்கொள்ளப்படும். அகமதாபாத் நகரில் உள்ள இந்திய மேலாண்மைக் குழு, மும்பையில் உள்ள டாட்டா சமூக அறிவியல் நிறுவனம், புது தில்லியில் உள்ள தேசிய மருத்துவம் மற்றும் குடும்ப நல நிலையம் மற்றும் பொது சுகாதார பயிற்சி நிலையம், தேசிய சுகாதார தகவல் நிலையம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து இப்பயிற்சி நிலையம் செயல்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இல்லாத மாவட்டங்களில் தற்போது மாவட்ட தலைமை மருத்துவமனைகள் உயர் சிகிச்சை மருத்துவ மனைகளாக செயல்பட்டு வருகின்றன. சில நேரங்களில் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இல்லாத மாவட்டங்களில் உள்ள நோயாளிகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் உள்ள மாவட்டங்களுக்குமேல் சிகிச்சைக்காக செல்ல வேண்டியுள்ளது. எனவே மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் இல்லாத கடலூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர், கரூர், பெரம்பலூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், நீலகிரி, திண்டுக்கல்,

நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 15 மாவட்டங்களில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு இணையாக 18 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயந்திர கதியில் இயங்கும் தற்போதுள்ள வாழ்வியல் சூழலில், தொற்று நோய்களுக்கு மேலாக இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இதய நோய், மன அழுத்தத்தினால் ஏற்படும் மற்ற விளைவுகள் மட்டுமல்லாமல் புற்று நோய் போன்ற தொற்றா வகை நோய்களின் Non-Communicable Diseases-களின் தாக்கம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, தொற்றா வகை நோய்த் தடுப்பு பணிகளை ஒருங்கிணைத்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 2013 –2014 ஆம் ஆண்டு தொற்றா வகை நோய்த் தடுப்பு சிறப்பு ஆண்டாக அனுசரிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென சுகாதாரத் திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும், கர்ப்பப் பை புற்று நோய், மார்பகப் புற்று நோய், இதய நோய் மற்றும் சர்க்கரை நோய் ஆகியவற்றை தடுப்பதற்கும், அவற்றிற்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதற்கும் வழிவகை செய்யப்படும். இந்த நோய்களைத் தடுப்பதிலும், மேலாண்மை செய்வதிலும், பாரம்பரிய மருத்துவத்தின் பங்கு சிறப்பானது என்பதால், இதற்கென 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விழிப்புணர்வு மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்திய அளவில் புகழ் பெற்ற அடையாறு புற்று நோய் மையத்திற்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் மானியத்தை, எனது தலைமையிலான அரசு கடந்த ஆண்டு 1 கோடியே 32 இலட்சம் ரூபாயிலிருந்து 1 கோடியே 75 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது. இந்த மானியத் தொகை இந்த ஆண்டு 2 கோடியே 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும், வரும்

ஆண்டுகளில் இந்த மானியம் ஆண்டு தோறும் 15 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நோயினை குணப்படுத்த முடியாமல் அவதியுறும் நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கும், வயோதிகம் காரணமாக படுக்கையில் அவதிப்படும் நோயாளிகளுக்கும், வலியிலிருந்து நிவாரணம் அளிக்கும் திட்டத்தை தொண்டு நிறுவனத்துடன் இணைந்து திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் திருச்சி ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒரு ஒன்றியம் வீதம் எனது அரசு சோதனை அடிப்படையில் 2011–2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் பயனைக் கருத்தில் கொண்டு சமூகம் சார்ந்த வலி நிவாரணம் மற்றும் உடல் நல கவனிப்பை Community based Pain Relief and Palliative Care அனைத்து மாவட்டங்களிலும், 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாய் – சேய் நலனைக் காக்கும் வகையில், மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் உள்ள தாய் சேய் நலப் பிரிவுகள் 50 கோடி ரூபாய் செலவில் மேன்மைமிகு மையங்களாக மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கட்டடங்கள் கட்டப்படுவதோடு மட்டுமல்லாமல் நவீன மருத்துவ உபகரணங்களும் வாங்கப்படும்.

பேறு கால அவசர சிகிச்சை மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் 24 மணி நேரமும் செயல்படும் சீமாங்க் CEmONC – Comprehensive Emergency and Obstetric and Neonatal Care Centres திட்டம் 125 அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 125 அரசு மருத்துவ மனைகளில் முதல் கட்டமாக கர்ப்பிணிப் பெண்கள்

அதிக அளவில் பயன்படுத்தக் கூடிய 55 மருத்துவ மனைகளில் தனித் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் 12 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சென்னை மருத்துவக் கல்லூரியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, கஸ்தூரிபாய்காந்திபெண்கள்மற்றும்குழந்தைகள்மருத்துவமனை மற்றும் 16 மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் உள்ள மகப்பேறு பிரிவுகளுக்கு தலா இரண்டு மருத்துவர்கள் வீதம் 36 மருத்துவர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்படுவார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் தொடர் செலவு அரசுக்கு ஏற்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, முதற் கட்டமாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு கூடுதல் மருத்துவர் என்ற அடிப்படையில் 163 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 163 மருத்துவ அலுவலர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டனர். தற்போது, இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், ஒரு கூடுதல் மருத்துவ அலுவலர் நியமனம் செய்யப்படுவார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சிளம் குழந்தைகளின் பராமரிப்பை வலுப்படுத்தும் வகையில், பொள்ளாச்சி, உசிலம்பட்டி, மன்னார்குடி, கோவில்பட்டி, தென்காசி மற்றும் மேட்டூர் ஆகிய 6 மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனைகளிலும், பழனி, தாராபுரம், காரைக்குடி, கோபிச்செட்டிபாளையம், குளித்தலை, கூடலூர், கம்பம், திருச்செங்கோடு, அறந்தாங்கி, பரமக்குடி, மற்றும் செய்யார் ஆகிய 11 அரசு மருத்துவமனைகளிலும் பச்சிளம் குழந்தை

பராமரிப்பு மையங்கள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு குழந்தைகள் நல மருத்துவர்களும் 10 செவிலியர்களும் நியமிக்கப்படுவார்கள். இது தவிர, ஏற்கெனவே செயல்பட்டு வரும் 44 பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் ஒவ்வொன்றுக்கும் கூடுதலாக ஒரு செவிலியர் நியமிக்கப்படுவார். இந்த மையங்கள் 24 மணி நேரமும் இயங்கும்.

மேலும் சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, திருவல்லிக்கேணி கஸ்தூரிபாய் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் வண்ணாரப்பேட்டை ராஜா சர் ராமசாமி முதலியார் மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவமனைகளில் உள்ள பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்களில் கூடுதலாக தலா 10 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு, இந்த மையங்கள் வலுப்படுத்தப்படும்.

புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் ஏற்படுத்தும் புற்று நோய்களை தடுக்கும் நோக்கத்துடன் மத்திய அரசின் உணவு கலப்படத் தடைச் சட்டம் Prevention of Food Adulteration Act 1954–ன் கீழ், மெல்லும் வகை புகையிலைப் பொருட்களை 19.11.2001 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு எனது அரசு தடை செய்து, அறிவிக்கை வெளியிட்டது. ஆனால் தமிழ்நாடு மற்றும் இதர சில மாநிலங்களின் இத்தகைய அறிவிக்கைகள் notifications, குறித்த வழக்கை விசாரணை செய்த உச்ச நீதிமன்றம் இந்தச் சட்டத்தில், இதனை தடை செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளதாக கூறி, 2.8.2004 அன்று அறிவிக்கையை ரத்து செய்தது.

தற்பொழுது, உணவு கலப்படத் தடைச் சட்டத்திற்கு பதிலாக உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் Food Safety and Standards Act என்ற புதிய சட்டத்தை 2006இல் மத்திய

அரசு இயற்றி உள்ளது. இந்த சட்டம் மற்றும் அதன் விதிமுறைகள் 5.8.2011 முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்தன.

தமிழக அரசும் இந்தச் சட்டத்தை செயல்படுத்த இதற்கென 'தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம்' என்ற தனித் துறையை ஏற்படுத்தியுள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம் விதிமுறைகளின்கீழ் எந்த ஒரு உணவிலும் சுகாதாரத்தைப் பாதிக்கும் பொருள் இருக்கக் கூடாது என்றும் புகையிலை, அதாவது Tobacco மற்றும் நிக்கோட்டின் Nicotine ஆகியவற்றை உணவுப் பொருளில் சேர்க்கக் கூடாது என்றும் விதிமுறை உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் முன்பு உள்ள ஒரு வழக்கு விசாரணையின் போது குட்கா மற்றும் பான் மசாலா போன்ற சுவைக்கும் புகையிலைப் பொருட்களை தடை செய்வதை பற்றி மாநில அரசுகளால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உச்ச நீதிமன்றம் கோரியுள்ளது.

புகையிலையால் ஏற்படும் பல்வேறு வகையான புற்று நோய்களைத் தடுக்கும் வண்ணம், குட்கா, பான் மசாலா போன்ற சுவைக்கும் புகையிலைப் பொருட்களைத் தயாரிக்கவும், சேமித்து வைக்கவும், விநியோகம் செய்யவும், விற்கவும் தடை விதிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய மருத்துவ முறையை ஊக்குவிக்கும் வண்ணமும், அரசு மருத்துவமனைகளில் மேம்பட்ட சேவைகள் அளிக்கும் வண்ணமும், என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஓர் ஆரோக்யமான சமுதாயம் உருவாக வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

## பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கூடுதலாக நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டப்படும்! - 8.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தியப் பொருளாதாரத்தில் தனித்தன்மை பெற்று விளங்குவதும், நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குதிலும், மத்திய, மாநில அரசுகளுக்கு கணிசமான வருவாயினைப் பெற்றுத் தருவதிலும், அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்ற ஜவுளித் தொழிலை மேற்கொண்டு வரும் நெசவாளர்களுக்கு பற்பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

நெசவுத் தொழிலை மேம்படுத்தும் வகையிலும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய தறிகளில் நெசவாளர்கள் உற்பத்தி மேற்கொள்ளவும், அதன் மூலம் அவர்கள் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையிலும், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருநெல்வேலி, கடலூர், வேலூர், திருச்செங்கோடு, சேலம் மற்றும் மதுரை பகுதிகளில் உள்ள நெசவாளர்களுக்கு ½ குதிரை திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள் அரசின் மானியத்துடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான மொத்த செலவினம் 24 கோடி ரூபாய் ஆகும். ஆண்டொன்றிற்கு 2,000 பெடல் தறிகள் வீதம் மூன்று ஆண்டுகளில் இவை வழங்கப்படும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில்

சுமார் 1,600க்கும் மேற்பட்ட தற்காலிகப் பணியாளர்கள் ஐந்தாண்டுகள் முதல் 15 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில், ஓராண்டு பணி முடித்த தற்காலிக பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2,700/– ரூபாய் வீதமும், 5 ஆண்டுகள் பணி முடித்த தற்காலிக பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3,000/– ரூபாய் வீதமும், 10 ஆண்டுகள் பணி முடித்து தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3,750/– ரூபாய் வீதமும் தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இவர்களுக்கு ஆண்டுதோறும் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது. தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் நீண்ட காலமாக பணியில் உள்ளதாலும், இவர்களில் பெரும்பாலோனோர் வேறு பணிகளுக்கு நியமனம் செய்யக் கூடிய வயது வரம்பைக் கடந்தவர்கள் என்பதாலும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், இன்றைய தேதியில் ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் தொகுப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் சங்கங்களின் வகைபாடுகளுக்கேற்ப பதவி நிலை நான்கில் உள்ள காலமுறை ஊதியம் 1.1.2013 முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றிற்கு சுமார் 3 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வருமானத்தை பெருக்கும் வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு, ஒரு நெசவாளருக்கு 1,500/– ரூபாய் வீதம், 25,000 நெசவாளர்களுக்கு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், நெசவாளர்களின் வேலைப் பளு குறைந்து உற்பத்தி இரு மடங்காக அதிகரிப்பதோடு,

நெசவாளர்களின் வருமானமும் இரட்டிப்பாகும். மேலும் நெசவு தொழிலுக்கான ஊடை நூல் கிடைப்பதில் உள்ள கால தாமதமும் தவிர்க்கப்படும்.

மைய மற்றும் மாநில அரசுகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. தற்போது இத்திட்டம் நடைமுறையில் இல்லை. 22.4.2013 அன்று நடைபெற்ற கைத்தறி மற்றும் துணிநூல் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின்போது, 5 ஆண்டுகளில் கட்டப்படும் 3 இலட்சம் பசுமை வீடுகள் மட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கென அதிகப்படியாக வீடுகளை கட்டித் தருவது குறித்து இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; விரைவில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்று நான் அறிவித்தேன். அதனைச் செயல்படுத்தும் வகையில், முதற்கட்டமாக, 2013–2014ஆம் நிதியாண்டில் 10,000 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் தமிழகம் முழுவதிலும் கட்டித் தரப்படும். முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 60,000 வீடுகளின்றி, கூடுதலாக நெசவாளர்களுக்கென 10,000 வீடுகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜவுளித் துறையின் ஓர் அங்கமாக விளங்கும் பட்டு வளர்ச்சித் துறையில் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழும் தமிழகம் தொடர்ந்து இந்தச் சாதனைகளை நிகழ்த்தும் வண்ணமும், தரமான பட்டு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி பீடு நடை போடும் வண்ணமும், லாபகரமான பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வண்ணமும், ‘‘பஞ்சாயத்திற்கு ஒரு பட்டு விவசாயி’’ என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பட்டுப் புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள கிராமங்கள் இல்லாமல், 300 புதிய

கிராமங்களில் 2013 – 2014 ஆம் நிதி ஆண்டில் ஒரு கிராமத்திற்கு குறைந்த பட்சம் ஒரு விவசாயி பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் முன்னோடியாக ஈடுபடுத்தப்படுவார். இவரது செயல்பாட்டினை தொடர்ந்து, கிராமத்திலுள்ள மற்ற விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட வாய்ப்பு ஏற்படும்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியினை ஏற்படுத்திடும் முக்கிய உத்திகளில் ஒன்றான மழை நீர் சேகரிப்பை ஊக்குவிக்கும் வகையில், பண்ணைக் குட்டைகள், தடுப்பு அணைகள் கசிவு நீர்க் குட்டைகளை உருவாக்குதல், நுண்ணீர்ப் பாசனம் அமைத்தல், ஏரி குளங்களில் தூர் வாருதல் முதலிய நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக, வேளாண் பொறியியல் துறையினரின் தொழில்நுட்ப உதவியுடன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் 2013–2014ஆம் நிதியாண்டில் 50 பண்ணைக் குட்டைகள் அரசு பட்டுப் பண்ணைகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டு நூல் உற்பத்தியையும், தரத்தினையும் மேம்படுத்தும் வகையில், ஒசூர், வாணியம்பாடி, சேலம், தாளவாடி, புதுக்கோட்டை, சிவகங்கை, நன்னகரம் (தென்காசி) மற்றும் நாகர்கோவில் ஆகிய எட்டு இடங்களில் உள்ள எட்டு அரசு பட்டு நூற்பு அலகுகளிலும் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட புதிய பல முனை பட்டு நூற்பு இயந்திரங்கள் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னாள் முதல்வர் மறைந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1979ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பட்டு வளர்ச்சித் துறையின் இயக்குநர் அலுவலகத்திற்கு 33 வருடங்களாகியும் சொந்தக் கட்டடம் இல்லாததைக் கருத்தில் கொண்டு, 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் சேலத்தில்,

பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் ஒன்று கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பட்டு விவசாயிகளுக்கும், பட்டு வளர்ச்சித் துறையில் பணியாற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் நவீன பட்டுத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிப்பதற்கு ஒசூரில், தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. 'பஞ்சாயத்துக்கு ஒரு பட்டு விவசாயி' என்ற திட்டத்தினை இந்த ஆண்டு செயல்படுத்துவதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட வாய்ப்புள்ளதால், அவர்களுக்கும் பட்டுத் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிக்க ஏதுவாக இப்பயிற்சிநிலையத்திற்கு கூடுதலாகநவீனபயிற்சிக்கூடங்களும், தங்கும் விடுதியும் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், 10 கைவினைக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் "தமிழ்நாடு மாநில விருது" வழங்கப்பட்டு வருகிறது. இக்கைவினைக் கலையை மேலும் ஊக்குவிக்கும் வண்ணம், 2011–2012 ஆம் ஆண்டில் முதன் முதலாக "மாவட்ட கைத் திறன் விருது" எனும் புதிய விருது எனது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த விருது 16 விதமான கைத் திறத் தொழில்களில் கை தேர்ந்த 85 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக, மேற்படி மாவட்ட கைத்திறன் விருதுகளில் 17 விருதுகள் பெண் கைவினைஞர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

"ஜப்பான் நாட்டின் வாழும் தேசிய பொக்கிஷங்கள்" Living National Treasures of Japan எனும் விருதை ஏழு விதமான

கலைப் பொருட்கள் தயாரிக்கும் கைவினைஞர்களுக்கு ஜப்பான் அரசு வழங்கி வருவது போல், தமிழ் நாட்டிலும் கைத்திறன் தொழிலில் பணிபுரிந்து அதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷம்" என்ற உயரிய விருது இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர்களை பொக்கிஷமாக கருதி அறிவிக்கும் இத்தகைய விருது இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பஞ்சலோக சிற்பங்கள், பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள், தஞ்சாவூர் கலைத் தட்டுகள், மர சிற்பங்கள், கற் சிற்பங்கள், சுடுகளிமண், கலம்காரி / பத்திக் / அப்ளிக் துணி ஓவியங்கள், காகிதக் கூழ் பொம்மைகள், பாய் நெசவு, மூங்கில் மற்றும் பனை ஓலை பொருட்கள், நெட்டி வேலை, நார் பொருட்கள், கோவில் நகைகள், சித்திரத் தையல் வேலை, இதர கைவினைப் பொருட்கள் ஆகிய 16 விதமான கைத்திறன் தொழில்களில் இருந்தும் கைதேர்ந்த 65 வயதுக்கும் மேற்பட்ட 10 கைவினைஞர்களை தேர்வுக் குழு மூலம் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படும். இவ்விருது பெறும் கைவினைஞர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கம், தாமிரப் பத்திரம், ஒரு சவரன் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை வழங்கப்படும். இத்திட்டம் 2013–2014 ஆம் ஆண்டில் 15 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மூலமாக செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் பாரம்பரிய பெருமைகளை வெளிப்படுத்தும் கைத்திறத் தொழில்களில் தஞ்சாவூர் ஓவியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த அரிய கலை அழியும் நிலை ஏற்பட்ட போது அன்றைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்

அவர்களின் ஆணைப்படி தஞ்சாவூர் ஓவியங்களுக்கான பயிற்சி வகுப்புகள் 1980–1981ஆம் ஆண்டு தஞ்சையில் நடத்தப்பட்டு இக்கலைக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.

இதன் காரணமாக இக்கலை தற்போது தேவையின் அடிப்படையில் பரவலாக பிற பகுதிகளில் வளர்ந்துள்ளது. இக்கலையை மேலும் பரவலாக்கும் வண்ணமும், வீட்டிலுள்ள மகளிர் இந்தக் கலையை கற்று சுயமாக சம்பாதிப்பதற்கு வழிவகை செய்யும் வகையிலும், தற்போது திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில், திறன் மிக்க கைவினைஞர்களைக் கொண்டு, 100 மகளிருக்கு தஞ்சாவூர் ஓவியங்கள் தயாரித்தலுக்கான ஓராண்டு பயிற்சி அளிக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீரங்கம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கோயில்களில் பிரசித்தி பெற்ற ரங்கநாதர், தன்வந்திரி, அகிலாண்டேஸ்வரி, சமயபுரம் மாரியம்மன், சக்கரத்தாழ்வார், சமய முனிவர் இராமானுஜர் ஆகியோரின் திருவுருவங்களை மையப்படுத்தி பயிற்சி அளிக்கப்படும். மேற்படி பயிற்சிக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை வழங்குவதுடன், பயிற்சியாளர்களுக்கு 2,000/– ரூபாய் மாத உதவித் தொகையும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் அவர்களுக்கு உரிய சான்றிதழும் வழங்கப்படும். நடப்பாண்டில் இத்திட்டம் 83 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் ஜவுளித் தொழில், பட்டுப் புழு வளர்ப்புத் தொழில் மற்றும் கைத்திறத் தொழில்கள் மேம்படவும், இந்தத் தொழில்களில் ஈடுபடுவோர் வாழ்வு சிறக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# அரசு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இணைப்பு! - 8.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்து மக்களும் உடனுக்குடன் தொடர்பு கொள்ள வழி ஏற்படுத்தி, உலகை மிகச் சிறிய பரப்புடையதாக்கி 'உலகமே சிறு கிராமம்' என்று சொல்லும் அளவுக்கு தகவல் தொழில் நுட்பவியல் துறை உலகையே சுருக்கியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 2002 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய தகவல் தொழில் நுட்பவியல் கொள்கை தான் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்ல வித்திட்டது.

அரசுத் துறைகளில் மின் ஆளுகை முயற்சிகளை செயல்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ள, மின் ஆளுமை இயக்குனரகம் பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அதன் கட்டுப்பாட்டின் கீழ் தகவல் தொழில் நுட்பவியல் ஆற்றல் மற்றும் பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட ஒரு தகவல் தொழில் நுட்பவியல் பணி நிலைப் பிரிவு, அதாவது IT Cadre உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பிரிவிலிருந்து தலைமை செயலகம் மற்றும் மாநிலத்தில் உள்ள துறை தலைமை அலுவலகங்களுக்கு பணிபுரிய அலுவலர்கள் அனுப்பப்படுவர். அவர்கள் அரசு துறைகளில் மின் ஆளுகை முயற்சிகளை செயல்படுத்த உதவி புரிவர்.

மேகக் கணினியம், அதாவது Cloud Computing என்பது கணினித் திறனை இணையத்தின் வாயிலாக பெறக் கூடிய ஒரு அமைப்பாகும். இதன் மூலம் கணினித் திறன்களை வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து உள் கட்டுமான சேவை, மென் பொருள் தள சேவை, மென் பொருள் சேவை ஆகியவற்றை பெற முடியும்.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த மேகக் கணினியத்தை மாநிலத் தரவு மையத்தில் (State Data Centre) ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முன் மாதிரி ஆய்வுகள் நல்ல பலனை அளித்ததால், மாநிலத் தரவு மையத்தில் (State Data Centre) முழுமையான மேகக் கணினியம் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் கணினி மென் பொருட்கள் மற்றும் வன் பொருட்கள் உள்ளடங்கிய கட்டமைப்பை பயன்பாட்டு கட்டண முறையில் அரசுத் துறைகள் பெற இயலும் என்பதால், வன் பொருட்கள், மென் பொருட்கள், கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக ஏற்படும் செலவினங்கள் பெருமளவில் குறையும்.

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு, அதாவது Tamil Nadu State Wide Area Network, அரசுத் துறைகளை இணைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு பிரத்தியேகமான இணைப்பாகும். இந்த இணைப்பின் மூலம் குரல், தரவு, வலையம் மற்றும் காணொலி ஆகிய சேவைகளை வழங்க இயலும். இதன் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகியவை உள்ளடக்கிய 708 வலைய இணைப்பு முனைகள் Points of presence எல்காட் நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை வணிகவரித் துறை, தமிழ் நாடு குடிநீர் வழங்கல் வாரியம், சுகாதாரத் துறை போன்ற பல அரசுத் துறைகளின்

1,853 அலுவலகங்களுக்கு கிடைமட்ட இணைப்பு, அதாவது Horizontal Connectivity கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்ட பணிகள் முடிவுற்று தற்பொழுது இரண்டாம் கட்டப் பணிகள் தொடங்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் மூலம் பல்வேறு அரசுத் துறைகளும் தங்களது துறை சார்ந்த சேவைகளை பொது மக்களுக்கு அளித்து வருகின்றன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட செயல்பாட்டிற்கு எல்காட் நிறுவனம் நிதி உதவி கோரியுள்ளது. இத்திட்டத்திற்கான அலை வரிசை இணைப்பு ஒரே நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதால் அந்த இணைப்பில் ஏதேனும் எதிர்பாராத இடையூறுகள் ஏற்படும் போது, அரசின் சேவைகளை தொடர்ந்து அளிக்கும் விதத்தில் பதிலி இணைப்பு, அதாவது Redundant Connectivity ஒன்று அவசியம் ஆகிறது. மேலும் இவ்வலைய இணைப்பு முனைகளில் இருந்து சற்று தொலைவில் அமைந்துள்ள பல அரசு அலுவலகங்களுக்கு கிடைமட்ட இணைப்பையும் அளிக்க வேண்டியுள்ளது.

எனவே, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட செயல்பாட்டிற்கு 50 கோடி ரூபாயும், பதிலி இணைப்பிற்கு 10 கோடி ரூபாயும், கிடைமட்ட இணைப்பிற்கு 40 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 100 கோடி ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் இன்னும் பல அரசு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இணைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அரசுத் துறைகளின் மின் ஆளுமை முயற்சிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கான சேவைகள் துரிதமாக வழங்கப்படும்.

அரசின் பல்வேறு துறைகளில், துறை சார்ந்த முடிவுகளை எடுப்பதற்காக இடம் சார், அதாவது Spatial மற்றும் இடம் சாராத,

அதாவது Non Spatial தரவுகளை சீராக இணைக்கும் புவி சார் தகவல்கள், அதாவது Geographical Information மிகவும் அவசியமானதாகும். இதனை நிறைவு செய்யும் வகையில், 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புவி சார் தகவல்களைக் கொண்ட ஒரு பொதுவான மின்னணு வரைபடக் காப்பக தளம் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மின்னணு வரைபடக் காப்பகத் தளத்திலிருந்து தேவையான வரைபடங்களை, தேவைப்படும் துறைகள் பதிவிறக்கம் செய்து உபயோகிக்க, அனுமதி வழங்கப்படும். இதன் மூலம் அரசுத் துறைகளுக்கு மின்னணு வரைபடங்கள் சுலபமாக கிடைப்பதோடு அல்லாமல் தொழில்நுட்ப பக்கபலமும் கிடைக்கும்.

மின் ஆளுமையின் மூலம் பல்வகையான அரசின் சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்று அடைவதற்கென, சிறப்பு நோக்குத் துறைகள் Mission Mode Departments தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்துறைகள் முழுமையாக கணினிமயம் ஆக்கப்பட்டு வருகின்றன. இக்கணினிமயம் ஆக்கல் திட்டச் செலவினங்களை இத்துறைகள் மேற்கொள்வதற்காக பிரத்தியேகமாக சிறப்பு நிதி ஒதுக்கீடு அரசால் செய்யப்பட்டு வருகிறது.

இதே போன்று, சிறப்பு நோக்குத் துறைகள் அல்லாத மற்ற துறைகளிலும், மின் ஆளுமை முயற்சிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுக்கு அரசின் சேவைகளை வழங்கும் முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதற்காக ஒரு மின் ஆளுமை முயற்சிக்கான நிதி e-Governance Initiative Fund உருவாக்கப்படும். இதற்கென 10 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் சிறப்பு நோக்குத் துறைகளில் மட்டுமன்றி, அனைத்து அரசுத் துறைகளிலும் அரசிடமிருந்து குடிமக்களுக்கு, அரசிடமிருந்து வணிகர்களுக்கு, அரசிடமிருந்து

அரசுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் சரியான நேரத்தில், சரியான இடத்தில், முறையாக மற்றும் விரைவாக வழங்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள், அரசின் சேவைகள் அனைத்துத் தரப்பு மக்களையும் விரைவாகவும், எளிதாகவும் சென்றடைய வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு ரூ.4.27 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் ! - 9.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேல் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்திட பல்வேறு நலத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

சமூகத்தின் நலிவுற்ற பிரிவினருக்காக, கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிய அரசு இந்த அரசு என்பதை பெருமையோடு இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வி கற்பதற்கு ஏற்ற சூழ்நிலை உருவாக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், அனைத்து விடுதிகளுக்கும் நவீன வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் திட்டத்தினை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 1,294 விடுதிகளில் 1,000 விடுதிகள் ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை 2001 முதல் 2006 வரை நடைபெற்ற எனது 2ஆவது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. 226 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம்

கட்டுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. எஞ்சியுள்ள 68 விடுதிகளுக்கு நடப்பாண்டில் 86 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவற்றில் 47 விடுதிகள் 100 மாணவ – மாணவியர் தங்கும் வகையிலும், 21 விடுதிகள் 50 மாணவ – மாணவியர் தங்கும் வகையிலும் கட்டப்படும். இவ்வாறு கட்டப்படும் கட்டடங்களில் சூரிய ஒளி மூலம் தண்ணீரை சூடுபடுத்தும் கருவிகள் மற்றும் சூரிய ஒளி போட்டோ வோல்டேக் பவர் பிளாண்ட் ஆகியவை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மூலம் நிறுவப்படும்.

இது மட்டுமல்லாமல், 1,000 ஏழை, எளிய மாணவ – மாணவியர் பயன்பெறும் வகையில், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் பிற்படுத்தப்பட்டோருக்கான 5 விடுதிகள், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 3 விடுதிகள், சீர் மரபினருக்கான ஒரு விடுதி மற்றும் சிறுபான்மையினருக்கான ஒரு விடுதி என மொத்தம் 10 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுக் கட்டடங்களில் இயங்கி வரும் 1,000 விடுதிகளில் சுமார் 767 விடுதிகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்பது எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் நல்ல அமைதியான, சுகாதாரமான சூழ்நிலையில் தங்கி கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இவ்விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ஒரு முறை ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு தற்போது ஒரு இலட்சம் ரூபாயாக உள்ளது. இது 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 23 கோடியே 24 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம் ஏறத்தாழ 1,05,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் பயனடைவர்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் சிறு கடன் திட்டத்தின் கீழ் 20 உறுப்பினர்கள் அடங்கிய மகளிர் சுய உதவி குழு ஒன்றிற்கு அதிக பட்சம் பத்து இலட்சம் ரூபாய் வரை 4 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. ஆடவர் சுய உதவிக் குழுக்களுக்கு அதே அளவில் 5 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. தனி நபர் மகளிருக்கு 'புதிய பொற்கால திட்டத்தின்' கீழும், ஆடவர் தனி நபருக்கு 'பொதுக் கால கடன் திட்டத்தின்' கீழும் அதிக பட்சம் ஒரு இலட்சம் ரூபாய் வரை முறையே 5 விழுக்காடு மற்றும் 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. இது தவிர, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்கள் தலா 2 உயர் ரக கறவை மாடுகள் வாங்குவதற்கு அதிக பட்சம் 60,000/– ரூபாய் வரை 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்குகிறது. இந்த நிறுவனம் இதுவரை 3,22,831 பயனாளிகளுக்கு 313 கோடியே 93 இலட்சம் ரூபாய் கடன் உதவி வழங்கியுள்ளது. மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு புதிய ஆழ் துளை கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதி ஏற்படுத்திக் கொள்ள வழங்கப்படும் 50 விழுக்காடு அரசு மானியத்துடன் கூடிய கடன் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் இதுவரை 785 பயனாளிகளுக்கு 3 கோடியே 84 இலட்சம் ரூபாய் அரசு மானியமாக வழங்கியுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்புகளைச் சார்ந்தவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக லாப நோக்கமின்றி செயல்பட்டு வரும் இந்த நிறுவனம் துவங்கப்பட்ட நாள் முதல் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலக கட்டடம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக சென்னை, எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், எழும்பூரில் 4 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 3 கிரவுண்டு மற்றும் 154 சதுர அடி பரப்பளவு கொண்ட அரசு நிலம் நிலக் கிரயமின்றி இந்த நிறுவனத்தின் பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இடத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலக கட்டடம் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்கள் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் முன்னேற்றம் அடையவும் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## 54 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல விடுதிகளுக்கு ரூ.52 கோடி மதிப்பில் சொந்தக் கட்டடங்கள்! - 9.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு ஏனையோருக்கு இணையான கல்வி மற்றும் வாழ்வாதாரங்கள் பெற வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் எனது தலைமையிலான அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் அறியாமையை நீக்குவதிலும், அவர்களின் கல்வி அறிவை வளர்ப்பதிலும், அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர தேவையான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மாநில அரசால் செயல்படுத்தப்படும் மாநில போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டம், விடுதிகளில் மாணாக்கர் சேர்க்கை, குடிமைப் பணி பயிற்சி மையத்தில் சேர்க்கை, உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை உட்பட, அனைத்து திட்டங்களுக்கும் தற்போது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ஒரு இலட்சம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரம்பு இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் கூடுதலாக 30,000 மாணாக்கர்கள் பயன்பெறுவர்.

தற்போது முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ள கல்லூரியில் தங்கி பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு தலா 18,000 ரூபாயும், விடுதியில் தங்கி பயிலாத மாணாக்கர்களுக்கு 10,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள ஆதி திராவிட மாணவ – மாணவியருக்கு இந்தத் தொகை போதாது என்பதைக் கருத்தில் கொண்டு, முழு நேர முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் 700 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ – மாணவியருக்கு ஆண்டுக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்பொழுது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் 1,300 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 42 பழங்குடியினர் விடுதிகளும் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குழந்தைகள் கல்வி கற்பதற்காக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக இடை நிற்றல் கணிசமாக குறைந்துள்ளது. இருப்பினும், அதிக அளவு மாணாக்கர்கள் சேர்க்கையின் காரணமாக, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளில் உள்ள இட வசதி, குளியல் அறை வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டில் வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் 52 ஆதி திராவிட நல விடுதிகள், 2 பழங்குடியின நல விடுதிகள் என மொத்தம் 54 விடுதிகளுக்கு 52 கோடி ரூபாய் மதிப்பில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்பொழுது மத்திய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு முதன்மைத் தேர்வில் Main Exam-ல் சிறப்பாக செயல்பட அவர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வதற்காக சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக 50,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறும் தொகுதி I, அதாவது Group I முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு, அவர்கள் முதன்மைத் தேர்வை சிறப்பாக எதிர்கொள்ளும் வகையில், சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக தலா 50,000/– ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளும் வகையில் இவ்வாறு உதவித் தொகை வழங்கும் இத்திட்டம் முதன் முறையாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அறிமுகப்படுத்தப்படுகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த சட்ட பட்டதாரிகள் சுயமாக தொழில் தொடங்கிட ஒரு நபருக்கு 50,000 ரூபாய் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தோராயமாக 250 பயனாளிகள் பயன் அடைகின்றனர். இதே போன்று, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த பட்டயக் கணக்கர்கள் அதாவது Chartered Accountants, செலவுக் கணக்கர்கள், அதாவது Cost and Works Accountants தேர்ச்சி பெற்ற பின், அவர்கள் சுயமாக தொழில் தொடங்கிட ஒரு நபருக்கு 50,000 ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், தோராயமாக 100 பயனாளிகள் பயன் அடைவர்.

மாணாக்கர்களுக்கு கணினி வழியாக கல்வி கற்பித்து அவர்களின் புரிதல் திறனை மேம்படுத்தும் வகையில் Smart Class Room என்னும் புதிய தொழில் நுட்பம் நடப்பாண்டு முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத் துறையின் கீழ் இயங்கும் 100 மேல் நிலைப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சமுதாய மக்கள் கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மேம்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் - 9.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாற்றுத் திறனாளிகளை மனித சமுதாயத்தின் ஓர் அங்கமாக அனைவரும் அங்கீகரிக்கும் வகையிலும், நாட்டின் வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளின் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையிலும், ஏனைய மக்களுக்கு இணையாக மாற்றுத் திறனாளிகள் வாழும் வண்ணமும் எனது தலைமையிலான அரசு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர் கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் 1 முதல் 5–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 500 ரூபாயும், 6–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 1,500 ரூபாயும், 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 2,000 ரூபாயும், இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியருக்கு 3,000 ரூபாயும், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ–மாணவியருக்கு 3,500 ரூபாயும் கல்வி உதவித் தொகையாக ஆண்டுதோறும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத் திறனாளி மாணவ – மாணவியர் கல்வி கற்பதை மேலும் ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை நடப்பாண்டு முதல் இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 23,454 மாற்றுத் திறனாளி மாணவ – மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

தற்போது இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட 400 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவிகளுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய ஸ்கூட்டர்கள் பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளதால், பயனாளிகளின் எண்ணிக்கை தற்போதுள்ள 400 இல் இருந்து 1,000 ஆக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றிற்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் 6 வயது வரை உள்ள மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கென 32 ஆரம்ப பயிற்சி மையங்களும், செவித் திறன் குறையுடைய குழந்தைகளுக்கென 32 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களும், பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென 18 ஆரம்ப நிலை பயிற்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதில் பயன்பெறும் குழந்தைகளுக்கும் அவர்களது துணையாளர்களுக்கும் போக்குவரத்து பயணச் சலுகை வழங்கப்பட்டாலும், கடுமையாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மையங்களுக்கு தொடர்ந்து வருவது சிரமமாக உள்ளதால், இம்மையங்களின் முழு பயனையும் அவர்களால் பெற இயலவில்லை. எனவே, மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 32 நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்

தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிகிச்சைப் பிரிவு ஓர் ஊர்தியில் இயன்முறை சிகிச்சைக் கருவியுடன் செயல்படும். இச்சிகிச்சைப் பிரிவு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களின் கண்காணிப்பில், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் மற்றும் முட நீக்கு வல்லுநர் ஆகியோரைக் கொண்டு செயல்படும். இத்திட்டத்திற்கென தொடராச் செலவினமாக 3 கோடியே 52 இலட்சம் ரூபாயும், தொடர் செலவினமாக 97 லட்சம் ரூபாயும், என மொத்தம் 4 கோடியே 49 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ–மாணவியரின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில், 9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ–மாணவியருக்கு 1,500 ரூபாயும், இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியருக்கு 2,500 ரூபாயும், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ–மாணவியருக்கு 3,000 ரூபாயும் என வாசிப்பாளர் உதவித் தொகை ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டு முதல் இந்த வாசிப்பாளர் உதவித் தொகை இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 1,500 பார்வையற்ற மாணவ – மாணவியர் பயன்பெறுவர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு 19 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# 25 புதிய அரசுப் பேருந்து பணிமனைகள் அமைப்பு மற்றும் மலைப்பிரதேசங்களில் 250 சிற்றுந்துகள் அறிமுகம் - 10.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலகம் ஒரு குடும்பம் என்னும் தத்துவத்தை அடைய உறுதுணையாக இருக்கும் போக்குவரத்து சேவையினையும், போக்குவரத்து சேவையினை செவ்வனே புரிந்து வரும் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேம்பாட்டினையும் உயர்த்தும் உன்னதமான திட்டங்களை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்திலுள்ள போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பேருந்துகள் சேவை எவ்வித தொய்வும் இன்றி வழங்கிட பணிமனைகள் மிகவும் அவசியம் ஆகும். பணிமனைகள் அதிக அளவில் இருப்பது பேருந்துகள் பழுதுபடுதலை குறைப்பதுடன் டீசல் செலவையும் குறைப்பதற்கு வழிவகை ஏற்படுத்தும். கடந்த இரண்டு ஆண்டுகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் 43 பணிமனைகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பல சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த மாமன்றத்தில் பல இடங்களில் பணிமனைகள் அமைக்க வேண்டும் என கோரியுள்ளனர். பணிமனைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும் வகையில், மாநகர போக்குவரத்துக் கழகத்தில் ஆதம்பாக்கம், குரோம்பேட்டை, பெரம்பூர், குன்றத்தூர், பெரும்பாக்கம், தையூர், கும்மிடிபூண்டி ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டத்தில் செங்கம், எலத்தூர் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சேலம் கோட்டத்தில்

ஓமலூர், பள்ளப்பட்டி ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கோயம்புத்தூர் கோட்டத்தில் சூலூர், மதுக்கரை, கிணத்துக்கடவு, பேரூர் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டத்தில் விராலிமலை, உப்பிலியாபுரம், பிராட்டியூர், கரூர், கும்பகோணம், பாளையம் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை கோட்டத்தில் காரியாப்பட்டி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களிலும்; தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி கோட்டத்தில் ஆலங்குளம், சாத்தான்குளம் ஆகிய இடங்களிலும் 25 பணிமனைகள் 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மலைப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள், மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு விரைவாக எளிதில் சென்று திரும்பும் வகையில் 35 கோடி ரூபாய் செலவில் 250 சிற்றுந்துகள் அதாவது Mini Bus Service புதியதாக அறிமுகப்படுத்தப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைநிற்றல் இன்றி அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தினை நிறைவு செய்யும் வகையில், அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. மேலும் தொழில் துறை மற்றும் அறிவியல் துறைகளில் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக தொழில் துறை நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களின் எண்ணிக்கையும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. எனவே, இதனால் ஏற்படும் கூடுதல் போக்குவரத்து தேவையினை நிறைவேற்றும் வகையிலும்,

அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையினை வழங்கிடும் வகையிலும், தற்போது சென்னை பெருநகரத்தில் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை 134 லிருந்து 200 ஆக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முன் பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில், குறைந்த பட்சம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பயணச் சீட்டுகள் முன் பதிவு செய்யும் குழுமப் பயணிகளுக்கு பயணத் தொகையில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும். இந்தச் சலுகை தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் இச்சலுகை வழங்கப்பட மாட்டாது.

போக்குவரத்து கழக நகர பேருந்துகளில் வழக்கமாக பயணம் செய்யும் பயணிகளுக்கு மாநகர் / நகர பேருந்துகளில் தற்போது மூன்றில் ஒரு பங்கு சலுகைக் கட்டணத்துடன் கூடிய மாதாந்திர பயணச் சீட்டு வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது. இந்தச் சலுகை புறநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், பயணிகளின் வசதிக்காக புதுப்பிக்கப்படக் கூடிய கையடக்க பயண அட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்படி பயணிகள் பயணிக்கும் போது அதற்குரிய கட்டணம் பயண அட்டையில் உள்ள தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம் அல்லது பேருந்து நிலைய அலுவலகம் மற்றும் நடத்துநரிடம் பணத்தினை செலுத்தி கையடக்க அட்டையினை புதுப்பித்துக் கொள்ளலாம். இத்திட்டம் முதற்கட்டமாக சென்னை மாநகர்

போக்குவரத்துக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாகனப் பெருக்கம் மற்றும் சரக அலுவலகத்திற்கும் அதன் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அலுவலகங்களுக்கும் இடையில் உள்ள தூரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, நிர்வாகத் திறனை மேம்படுத்த வேலூரை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தப்படும்.

போக்குவரத்து வாகனத்திற்கான அனுமதிச் சீட்டு, வாகன மறு பதிவு, தடையில்லாச் சான்று, பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை பெற பொதுமக்கள் அதிக தூரம் பயணம் செய்வதைத் தவிர்க்கும் வகையில், சோழிங்கநல்லூர், அம்பத்தூர், வாணியம்பாடி, மயிலாடுதுறை மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருகி வரும் வாகன எண்ணிக்கை மற்றும் மக்கள் தொகை காரணமாக தற்போது இயங்கி வரும் போக்குவரத்து அலுவலகங்களில் அன்றாடப் பணிகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதன் விளைவாக, பொது மக்களுக்கு துரித சேவை செய்திட முடியாத சூழ்நிலை உள்ளது. பொதுமக்களுக்கு விரைந்து சேவை செய்யும் நோக்கில், மீனம்பாக்கம் வட்டாரப் போக்குவரத்து அலுவலக நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ள குன்றத்தூரில், கூடுதலாக ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில், கூடுதலாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது மக்கள், ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவு போன்ற பல்வேறு சேவைகளை உடனுக்குடன் பெறும் வகையில், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, கடலூர் மாவட்டம் பண்ருட்டி, விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, வேலூர் மாவட்டம் ஆம்பூர், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, திருச்சி மாவட்டம் லால்குடி, கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஆகிய இடங்களில், புதிய பகுதி அலுவலகங்கள் தொடங்கப்படும்.

சாலைப் பாதுகாப்பில் வாகன ஓட்டுநரின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டும், சாலை விபத்துகளை தவிர்க்கும் வண்ணமும், மொத்தமுள்ள 42 போக்குவரத்து ஓட்டுநர் தேர்வு தளங்களில், முதற்கட்டமாக 14 ஓட்டுநர் தேர்வு தளங்கள் இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் கணினிமயம் ஆக்கப்பட்ட ஓட்டுநர் தேர்வு தளங்களாக மாற்றி அமைக்கப்படும். கணினிமயம் ஆக்கப்பட்ட தேர்வுத் தளங்கள் மூலம் ஓட்டுநர் உரிமத் தேர்வு நடத்தப்படும் போது, தேர்வு முடிவுகள் அனைத்தும் கணினி வரைபடம் மூலம் துல்லியமாக பதிவு செய்யப்பட்டு, திறமையின் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் வழங்க இயலும்.

எனது தலைமையிலான அரசின் மேற்காணும் நடவடிக்கைகள் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் வசதியையும், போக்குவரத்து உரிமங்களை பெறும் பொதுமக்களின் வசதியையும், மேம்படுத்துவதோடு, சாலை விபத்துக்களை குறைக்கவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## ரூ.5 கோடி செலவில் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவக தொழில் நுட்பவியல் நிறுவனம் சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக நிலை உயர்வு!-10.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துவதிலும், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும், திறன் படைத்த கலைஞர்களைக் கண்டறிந்து ஊக்குவிப்பதிலும் அதிக அக்கறையுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் மூன்றாண்டு பட்டயப் பயிற்சியும், ஓராண்டு சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல், ஓட்டல் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் மற்றும் திறன் சார் பயிற்சித் திட்டங்களின் கீழ் திறன் சாராத நபர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் அனைத்து விதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக 5 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் என்ற கிராமத்தில் மலை மீது அமைந்துள்ள ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் கோயில் தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கை செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் கோயில் ஆகும். செங்கல் கோயிலாக இருந்த இக்கோயில், சோழ மன்னனான விக்கிரம சோழ அரசர் காலத்தில் கற்கோயிலாக மாற்றப்பட்டது. இக்கோயிலில் உள்ள இறைவனின் பெயர் தமிழில் திருவான்மிகை ஈஸ்வரமுடையார் என்றும், பெருமுக்கல் உடையார் என்றும் வடமொழியில் ஸ்ரீமுக்யாசலேஸ்வரர் என்றும் வழங்கப் பெறுகிறது. தற்போது, இக்கோயில் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளதால், வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கோயிலை பழமை மாறாமல் பாதுகாத்து மறு சீரமைப்புப் பணியை மேற்கொள்ள 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் திருக்கோயில்களும் அவற்றில் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இதுவரை தொல்லியல் துறையால் 24,060 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் தமிழ் பிராமி, வட்டெழுத்து, பண்டைய தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னடம், நாகரி போன்ற எழுத்து வடிவங்களில் உள்ளன. தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையால் 1967 ஆம் ஆண்டு முதல் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு மைப்படிகள் Estampages சிதைந்து, கிழிந்து போகும் அபாயத்தில் உள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி சீர் செய்து படிப்பதற்கு ஏற்றவாறு செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, இக்கல்வெட்டுகளை எண்ணிலக்கம், அதாவது Digitalization முறையில் ஆவணப் படுத்துவதற்காகவும், மாவட்டம், வட்டம், ஊர், கோயில்கள் வாரியாக மைப்படிகளில்

உள்ள குறிப்பிடப்பட்ட எண்களைக் கொண்டு தனித் தனியாக பிரித்து கணினியின் மூலம் பதிவு செய்வதற்காகவும், 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணிகள் நடப்பாண்டு முதல் மூன்று ஆண்டுகளில் செய்து முடிக்கப்படும். இதன் மூலம் தற்போதைய மற்றும் வருங்கால ஆய்வாளர்களும், மாணவர்களும் மிகுந்த பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள 6 கட்டடங்களுள், 3 கட்டடங்கள் தொன்மையான பாரம்பரியமிக்க கட்டடங்கள் ஆகும். அதாவது 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை. வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை. அத்தகைய கட்டடங்களில் ஒன்று ‘தேசியக் கலைக்கூடம்’ National Art Gallery ஆகும். அந்த காலகட்டத்தில் இங்கு தொடர்ந்து அறிவார்ந்த சொற்பொழிவுகள் நடைபெற்று வந்தன. சென்னையின் அடையாளக் கட்டடமாக விளங்கும் இந்தக் கட்டடத்தில் பாரம்பரியமிக்க தஞ்சாவூர், ராஜஸ்தான், டெக்கான், மினியேச்சர் எனப்படும் ஓவியங்கள் மற்றும் சந்தன மரச் சிற்பங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கட்டடம் பழுதடைந்ததாலும், இக்கட்டடத்தின் ஒரு பகுதி ஏறத்தாழ ஒரு பக்கம் அழுத்தப்பட்ட நிலையில் இருந்ததாலும், பொது மக்களின் பயன்பாட்டிற்கு உகந்தது அல்ல என்று 2002ஆம் ஆண்டு முடிவு செய்யப்பட்டு இந்த காட்சிக் கூடம் மூடப்பட்டது. எனினும், இந்தக் கட்டடம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடங்களை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு இந்த கட்டடத்தை ஆய்வு செய்து, இப்புராதனக் கட்டடம் தகுந்த வல்லுனர்களைக் கொண்டு பாதுகாக்கப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது. சென்னையின் அடையாளங்களில் ஒன்றான

இக்கட்டடத்தை பழுது பார்த்து புதுப்பிக்க 11 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலை பண்பாட்டுத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்குவதன் மூலம் பாடத்தை ஒட்டிய கணினி பயிற்சிகளான Photoshop, Dreamweaver, Director, Maya போன்ற Animation கணினி மென்பொருட்களை நன்கு பயன்படுத்தி கலை படைப்புகளைப் புதுமையாகவும், பார்ப்போர் வியக்கும் வண்ணமும் செய்ய இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த மூன்று கல்லூரிகளிலும் இளங்கலை பட்டப் படிப்பு பயிலும் 633 மாணவ மாணவிகளில் ஏற்கெனவே 12 ஆம் வகுப்பின் போது விலையில்லா மடிக்கணினி பெற்ற 59 மாணவர்களைத் தவிர்த்து, எஞ்சியுள்ள 574 மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகள் 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் B.A. (Music) அதாவது இளங்கலைப் பட்டப் படிப்பில் பயிலும் 32 மாணவ மாணவியரில் ஏற்கெனவே பள்ளிக் கல்வித் துறையின் மூலம் 12ஆம் வகுப்பில் விலையில்லா மடிக் கணினிகள் பெற்ற 4 மாணவர்களைத் தவிர, எஞ்சியுள்ள 28 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக் கணினிகள் 5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், நான்கு அரசு இசைக் கல்லூரிகள், இரண்டு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் ஒரு கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய ஏழு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. தற்போது திருவையாறு, மதுரை, கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், சென்னை அரசு இசைக் கல்லூரி, சென்னை அரசு கவின் கலைக் கல்லூரி மற்றும் மாமல்லபுரத்தில் உள்ள அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்படவில்லை. இந்த மூன்று கல்லூரிகளில் பயிலும் 801 மாணவ மாணவிகளுக்கும் எதிர் வரும் கல்வியாண்டில் இருந்து கட்டணமில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்படும். அதற்காக 10 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இசையானது ஆன்மாவுடன் தொடர்புடையது என்பதை சாதி, சமய, மத சார்பற்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது ஆகும். மனதையும், ஆன்மாவையும் இசைய வைப்பதே இசை.

மேற்கத்திய நடைமுறைகள் மற்றும் நாகரிகம், நமது இசையின் உண்மைத் தன்மையை அழித்துவிடாமல் பாதுகாக்கும் பொருட்டும், மேற்கத்திய மற்றும் பாரம்பரியம் அற்ற ஓவியங்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரவேற்பு நமது பாரம்பரியமிக்க ஓவியங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், தமிழகத்தின் தொன்மையான இசை மற்றும் கலையினை பாதுகாத்து, அவற்றினை எதிர்கால இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் வகையில், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்படும்

என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பல்கலைக்கழகத்தின் கீழ், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் உள்ள அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணத்தில் உள்ள அரசு கவின் கலைக் கல்லூரிகள், மாமல்லபுரத்தில் உள்ள அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மற்றும் இத்துறைகளைச் சார்ந்த அனைத்து உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் கல்லூரிகள் மற்றும் இசை, நடனம், கவின் கலைகளை கற்பிக்கும் கல்லூரிகள் செயல்படும். இதர பல்கலைக் கழகங்களில் நடத்தப்படும் இசை சார்ந்த, கவின்கலைப் புலம் சார்ந்த, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளும் இப்பல்கலைக்கழகத்தின் ஆளுமையின் கீழ் கொண்டு வரப்படும். இசை மற்றும் கலைக்கு பொதுவான பாட திட்டம், அவற்றை செயல்படுத்தும் நடவடிக்கைகள், ஆய்வுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள், தேர்வுப் பணி ஆகியவற்றை இந்த பல்கலைக்கழகம் மேற்கொள்ளும். இப்பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், நாதஸ்வரம், தவில், மிருதங்கம், கடம், கஞ்சிரா, முகர்சிங், புல்லாங்குழல், பரதநாட்டியம், நட்டுவாங்கம், கிராமியக்கலை ஆகிய 13 துறைகள் ஏற்படுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், தமிழகத்தின் பாரம்பரியமிக்க பண்பாடு மற்றும் கலைகளை நல்ல முறையில் பாதுகாக்கவும், அவற்றை இளைய சமுதாயத்தினர் இடையே எடுத்துச் செல்லவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## பி.ஏ.பி.எல்., [ஹானர்ஸ்] பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ-மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை! - 10.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களாட்சியில் சட்டத்தின் மாட்சியே மேலானது என்பதாலும், சட்டம் மனித சமுதாயத்தின் மாண்பை பேணிக் காப்பதாலும், மக்களின் எண்ணங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியதாக சட்டங்கள் விளங்குவதாலும், சட்டக் கல்விக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், சட்டக் கல்வியின் தரத்தை சர்வதேச சட்டப் பள்ளிகளின் தரத்திற்கு இணையாக அமைக்கும் வகையில், ஸ்ரீரங்கத்தில் 100 கோடி ரூபாய் செலவில் தேசிய சட்டப் பள்ளி ஒன்றிற்கு நான் அடிக்கல் நாட்டினேன். இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த சட்டப் பள்ளிக்கான மாணவ–மாணவியர் சேர்க்கை விரைவில் நடைபெற உள்ளது.

தற்போது அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கைப் பெறும் முதல் தலைமுறை பட்டதாரி

மாணவ–மாணவியருக்கு கல்விக் கட்டணத்தில் சலுகை அளிக்கப்பட்டு வருவதாகவும், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலை கழகத்தில் சேர்க்கைப் பெறும் மாணவ–மாணவியருக்கும் இந்த கல்வி கட்டணச் சலுகை அளிக்கப்படுவதாகவும், ஆனால் சீர்மிகு சட்டப் பள்ளியில் ஐந்தாண்டு பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) பயிலும் மாணவ–மாணவியருக்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கப்படுவதில்லை என்றும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

எனவே, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் சீர்மிகு சட்டப் பள்ளியில் பி.ஏ., பி.எல். (ஹானர்ஸ்) சட்டப் படிப்பிற்கான மாணவ–மாணவியர் சேர்க்கை அரசின் முகமையான தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மூலம் தகுதித் தேர்வின் அடிப்படையில் நடைபெறுவதாலும், இந்தப் படிப்பு சென்னையில் உள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் மட்டுமே பயிற்றுவிக்கப்படுகிற காரணத்தாலும், ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் மாணவ–மாணவியர் சேர்க்கை நடைபெறவில்லை என்றாலும், இதனைச் சிறப்பினமாகக் கருதி **2010–2011** ஆம் கல்வியாண்டு முதல் இப்பள்ளியில் பி.ஏ.பி.எல்., (ஹானர்ஸ்) பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியருக்கும் கல்வி கட்டணத்தில் சலுகை வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் மற்றும் சில சட்டக் கல்லூரிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் முதன் முதலாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது சட்டக் கல்விக்கென தனியாக தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை தெற்காசியாவிலேயே முதன் முதலாக நிறுவினேன். இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 7 அரசு சட்டக் கல்லூரிகளும், 1 தனியார் சுயநிதி சட்டக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. மேலும், சீர்மிகு சட்டப் பள்ளி மூலம் இளநிலை மற்றும் முதுநிலை ஹானர்ஸ் பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை நடத்தி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகம் தற்போது அமைந்துள்ள இடம் போதுமானதாக இல்லாததால் இங்கு பயிலும் மாணவ – மாணவியருக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தர இயலாத நிலை உள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் மேலும் சிறப்புடன் இயங்கும் வகையில், இப்பல்கலைக்கழகத்திற்கென பெருங்குடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிர்வாக கட்டடம், நூலக கட்டடம், இளநிலை மற்றும் முதுநிலை மாணவர்களுக்கான வகுப்பறைகள் அடங்கிய கட்டடங்கள், மாணவ மாணவியர் விடுதிகள், உள் மற்றும் வெளி விளையாட்டு அரங்கங்களை உள்ளடக்கிய ஒரு முழுமையான பல்கலைக்கழக வளாகத்தினை கட்டிட 59 கோடியே 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரி மாணவியருக்கு விடுதி வசதி உள்ளது போல், மாணவர்களுக்கும் விடுதி வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லுரி மாணவர்களுக்கு 9,275 சதுர அடி பரப்பளவில், 15 அறைகள் கொண்ட விடுதி கட்டிடம் கட்ட 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 70 மாணவர்கள் விடுதி வசதி பெறுவர்.

தற்போது தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வரும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு நிரந்தர கட்டட வசதி ஏற்படுத்தித் தரும் வகையில், வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு 17 வகுப்பறைகள், முதல்வர் அறை, ஆசிரியர்கள் அறை, நூலகம் மற்றும் அலுவலக அறை கொண்ட புதிய கட்டடம் 44,509 சதுர அடி பரப்பளவில் 7 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், நடப்பாண்டில் 240 மாணவர்களும், வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 5 ஆண்டு சட்டப் படிப்பு தொடங்கும் போது சுமார் 700 மாணவர்களும் பயன் பெறுவர்.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில் தற்போது உள்ள விடுதியில் சுமார் 38 மாணவர்களுக்கு மட்டுமே தங்கும் வசதி உள்ளது. வெளியூர்களிலிருந்து வந்து தங்கி கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் பலர் தனியார் விடுதி மற்றும் வாடகை வீடுகளில் தங்கியிருந்து சட்டப்

படிப்பை மேற்கொள்கின்றனர். எனவே, கூடுதலாக 50 மாணவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயில ஏதுவாக, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு இரண்டு தளத்துடன் கூடிய 9,362 சதுர அடி பரப்பளவில் ஒரு புதிய விடுதிக் கட்டிடம் கட்ட 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் தமிழகத்தைச் சார்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவ–மாணவியர் பயன் பெறவும், சட்டம் பயிலும் மாணவ–மாணவியருக்கான வசதிகள் மேம்பாடு அடையவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## ரூ.30 கோடி செலவில் மதுரை மற்றும் கோவையில் பெண் சிறைவாசிகளுக்கென புதிய சிறைகள் அமைப்பு!-10.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குற்றவாளிகளை சிறையில் அடைத்து, எதிர்காலத்தில் குற்றம் இழைக்காத வண்ணம் சீர்திருத்தி, அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கும் புனிதமானப் பணியை மேற்கொண்டு வரும் சிறைத் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், சிறை வாசிகளின் நலன் மற்றும் மறுவாழ்வினைக் கருத்தில் கொண்டும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தற்போது சென்னை, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய 3 இடங்களில் மட்டுமே பெண்களுக்கு தனிச் சிறைகள் இருப்பதால், பெண் சிறைவாசிகள் தங்களுடைய சொந்த மாவட்டத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் சிறைவாசி 350 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருச்சி சிறையில் அனுமதிக்கப்படுகின்றார். இவ்வாறு நீண்ட தூரத்தில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்படுவதால் சிறைவாசிகளை அவர்களது உறவினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சந்திக்க இயலாத நிலையும், சிறைவாசிகளை சம்மந்தப்பட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துவதிலும் மிகுந்த சிரமங்கள்

ஏற்படுகின்றன. இந்த சிரமங்களை தவிர்க்கும் வகையில், தென் மாவட்டங்கள் மற்றும் மேற்கு மாவட்டங்களிலிருந்து வரும் பெண் தண்டனை சிறைவாசிகளை தங்க வைப்பதற்காக 30 கோடி ரூபாய் செலவில் முறையே மதுரை மற்றும் கோயம்பத்தூரில் புதியதாக தனிச் சிறைகள் உருவாக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் 9 மத்திய சிறைகள், 10 மாவட்ட சிறைகள் என மொத்தம் 19 மாவட்டங்களில் சிறைகள் உள்ளன. மீதமுள்ள 13 மாவட்டங்களில் மாவட்ட சிறைகள் அமைக்கப்படுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதல் கட்டமாக திருப்பூர், தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 39 கோடி ரூபாய் மதிப்பில் மாவட்ட சிறைச்சாலைகள் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், சிறை வளாகத்தில் பசுமையை மேம்படுத்தும் வகையிலும், சிறைவாசிகளை பயனுள்ள வகையில் பணியில் ஈடுபடுத்தும் வகையிலும், மதுரை மத்திய சிறையில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தினை புழல் மத்திய சிறை வளாகத்திலும் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை மற்ற சிறைச் சாலைகளிலும் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 6 மத்திய சிறைகள், 2 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகியவற்றில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் மூலம் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மரபு முறையில் உற்பத்தி செய்யப்படும் மின்சார தேவையை குறைத்திடவும், சிறையின் மின் தேவையை மரபு சாரா எரிசக்தியின் மூலம் பூர்த்தி செய்யும் வகையிலும், மேற் கூரை சூரிய ஒளி உற்பத்தி முறை, அதாவது Roof top Solar Photo voltic முறையினை புழல் மத்திய சிறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஏனைய மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை ஆகிய சிறைகளிலும் 35 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புதிய அறிவிப்புக்கள் சிறைத் துறையை நவீனமயம் ஆக்குவதுடன், சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், சிறைவாசிகள் குறிப்பாக பெண் சிறைவாசிகள் நல வாழ்வினை மேம்படுத்தவும் உறுதுணை புரியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

# வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் அமைக்கப்படும்! -13.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நலத் திட்டங்களையும், நாட்டிற்கான வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரங்களை ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிப்பவை வணிக வரிகள் மற்றும் பத்திரப் பதிவுத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் இந்தத் துறைகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் எனது தலைமையிலான அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் கீழ், தற்போது ஓட்டல்களில் வாடகைக்கு விடப்படும் அறைகளின் கட்டணம் 199 ரூபாய் வரையில் இருந்தால் வரி விலக்கும், 200 ரூபாய் முதல் 499 ரூபாய் வரையில் இருந்தால் 5 விழுக்காடு வரியும், 500 ரூபாய் முதல் 999 ரூபாய் வரையில் இருந்தால் 10 விழுக்காடு வரியும், 1,000 ரூபாய் மற்றும் அதற்கு மேலிருந்தால் 12.5 விழுக்காடு வரியும் ஆடம்பர வரியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஆடம்பர வரி விலக்கிற்கான வாடகை உச்சவரம்பு 199 ரூபாய் என்பதை

உயர்த்த வேண்டும் என்று கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன. இந்தக் கோரிக்கையினை ஏற்று, ஆடம்பர வரி செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 199 ரூபாயிலிருந்து 499 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 500 ரூபாய்க்கு கீழ் வாடகை உள்ள அறைகளை வாடகைக்கு எடுக்கும் சாதாரண, நடுத்தர மக்கள் பயன்பெறுவர்.

அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் வணிகவரித் துறை அலுவலகங்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருவதால் பொதுமக்களுக்கும், பணியாளர்களுக்கும் ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்டு, 2011–2012ஆம் ஆண்டில் 34 அலுவலகங்களுக்கும், 2012–2013ஆம் ஆண்டில் 16 அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டில் வாள் வச்ச கோஷ்டம், தேவகோட்டை, சிதம்பரம், ஆற்காடு, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 7 இடங்களில் இயங்கி வரும் 9 வணிகவரி அலுவலகங்களுக்கு 10 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடங்களில் ‘‘தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை–2012’’–ன் நோக்கங்களின்படி சூரிய சக்தியினைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான மேற்கூரைகள் பொருத்தப்படும்.

சார்பதிவாளர் அலுவலகங்களில் பாதுகாக்கப்பட்டு வரும் ஆவணங்கள் நிரந்தரமான பதிவுறுக்கள் என்பதால், அவற்றை தீ விபத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது

அவசியமாகும். எனவே, அனைத்து அலுவலகங்களுக்கும் தீ விபத்து தடுப்பு உபகரணங்களான தீ தடுப்பான்கள், தீ தடுப்பு வாளிகள், மின் இணைப்பு முறிப்பான்கள், அலுமினிய ஏணிகள் ஆகியவை வழங்கப்படும் என்பதையும், இவற்றைப் பயன்படுத்த பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படும் என்பதையும் இதற்காக 4 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவுத் துறையை கணினிமயம் ஆக்கப்படுவதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அலுவலக நகல்கள் காகித வடிவில் உள்ளன. இந்தப் பதிவுறுக்கள் துறையின் பணியாளர்களால் அடிக்கடி கையாளப்படுவதால் காகிதத்தினால் ஆன இந்தப் பதிவுறுக்கள் சிதிலமடைந்தும், எளிதில் கிழிந்து விடக் கூடியதாகவும் ஆகி விடுகின்றன. இவற்றை எவ்வித சேதமும் அடையாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை நுண்ணிய படம் பிடிக்கவும் Micro Filming செய்யவும்; மற்றும் அவற்றை மின்னணு மயம் ஆக்கவும் Digitisation செய்யவும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்; காகித வடிவில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவுறுக்கள் 140 கோடி ரூபாய் செலவில் நுண்ணிய படம் பிடித்து மின்னணு மயம் ஆக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களிடமிருந்து வில்லங்கச் சான்றுகள் கோரி வரப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், சார் பதிவாளர் அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் வேலைப் பளுவை குறைக்கும் நோக்கிலும், பொது மக்கள் தாங்களே இணைய தளம் மூலமாக

சொத்து தொடர்பான வில்லங்கங்களைப் பார்க்கவும், அதனை நகல் எடுத்துக் கொள்ளவும் வசதி செய்து கொடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் பொது மக்கள் தாங்கள் அறிய விரும்பும் சொத்து தொடர்பான வில்லங்கங்களை உடனுக்குடன் எந்த நேரமும் தெரிந்து கொள்ள முடிவதுடன் தங்களது சொத்தில் முறைகேடான ஆவணப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் அறிய இயலும்.

தமிழ்நாடு முழுவதும் **50** பதிவு மாவட்டங்கள் இருப்பினும், திருவள்ளூர், தேனி, பெரம்பலூர், திருவாரூர் ஆகிய வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் இல்லாத சூழ்நிலை தற்போது நிலவுகிறது. இந்தக் குறையை களையும் வகையில், ஒவ்வொரு வருவாய் மாவட்டத் தலைநகரத்திலும் ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பதிவு மாவட்டங்களின் ஆட்சி எல்லைகள் வருவாய் மாவட்டத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும். இந்த மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில், நிர்வாகப் பணிகளைக் கவனிக்கும் மாவட்டப் பதிவாளர் பதவி, உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு உயர்த்தப்படும். தற்போதுள்ள **45** தணிக்கை மாவட்டப் பதிவாளர் பணியிடங்கள் **85** ஆக உயர்த்தப்படும். சீட்டு, சங்கம், திருமணப் பதிவு தொடர்பான பணிகளைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டப் பதிவாளர் நியமிக்கப்படுவார். இதனால் நிர்வாகம் சீராவதுடன், தணிக்கைப் பணி மற்றும் சீட்டு, சங்கம், திருமணப் பதிவு தொடர்பான பணி செம்மைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் கால விரயம் இன்றி ஆவணப் பதிவினை மேற்கொள்ளும் பொருட்டு, பொது மக்கள் இணைய தளம்

மூலம் சார்பதிவாளருடன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆவணப் பதிவு செய்து கொள்ள முன்பதிவு செய்து கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆவணம் பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட நேரத்தை பொது மக்கள் இணைய தளம் மூலம் முன்பதிவு செய்து கொண்டு, அந்த நேரத்தில் சார் பதிவாளர் அலுவலகம் சென்று, தங்களது ஆவணப் பதிவு தொடர்பான பணிகளை விரைவாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பதிவுத் துறை அலுவலகங்களில் பதிவுத் துறை ஆவணங்களை பராமரிப்பதற்கும், பணியாளர்கள் முழு அளவில் பணியாற்றுவதற்கும் போதிய இட வசதி இல்லாததைக் கருத்தில் கொண்டும், சிறிய இடங்களுக்கு அதிக அளவு வாடகை தர வேண்டிய நிலை உள்ளதை கருத்தில் கொண்டும், பதிவுத் துறையில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்ட நான் ஏற்கெனவே உத்தரவிட்டு இருந்தேன். இதன் அடிப்படையில், 2011–2012 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டவும், 2012–2013 ஆம் நிதியாண்டில் 48 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 இடங்களில் 29 சார் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் தனித்தனியே 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

திண்டுக்கல், உதகமண்டலம், கோயம்பேடு மற்றும் செய்யார் ஆகிய நான்கு இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை வளாகங்களும், **35** சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித் தனியாக புதிய கட்டடங்களும் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கட்டடங்கள் சூரிய சக்தியின் மூலம் பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தும் விதமாகக் கட்டப்படும்.

வணிகவரி மற்றும் பதிவுத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் பொதுமக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# அனைத்து ஐ.டி.ஐ. மாணவர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப்படும் - 13.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உழைக்கும் தொழிலாளர்களின் உயர்விலும், தொழிற்சாலைகளின் பாதுகாப்பிலும், தொழில் அமைதியை ஏற்படுத்துவதிலும், வேலை தேடும் பல இலட்சம் இளைஞர்களின் எதிர்காலத்திலும் எனது தலைமையிலான அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணிகள் மாவட்ட அளவில் தொழிலாளர் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மதுரை மாவட்டம் நீங்கலாக பிற மாவட்டங்களில் இவ்வலுவலகங்கள் தற்போது வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்களுக்கு தொழிலாளர்கள் அதிக அளவில் வருவதால் மாவட்டந்தோறும் போதுமான உள் கட்டமைப்பு வசதியுடன் கூடிய சொந்த கட்டடம் கட்டுதல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதற்கட்டமாக திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர், வேலூர், தருமபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மற்றும் நீலகிரி ஆகிய 20 மாவட்டங்களில் உள்ள சமூக பாதுகாப்புத் திட்ட தொழிலாளர்

அலுவலர் அலுவலகங்களுக்கு சொந்த அலுவலக கட்டடங்கள் 40 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் தொழிலாளர் துறையை சார்ந்த பிற அலுவலகங்களுக்கும் இக்கட்டடங்களில் இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தொழில் உறவு சீராக இருந்தால் தான் உற்பத்தித் திறன் அதிகரிக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, தொழிலாளர் சட்டங்கள் மற்றும் நிருவாகவியல் சட்டங்களை மனித வள மேலாண்மை மற்றும் தொழிலுறவு அலுவலர்கள் அனைவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள உதவும் வகையில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் ‘‘தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்’’ என்ற ஓராண்டு பகுதி நேர பட்டயப் படிப்பு 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பணியில் உள்ளவர்கள் பயனடையும் வகையில், இப்பட்டயப் படிப்புக்கான வகுப்புகள் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் நடைபெறும். இப்படிப்பில் 50 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய வளர்ச்சி ஆகியவற்றிற்கு முக்கிய காரணிகளாக விளங்கும் தொழில் திறன் மற்றும் அறிவுத் திறன் ஆகியவற்றை உருவாக்குவதில் ஐ.டி.ஐ–கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இங்கு பயிலும் மாணவர்கள் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பயிற்சி பெற்றிட அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போது, பள்ளிக் கல்வியில், மாணவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைகளுடன் புத்தகங்கள் வாங்குவதில் பெற்றோருக்கு உள்ள சுமைகளைக் குறைத்திட பாடப் புத்தகங்களை அரசு

வழங்கி வருகிறது. இது போல், அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஐ.டி.ஐ—களில் பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களுக்கும் ஐ.டி.ஐ. பாடத் திட்டத்தின்படி வெளியிடப்படும் கருத்தியல் பாடப் புத்தகங்கள், செய்முறை விளக்கப் பாடப் புத்தகங்கள், பயிற்சிப் பாடப் புத்தகங்கள், கணித பாடப் புத்தகங்கள், வரை பட பாடப் புத்தகங்கள், வரை பட விளக்க செய்முறை பாடப் புத்தகங்கள், ஆங்கில புலமை மற்றும் பேச்சாற்றலை வளர்க்கும் பணித் திறன் வளர்ப்பு பாடப் புத்தகங்கள் மற்றும் மாணவர்கள் பொறியியல் வரை படங்களை வரைவதில் தக்க பயிற்சி பெற தேவையான உபகரணங்கள் ஆகியவை வழங்கப்படும்என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். இதன் மூலம் அரசு ஐ.டி.ஐ—களில் பயிலும் சுமார் 26,000 பயிற்சியாளர்கள், அரசு உதவிப் பெறும் ஐ.டி.ஐ—களில் பயிலும் சுமார் 1,683 பயிற்சியாளர்கள் என மொத்தம் 27,683 பயிற்சியாளர்கள் பயன்பெறுவர்.

வேலைக்கு தகுதி பெறும் திறனை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள ஐ.டி.ஐ—களில் அனைத்து தொழிற் பிரிவுகளிலும் பயிற்சி பெறுவோருக்கான பாடத் திட்டத்தில் மொழித் திறன், கணினித் திறன் மற்றும் மென் திறன் பயிற்சி குறித்த பாடப் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய பயிற்சிகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, அனைத்து அரசு ஐடிஐ—களிலும் மொழி மற்றும் மென் திறன் ஆய்வகங்கள் 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆய்வகங்களை அமைக்க தேவைப்படும் இடங்களில் புதிய கட்டடம், மொழித் திறன் பயிற்சிக்கான மென்பொருள், கணிப் பொறிகள் மற்றும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆகியவற்றிற்கான செலவினங்கள் இதில்

மேற்கொள்ளப்படும். இதன் மூலம் சுமார் 25,231 அரசு தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் பயன்பெறுவர்.

அரசு ஐ.டி.ஐ.–களில் தற்போது கணிப்பொறி தொடர்புடைய பிரிவுகளில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மட்டும் மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. கணிப்பொறி அல்லாத பிற தொழிற் பிரிவுகளில் பயிலும் ஐ.டி.ஐ மாணவர்கள் அனைவருக்கும் கணிப்பொறி பயிற்சி பெறுவது தற்போது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளதாலும், அரசு கல்லூரிகள், மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கு அவர்கள் படிக்கும் பாடப் பிரிவுகளைக் கணக்கில் கொள்ளாது அனைவருக்கும் மடிக்கணினி வழங்கப்படுவதாலும், இதே அடிப்படையில், ஐ.டி.ஐ.–களில் பயிற்சி பெறும் அனைத்து தொழிற் பிரிவு மாணவர்களுக்கும் மடிக்கணினி வழங்கப்படும் என்பதையும் இதற்கென 35 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஐ.டி.ஐ.–களில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் பேருந்து பயணச் சலுகை, 500 ரூபாய் மாத உதவித் தொகை, விலையில்லா மிதி வண்டி, 2 செட் சீருடை, 1 ஜோடி காலணி போன்ற சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பள்ளிகளை பொறுத்தவரை அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் வழங்கப்படுவதைப் போல, அரசு ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான பேருந்து பயண சலுகை, 500 ரூபாய் மாத உதவித் தொகை, விலையில்லா மிதிவண்டி மற்றும் மடிக்கணினி ஆகியவை, இனி அரசு உதவி பெறும் தனியார்

ஐ.டி.ஐ. மாணவர்களுக்கும் வழங்கப்படும் என்பதையும் இதற்கென 3 கோடியே 7 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 1,683 பேர் பயன் பெறுவர்.

தொழிற் பயிற்சி பெறுவதில் மகளிர் சிரமமின்றி பங்கு பெற வேண்டும் என மகளிருக்காக தனியாக 12 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன. இதில் 2003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கரூர் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையம் இன்று வரை வாடகைக் கட்டடத்தில் வசதி குறைவுடன் இயங்கி வருகிறது. மகளிர் சிரமமின்றி தொழிற் பயிற்சி பெறும் வகையில், கரூர் மகளிர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆய்வுக்கூடம், வகுப்பறை, அலுவலக அறை, நூலக அறை ஆகிய வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன் பயிற்சி வழங்கும் நோக்கில் இயங்கி வருகின்ற தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்ககம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகக் கட்டடத்தில் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. திறன் பயிற்சிகளை வழங்குவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, கிண்டி, மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் தற்போது கட்டப்பட்டு செயல்பட்டு வரும் கட்டடத்தின் மேல் கூடுதலாக இரண்டு தளங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கக அலுவலகத்திற்கு 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது

மட்டுமல்லாமல், அரசின் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் அனைத்து திறன் எய்தும் பயிற்சிகளுக்கு ஒருங்கிணைவு முகமையாக செயல்படும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு மையத்தின் மூலம், அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தரக்கூடிய சில்லறை வர்த்தகம், உபசரிப்பு மேலாண்மை, மருத்துவ சேவைகள், தானியங்கி, கட்டுமானம், ஓட்டுநர் பயிற்சி, பாதுகாவலர் பணிகள், தோல் மற்றும் தோல் பொருள்கள், ஜவுளி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், திறன் எய்தும் பயிற்சி, கைபேசி பழுது பார்த்தல், பற்ற வைத்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிப்பு, கனரக பொறியியல், உணவு பதனிடுதல், வங்கி மற்றும் நிதி சேவைகள், ஆபரணக் கல் மற்றும் நகை தயாரித்தல் போன்ற 18 துறைகளில் நடப்பாண்டில் 2 இலட்சத்து 24 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறன் பயிற்சி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள் தொழில் திறன் மேம்பட்டு, வேலை வாய்ப்புகள் கிடைக்கவும், அறிவு சார்ந்த மனித வள சமுதாயம் உருவாகவும், தொழில் அமைதி உருவாகவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# 100 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவாக்கம்! -14.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அற நெறியையும், ஆன்மீக உணர்வையும், ஒழுக்கத்தின் மேன்மையையும், வளர்ப்பதோடு மட்டுமின்றி, புகழ் வாய்ந்த பழைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் பொக்கிஷங்களாக விளங்கும் திருக்கோயில்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பேணிப் பாதுகாப்பது, பக்தர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற பணிகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே என்ற புறநானூற்று வரிகளுக்கேற்ப திருக்கோயில்கள் வாயிலாக இறை அன்பர்களுக்கு அமுது படைக்கும் அரும்பணி எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது என்பதை பெருமையோடு இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிற்கு வருகை புரியும் பக்தர்களுக்கு நாள் முழுதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை நான் துவக்கி வைத்தேன். தற்போது 518 திருக்கோயில்களில்

அன்னதானத் திட்டம் சீரோடும், சிறப்போடும் செயல்பட்டு வருகிறது. பக்தர்களின் வருகையையும், தேவையையும் கருத்திற் கொண்டு இத்திட்டம் மேலும் 100 திருக்கோயில்களுக்கு இந்த ஆண்டில் விரிவுபடுத்தப்படும் என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவினம் ஏற்படும்.

ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் வளமிக்க தமிழ் மொழியில் இறைவனை போற்றி பாடப் பெற்ற நாலாயிர திவ்யப் பிரபந்தம் மற்றும் பன்னிரு திருமுறைகள் ஆகிய பாடல்களை பக்தர்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், ஸ்ரீரங்கம், அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் ஆழ்வார்கள் பாடல்கள் அடங்கிய கல்வெட்டு நந்தவனமும், திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் வளாகத்தில் நாயன்மார்களின் பாடல்கள் அடங்கிய கல்வெட்டு நந்தவனமும், சிறப்புற அமைக்கப்படும் என்பதை இந்த பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகமவிதியின்படி திருக்கோயில்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் திருப்பணி செய்து குட முழுக்கு நடத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, 2011–2012 ஆம் ஆண்டில் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குட முழுக்கு நடத்தப்பட்டது. அதே போன்று, 2012–2013 ஆம் ஆண்டிலும் 1906 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குட முழுக்கு சிறப்பாக நடத்தப்பட்டது. நடப்பாண்டில் மேலும் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்து குட முழுக்கு நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில்

அமையப் பெற்றுள்ள திருக்கோயில்கள், பல இடங்களில் கட்டுமானங்கள் நிறைவு பெறாமலும், மிகவும் சிதிலம் அடைந்த நிலையிலும் உள்ளன என்ற செய்தி எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதை அறிந்த நான் கடந்த 2011–2012ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென திருக்கோயில் ஒன்றுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை 25,000/– ரூபாயிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டேன். அதன் பயனாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆதிதிராவிட மக்கள் வாழும் 624 பகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன. நடப்பாண்டிலும், ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 1,006 திருக்கோயில்களுக்கு 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்வதற்காக வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 2011–2012ஆம் ஆண்டிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதன் மூலம், இதுவரை 300 திருக்கோயில்கள் பயன் பெற்றுள்ளன. கிராமப்புறங்களில் உள்ள மேலும் பல சிறு திருக்கோயில்கள் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, இவ்வாண்டு மேலும் 1,006 திருக்கோயில்களுக்கு திருப்பணி செய்திட திருக்கோயில் ஒன்றுக்கு 50,000/– ரூபாய் வீதம் 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு, திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி, கண்காணிப்பு கேமிரா ஆகியன பொருத்தவும் அங்குள்ள பாதுகாப்பு அறைகளை வலுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் இருக்கும் விலை உயர்ந்த பொருட்கள் தற்போது திருவாரூர், கும்பகோணம், திருச்சி, திருநெல்வேலி, காஞ்சிபுரம் போன்ற 19 இடங்களில் உள்ள பாதுகாப்பு மையங்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், பல திருக்கோயில்களில் பூஜையில் இல்லாத உலோக விக்கிரகங்களும், பயன்பாட்டில் இல்லாத ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களும் பாதுகாக்கப்படும் வகையில், கரூர், அரியலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின் கீழ் கொண்டு வரப்படாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணி புரிந்து 60 வயதினை நிறைவு செய்து ஓய்வு பெற்ற 2819 பூசாரிகளுக்கு வழங்கப்பட்டு வரும் 750 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 84 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

திருக்கோயில்களில் 10 ஆண்டிற்கு குறைவாக பணியாற்றிய ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த

நோக்கில் ''துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம்'' என்ற திட்டத்தை எனது அரசு ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் தற்போது 3,183 ஓய்வு பெற்ற பணியாளர்கள் மாத ஓய்வூதியமாக தலா 800/– ரூபாய் பெறுகின்றனர். இந்த ஓய்வூதியம் 1,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 76 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில் நிருவாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 490 திருக்கோயில்கள், ஒரு பெண்கள் கல்லூரி, ஒரு மேல்நிலைப்பள்ளி, இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை செம்மையாக நிருவகிக்க போதுமான நிதி வசதி இல்லை என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நிருவாகத்தில் ஏற்பட்டுள்ள நிதி இடர்பாடுகளை களைந்து செம்மையான நிருவாகத்தை மேற்கொள்ள தற்போது ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படும் 1 கோடி ரூபாய் மானியம் 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொன்மை மிகு திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புதுப்பிக்க பதின்மூன்றாவது நிதி ஆணையத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 2011–2012 ஆம் ஆண்டு 94 திருக்கோயில்களுக்கு 22 கோடியே 50 இலட்சம் ரூபாயும், 2012–2013ஆம் ஆண்டிற்கு 43 திருக்கோயில்களுக்கு 22 கோடியே 50 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 45 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு 49 தொன்மையான திருக்கோயில்களை அவற்றின் தொன்மை மாறாது புதுப்பிக்க 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்தில் உள்ள இரணியல் கிராமத்தில் 2.43 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த இரணியல் அரண்மனையை பாதுகாக்கும் வகையில், இந்த அரண்மனைக் கட்டடத்தை அனுபவம் வாய்ந்த தொல்லியல் வல்லுநர்கள் உதவியுடன் புதுப்பிக்க 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுமார் 50 திருக்கோயில்களில் உள்ள பழமையான ஓவியங்கள் பல இடங்களில் போதிய பராமரிப்பின்றி மிகவும் சிதிலம் அடைந்து அழிவுறும் அபாயம் உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த பழமையான ஓவியங்கள் தொல்லியல் துறை வல்லுநர்களையும் தொல்லியல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற வேதியியல் நிபுணர்களையும் கொண்டு பழமை மாறாது புதுப்பித்துப் பராமரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலையசுவாமி திருக்கோயில் ஏழு நிலை இராஜகோபுரத்தில் அமைந்துள்ள சுவர் ஓவியங்களை அதன் பழமை மாறாது புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

✵ ✵ ✵

## “முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்” என்ற புதிய திட்டம் அறிமுகம்! -14.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறிவாற்றலை வளர்க்கக் கூடிய கல்வி, ஆரோக்கியத்தை பேணிக் காக்கக் கூடிய விளையாட்டு ஆகிய இரண்டும் இளைய சமுதாயத்தின் இரு கண்கள் என்பதால் இவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டை விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே தலை சிறந்த மாநிலமாக உருவாக்கும் வகையில், இதற்கென தனியாக ஒரு புதிய கொள்கை உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கொள்கை, சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் இடையே விளையாட்டில் ஈடுபட வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், விளையாட்டிற்கு ஏற்றப்படி அவர்களது உடலை தயார்படுத்தும் முறைகள், மாற்றுத் திறனாளிகள் இடையே விளையாட்டு ஆர்வத்தை ஏற்படுத்துதல், விளையாட்டு அரங்கங்கள் அமைத்தல், பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் பெறுவதற்கு வழிவகை செய்யும் பயிற்சிகள் அளித்தல், அந்த பயிற்சிகளை தருவதற்கு தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் தெரிவு செய்தல், விளையாட்டுகளுக்கு

அடிப்படை தேவைகளான தடகள தளங்கள், நீச்சல் குளங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளை உருவாக்குதல், விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

உடல் ஆரோக்கியம் பேணப்படுவதன் மூலம் நோய் விகிதம் மற்றும் இறப்பு விகிதம் குறையும் என்பதன் அடிப்படையிலும், ஆரோக்கியமான, துடிப்பான வாழ்க்கை பல்வேறு நோய்களை தடுக்கும் கேடயம் என்பதைக் கருத்தில் கொண்டும், அனைத்துத் தரப்பு மக்களும் ஆரோக்கியமான வளமான வாழ்வை பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் ‘‘முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்’’ என்ற ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஊடகத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், குடியிருப்பு மற்றும் பல்வேறு நலச் சங்கங்கள், விளையாட்டு இணையங்கள், சுய உதவிக் குழு அமைப்புக்கள் மற்றும் இதர அமைப்புகளின் ஒத்துழைப்போடு செயல்படுத்தப்படும்.

**1993** ஆம் ஆண்டு என்னால் துவக்கி வைக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் புதிய செயற்கை புல் ஓடு தளம், கால் பந்து வளாகம், புதுப்பிக்கப்பட்ட அலுவலகம் ஆகியவற்றுடன் புதிய பொலிவு பெற்று விளங்குகிறது. தற்போது பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் அருகில் செயற்கை இழை தடகள ஓடு தளம் மற்றும் இயற்கை புல் வெளி கால்பந்து திடல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் விளையாட்டு வீரர்கள் மேலும் பயன் அடைவதற்கு ஏதுவாக ஸ்குவாஷ் அரங்கம், இறகுப் பந்து உள்ளரங்கம், கையுந்துப் பந்து, கூடைப் பந்து ஆடு களங்கள்

மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேக நீர் சிகிச்சை நீச்சல் குளம் ஆகியவை கொண்ட மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் வருங்காலத்தில் சர்வதேச அல்லது தேசிய அளவிலான போட்டிகள் இந்த ஒருங்கிணைந்த வளாகத்தில் நடத்த வழிவகை ஏற்படும்.

கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் பத்து விளையாட்டுகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சிறந்த முறையில் நடத்தி முடிக்கப்பட்டன. தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இடையே இந்தப் போட்டிகளின் மீதான தாக்கத்தை அதிகரிக்கும் நோக்கில், இந்தப் போட்டிகளை மேலும் வலுப்படுத்தி விளையாட்டுப் போட்டிகளின் தரம் அதிகரிக்கும் வகையில் தேசிய விளையாட்டுப் போட்டிகளைப் போன்று, National Games போன்று ''முதலமைச்சர் கோப்பைக்கான மாநில போட்டிகள்'' State Games for Chief Minister's Trophy ஆண்டுதோறும் நடத்தப்படும். இதில் முதல் மூன்று இடம் வெல்வோர் ஒவ்வொருவருக்கும் 1 இலட்சம் ரூபாய், 75,000 ரூபாய் மற்றும் 50,000 ரூபாய் முறையே ரொக்கப் பரிசாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டுதோறும் கூடுதலாக 2.57 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள் நடத்தும் போது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்குவதற்கான கட்டமைப்பு வசதிகள் மிகவும் குறைவாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, போட்டிகளில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்கள்

மற்றும் வீராங்கனைகளின் வசதிக்காக சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இரு இடங்களில் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன தங்குமிடம் மற்றும் உணவுக் கூட வசதிகள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சுமார் 6,000 ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் அலுவலக நாட்களில் நீண்ட நேரம் பணிபுரிந்து வருவதுடன், விடுமுறை நாட்களிலும் அலுவலகத்திற்கு வந்து பணியாற்றுகிறார்கள். தொடர்ந்து பல மணி நேரம் இருக்கையிலேயே அமர்ந்து பணி புரிய வேண்டிய சூழ்நிலையினால் அவர்களது உடல் நலம் பாதிக்கப்படுகிறது. ஊழியர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தால், பணிகளை விரைவாகவும், குறித்த காலத்திலும் முடிக்க இயலும். அவர்களின் பணித் திறன் அதிகரிக்கவும் வழிவகை ஏற்படும். எனவே அரசு ஊழியர்களின் உடல் நலத்தைப் பாதுகாக்க, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என தனித் தனியே அனைத்து வசதிகளுடன் கூடிய உடற் பயிற்சி கூடம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஆம் ஆண்டு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெற்ற போது, டென்னிஸ் போட்டிகள் நடத்துவதற்காக நவீன வசதிகளுடன் சென்னை நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்ட டென்னிஸ் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டு 18 ஆண்டுகள் கடந்த நிலையில் பன்னாட்டு அளவிலான போட்டிகள் நடத்த ஏதுவாக இங்குள்ள செயற்கை

இழை டென்னிஸ் ஆடு களங்கள், மின்னொளி அமைப்புகள், ஸ்கோர் போர்டு ஆகியவைகளை மாற்றி அமைப்பதுடன் பல்வேறு சீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உள்ளதால், தொலைக்காட்சி ஒளிபரப்பு வசதி, வீரர்கள் உடை மாற்றும் அறைகள், முக்கிய பிரமுகர்கள் அறை போன்ற பல்வேறு நவீன வசதிகளுடன் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் இந்த டென்னிஸ் விளையாட்டரங்கம் புனரமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட, விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் 25 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு விளையாட்டில் உயர் தர நுணுக்கங்களுடன் கூடிய விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம், அதாவது Centre of Excellence in Sports ஒன்று அமைக்கப்படும் என்றும் அதில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர் தங்கி பயிற்சி பெறுவார்கள் என்றும் ஏற்கெனவே நான் அறிவித்திருந்தேன். இதன்படி சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கிலும், சிறுமியர்களுக்கான மையம் நேரு உள் விளையாட்டரங்கிலும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தினை மேலும் விரிவுப்படுத்தும் நோக்கத்துடன், ஸ்ரீரங்கம், திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் விளையாட்டு உபகரணங்கள், நவீன உடற்பயிற்சிக்கூடம் ஆகிய வசதிகளுடன் கூடிய முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த மையங்களில் பயிற்சி பெறும் மாணவ–

மாணவியருக்கு அந்தந்த இடங்களில் உள்ள சிறந்த பள்ளிகளில் கல்வி பயிலவும் அரசு ஆவன செய்யும். இந்த மையங்கள் அமைக்க ஆண்டொன்றுக்கு 90 இலட்சம் ரூபாய் தொடரா செலவினமும், 60 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

சர்வதேச விளையாட்டரங்கில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவர்கள் மற்றும் உணவு நிபுணர்களின் ஆலோசனைப்படி விஞ்ஞான முறையில் விளையாட்டின் தன்மையின் அடிப்படையில் சத்தான சமச்சீர் உணவு வழங்கப்பட்டு வருவது அவர்களின் வெற்றிக்கு ஒரு மூல காரணம் என்பதைக் கருத்தில் கொண்டு, விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெற்று வரும் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சத்தான சமச்சீர் உணவு வகைகளை நாள்தோறும் வழங்குவதற்கு ஏதுவாக தற்போது வழங்கப்பட்டு வரும் தொகையான 75 ரூபாய், 250 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக, ஆண்டொன்றுக்கு கூடுதலாக 7 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் பயிலும் சிறுவர், சிறுமியருக்கு உணவுக்காக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 150 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் மேற்காணும் இடங்களில் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியருக்காக தனித்தனியே சிறப்பு விளையாட்டு விடுதிகளும் செயல்பட்டு வருகின்றன. இவர்களுக்கு உணவுப்படியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. மேற்காணும் முதன்மை விளையாட்டு மையம் மற்றும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப்படி இனிமேல் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 200 ரூபாய்

என உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக, ஆண்டொன்றுக்கு கூடுதலாக 57 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பயிற்றுநர்களின் பணியினை அங்கீகரிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் 8,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஆண்டொன்றுக்கு கூடுதலாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் இயங்கும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு 15 முதல் 20 ஆண்டுகள் முடிந்து விட்டப்படியால் அவைகளை சீரமைத்து புதுப்பிக்க வேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, விளையாட்டு அரங்கங்கள் மற்றும் கட்டமைப்புக்களை புதுப்பிக்க மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒரு முறை சிறப்பு மானியமாக 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை National Cadet Corps என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட இந்த தேசிய மாணவர் படைக்கென தனியாக எந்த விதமான பயிற்சி நிலையமும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டும், இதன் காரணமாக பயிற்சி முகாம்கள் நடத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும்,

தேசிய மாணவர் படைக்கென தனியாக பயிற்சி அகாடமி ஒன்று 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக தமிழகத்தில் உடற் கல்வி மற்றும் விளையாட்டிற்கென பல்கலைக்கழகம் 2005 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 125 ஏக்கர் பரப்பளவுள்ள மேலக்கோட்டையூர் என்ற இடத்தில் இயங்கி வரும் இந்தப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் உடற் பயிற்சி செய்திட பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடங்கள் அமையப் பெறவில்லை. இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ மாணவியரின் பாடத் திட்டத்திற்கு ஏற்ப பயிற்சி செய்திட 40 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கப்படும் என்பதையும், விளையாட்டுத் திடல் 35 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள், ஆரோக்கியமான தமிழகம் உருவாகவும், தமிழக விளையாட்டு வீரர்களின் திறன் சர்வதேச அளவில் மேம்படவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# மகளிர் கல்வி வளர்ச்சிக்காக "தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம்"! -14.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெண்களின் வளர்ச்சியை வைத்தே ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிட முடியும் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொட்டில் குழந்தை திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மகளிர் சிறப்பு அதிரடிப்படை, மகளிர் காவல் நிலையம், மகளிர் எழுத்தறிவுத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர்களுக்கான பிரத்யேக தொழிற்பேட்டைகள், மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் உதவிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம், பெண்களின் சுகாதாரம் பேணும் வகையில் விலையில்லா சானிடரி நேப்கின் வழங்கும் திட்டம், மகளிர் வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

மகளிர் மேம்பாட்டுக்காக நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

1. பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசும், காமன்வெல்த் பல்கலைக்கழகச் சங்கமும் இணைந்து கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் "தமிழ்நாடு காமன்வெல்த் அன்னை தெரசா மகளிர் பன்னாட்டு மையம்" என்ற பெயரில் ஒரு பன்னாட்டு மையம் தொடங்கப்படும். இந்த மையத்திற்கான

நிலத்தினை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் வழங்கும்; கலை நயத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக 5 கோடி ரூபாய் நிதி உதவியை தமிழக அரசு வழங்கும். இந்த மையம் மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பன்னாட்டு கல்வி அனுபவத்தை வழங்கும்.

2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 2013–2014 ஆம் ஆண்டில், தகுதியான மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும்.

3. மக்கள் நிலை ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட ஏழை குடும்பங்களுக்கு கடன் மீட்பு, மருத்துவ உதவி மற்றும் சிறிய வாழ்வாதாரங்களை மேற்கொள்வதற்கு உதவும் வகையிலும், திறன் வளர்ப்பு நடவடிக்கைகளுக்காகவும் 2,323 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் 232 கோடியே 30 இலட்சம் ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு உறுதுணையாக இருந்து வழி நடத்திடவும், அவர்களின் செயல்பாடுகளை கண்காணித்திடவும் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் ஊராட்சி அளவிலான 4,000 கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 40 கோடி ரூபாய் ஊக்க நிதி வழங்கப்படும்.

5. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முதற்கட்டமாக செயல்படுத்தப்பட்டுவரும் 60 வட்டாரங்களில் 25,000 சுய உதவிக் குழுக்களுக்கும், புதுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு

வரும் 120 வட்டாரங்களில் 25,000 சுய உதவிக் குழுக்களுக்கும் தொடர் கல்வித் திட்டம் மற்றும் பெண்கள் எழுத்தறிவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் ஒத்துழைப்புடன் படிப்பறிவு, எண்ணறிவு மற்றும் எழுத்தறிவு பயிற்சி அளிக்க 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

6. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த 100 ''மதி'' நடமாடும் அங்காடிகள் மற்றும் விற்பனை மையங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

7. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் பாலின பயிற்சி வழங்கப்படும்.

8. சுய உதவிக் குழு பெண்கள் மூலம் சூரிய சக்தி சாதனங்கள் பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் பராமரிக்கும் வகையில் 2013–2014ஆம் ஆண்டில், ஒரு வட்டாரத்திற்கு 10 பெண்கள் வீதம் 4,000 பெண்களுக்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

9. சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இருந்து 1,000 வங்கி முகவர்கள் உருவாக்கப்படுவர்.

10. சுகாதார சேவைகள் அனைவரையும் சென்றடையும் வகையில், 6300 சுய உதவிக் குழு பெண்களுக்கு 19 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுகாதார சமூக வல்லுநர் ஆவதற்கான பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மூலம் 88 இலட்சத்து 19 ஆயிரம் பெண்கள் மத்தியில், ''தொற்றா நோய்கள்'' குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

11. 1994–1995 ஆம் ஆண்டு நான் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த போது துவக்கப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கான கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 500 ரூபாயும், 6ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாயும் கல்வி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 1500 ரூபாய் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். இதன் மூலம் 2 இலட்சத்து 77 ஆயிரம் மாணவியர் பயனடைவர்.

12. தமிழ்நாட்டில் உள்ள 76 ஆதி திராவிடர் நல மாணவியர் கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவியர் தங்கள் உடமைகளை துவைப்பதற்காக அன்றாடம் அதிக நேரம் செலவிடுகின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு, இவர்கள் கல்வியில் தங்களது கவனத்தை முழுமையாக செலுத்தும் வகையில், இவ்விடுதிகளுக்கு துணிகளை துவைப்பதற்கு சலவை இயந்திரங்கள் வழங்கப்படும்.

13. 8,406 ஆதிதிராவிடர் இன மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட மகளிர் தொழில் தையல் கூட்டுறவு சங்கங்களில் உள்ள பழமையான தையல் இயந்திரங்கள் மூலம் அவர்களால் தற்போது மாணவ, மாணவியர்களுக்கு அதிகரித்து வழங்கப்படுகின்ற 4 ஜோடி சீருடைகளை உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்க

இயலவில்லை. மாணவ, மாணவியர்களுக்கான சீருடைகளை உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்க ஏதுவாக, இவர்களுக்கு நவீன தையல் இயந்திரங்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக திட்டத் தொகையில் 70 விழுக்காடு விளிம்புக் கடனாக, அதாவது Margin Money ஆக 4 விழுக்காடு வட்டிக்கு தாட்கோ மூலம் வழங்கப்படும். இதற்கான செலவினத் தொகையான 8 கோடியே 83 இலட்சம் ரூபாய் தாட்கோ பங்கு மூலதனத்தில் இருந்தும், மீதமுள்ள 30 விழுக்காடு சிறப்பு மைய நிதி உதவியில் இருந்தும் வழங்கப்படும்.

14. வெளியூரில், குறிப்பாக மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் பெருநகரங்களில் பணிக்குச் செல்லும் மகளிருக்கு குறைந்த கட்டணத்தில் பாதுகாப்பான உறைவிடங்கள் அதிகமாக தேவைப்படுகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, பெண்களுக்கு பாதுகாப்பான உறைவிட வசதிகளை செய்து தரும் வகையில் சமூக நலத் துறையின் மூலம், சென்னையில் இரண்டு இடங்களிலும், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தர்மபுரி மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களிலும் தலா ஒரு இடத்திலும் என மொத்தம் 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர், திருப்பூர், சேலம், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களில் தலா 1 விடுதி வீதம் 11 பணிபுரியும் மகளிர் விடுதிகளும், சென்னையில் 6 பணிபுரியும் மகளிர் விடுதிகளும், காஞ்சிபுரத்தில் 3 பணிபுரியும் மகளிர் விடுதிகளும் ஆக மொத்தம் 20 பணிபுரியும் பெண்களுக்கான அரசு

விடுதிகள் கட்டப்படும். இதன் மூலம் சுமார் 1,000 பணிபுரியும் பெண்கள் பயன் பெறுவர். ஒரு விடுதி கட்டுமானம் மற்றும் பராமரிப்பிற்கென 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் வீதம், 25 கோடி ரூபாய் செலவில் இந்த விடுதிகள் அமைக்கப்படும்.

15. தமிழ்நாட்டில் 4,530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு கடன் உதவிகளை அளித்து வருகின்றன. தற்போது குறுகிய காலப் பயிர்க்கடன் அளவு மற்றும் வேளாண் முதலீட்டுக் கடன் அளவு அதிகரித்துள்ள நிலையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறும் உறுப்பினர்கள் கூடுதலாக பங்குத் தொகை செலுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் உள்ள மகளிர் உறுப்பினர்கள் தங்கு தடையின்றி கடன் உதவி பெறும் வகையிலும், அவர்கள் கடன் வாங்கும் சக்தியினை அதிகரிக்கும் வகையிலும் 20,000 மகளிர் உறுப்பினர்களுக்கு 2,500 ரூபாய் வீதம் பங்குத் தொகை மானியமாக வழங்கப்படும். இதற்கென அரசு மானியமாக 5 கோடி ரூபாய் வழங்கப்படும். இதன் மூலம் மகளிர் தங்களது அத்தியாவசிய தேவைகளுக்காக 50,000 ரூபாய் வரை கடன் பெற இயலும்.

பெண்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் இந்த திட்டங்கள், பெண்களின் வாழ்வில் ஒரு புதிய மறுமலர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.100 கோடி மதிப்பீட்டில் மதுரையில் தமிழ்த்தாய் சிலை! -14.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திராவிட மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகவும், சீரிளமை குன்றாத மொழியாகவும், வளமையும் தூய்மையும் மிக்க மொழியாகவும், மொழிக்கு மட்டுமல்லாமல் வாழும் நெறிக்கும் இலக்கணம் வகுத்த மொழியாகவும், உலக மொழிகள் அனைத்திலும் தொன்மை மிக்க மொழியாகவும் விளங்குகின்ற தமிழ் மொழிக்கு பெருமை சேர்ப்பதிலும், அதனை உலகெங்கும் பரப்புவதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

பெருமை வாய்ந்த தமிழ் மொழியை சிறப்பிக்கும் வண்ணம், அமெரிக்கா நாட்டின் பெருமையையும் புகழையும் உலகளவில் பரப்பும் வகையில் அமைந்துள்ள சுதந்திர தேவி சிலையைப் போல, Statue of Liberty போல தமிழர்களின் நாகரீகம், பண்பாடு, இலக்கியச் செல்வங்கள், கட்டடக் கலைத் திறன் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்த் தாய் சிலை அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஐவகை நிலங்களான குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகியவற்றின் மாதிரிகளை உருவாக்கி தமிழர்களின் தொன்மைச் சான்றுகளாய் விளங்கும் சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டுள்ள மரம், செடி, கொடிகளுடன் தமிழ்த் தாய்ப் பூங்கா ஒன்றும் அங்கு உருவாக்கப்படும்.

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டு தோறும் சிறந்த தமிழ் அறிஞர்களுக்கு திருவள்ளுவர் விருது, திரு.வி.க. விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, பாரதியார் விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது ஆகியவை திருவள்ளுவர் திருநாளிலும், தமிழ்த் தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது ஆகியவை சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்றும் வழங்கப்படுகின்றன. அந்த வகையில், திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து திருக்குறளை பிற நாட்டு அறிஞர்களும் பாமரர்களும் புரிந்து கொள்ள வழிவகை செய்தவரும், அற நெறிக் கருவூலமான நாலடியார் மற்றும் திக்கெட்டும் தமிழ்ப் புகழ் பரப்பும் திருவாசகம் ஆகியவற்றை மொழி பெயர்த்தவரும் ஆன அயல்நாட்டு தமிழ் அறிஞர் திரு. ஜி.யு. போப் அவர்களின் தமிழ்த் தொண்டை போற்றும் வகையில், அயல் நாட்டு மொழிகளில் தமிழ் இலக்கியங்களை மொழி பெயர்க்கும் சிறந்த தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவருக்கு ஜி.யு.போப் விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படும். இதற்கென ஒரு இலட்சத்து **50** ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த விருது சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்கப்படும்.

இஸ்லாமிய தமிழ்க் காப்பியங்களில் சிறந்த காப்பியமான சீறாப் புராணத்தை இயற்றிய உமறுப் புலவர் தமிழுக்கு ஆற்றிய அருந்தொண்டை போற்றும் வகையில், தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றி வரும் தமிழ் அறிஞர் ஒருவருக்கு உமறுப் புலவர் பெயரில் விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு

விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம், தகுதியுரை மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும். இதற்கென ஒரு இலட்சத்து **50** ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த விருது சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்கப்படும். வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவிட வகை செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் ‘முதலமைச்சர் கணினித் தமிழ் விருது’ என்ற பெயரில் ஒரு விருது வழங்கப்படும். விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ஒரு இலட்சம் ரூபாய், தங்கப் பதக்கம், தகுதியுரை, பொன்னாடை ஆகியவை வழங்கப்படும். இதற்கென ஒரு இலட்சத்து **85** ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இந்த விருது சித்திரைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு அன்று வழங்கப்படும்.

இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலும் தமிழ்க் கல்வி வளர முதல் நடவடிக்கையாக டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை நிறுவிட **2003** ஆம் ஆண்டு **50** இலட்சம் ரூபாய் நிதி எனது அரசால் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒரிசா, உத்தர் பிரதேஷ், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கை நிறுவிட மானியங்கள் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளன. ஆந்திராவில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ் அறிஞர் மு.வ. அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தமிழ்த் துறை தொடங்கப்பட்டு தற்போது பொன்விழா கண்டுள்ளது. இத்தமிழ்த் துறையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ் முதுகலை,

முனைவர் பட்டப் படிப்பு  படித்து வருகின்றனர். ஆனால் தமிழ்த் துறையில் போதிய அளவு ஆசிரியர்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே அங்கு தமிழ்ப் படிக்கும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், வருங்காலத்தில் ஆந்திர மாநிலத்தில் தமிழ் மொழியை வளர்ப்பதைக் கருத்தில் கொண்டும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைக்கு 3 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு நிதி உதவியாக ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர் பண்பாட்டையும் நாகரீகத்தையும் போற்றி வளர்த்து வரும் தில்லி தமிழ்ச் சங்க வளாகத்தின் நுழைவாயிலில் தமிழர் தம் கட்டடக் கலையை வெளிப்படுத்தும் விதமாக தோரண வாயில் அமைத்திட வேண்டும் எனவும் அதற்கு தமிழக அரசு உதவிட வேண்டும் எனவும் தில்லி தமிழ்ச் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது. அவர்களின் கோரிக்கையை ஏற்று தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு தோரண வாயில் கட்ட நிதி உதவியாக  25 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களால்  1968ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உலகத் தமிழ்  மாநாட்டின் போது அறிவிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழர் தம் வாழ்க்கை வளத்தை எடுத்துக் கூறும் தொல் காப்பியத்தின் பெயரால் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆய்விருக்கை ஏற்படுத்தப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொல்காப்பியத்திற்கு எழுதியுள்ள பல்வேறு விளக்க உரைகளை ஒன்று சேர்த்து முறைப்படுத்துவது,

பிற பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொல்காப்பியம் குறித்தான பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகள் இந்த ஆய்விருக்கையின் மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கென உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 50 இலட்சம் ரூபாய் வைப்புத் தொகையாக வழங்கப்படும்.

நாட்டிற்காக பெருந்தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைச் செய்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களை கவுரவிக்கும் வகையிலும், வருங்கால சந்ததியினர் அவர்களின் தியாகங்களை அறிந்து கொள்ளும் வகையிலும் நினைவிடங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் மணி மண்டபங்களை அரசு உருவாக்கிப் பராமரித்து வருகிறது.

அந்த வகையில், வாள் வீச்சு, அம்பு எறிதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம் என பல்வேறு போர்க் கலைகளை கற்றறிந்தவரும், பல மொழிகளில் புலமைப் பெற்றவரும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக போராடிய முதல் இந்தியப் பெண்மணி என்ற பெயரை பெற்றவரும், சிவகங்கை சீமை மன்னர் பதவியை வகித்தவருமான வீர மங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு 80 இலட்சம் ரூபாய் செலவில் சிவகங்கை மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று நான் இந்த மாமன்றத்தில் அறிவித்தேன்.

இதன்படி, 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தருணத்தில், 8.4.2013 அன்று இந்த மாமன்றத்தில் வினாக்கள் – விடைகள் நேரத்தில் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள், வீர மங்கை வேலு

நாச்சியார் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் அரசு விழா நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

இவரது கோரிக்கையை ஏற்று, சுதந்திர போராட்ட வீரர் வீர மங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு சிவகங்கை மாவட்டத்தில் நினைவுச் சின்னம் அமைக்கின்ற பணிகள் முடிக்கப் பெற்றவுடன், அவரது பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏறத்தாழ 12 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள் உள்ள 3 ஏக்கர் பரப்பளவிலான இடம் பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளதைக் கருத்தில் கொண்டும், இங்கு வரக் கூடிய இலட்சக்கணக்கான மக்களை மகிழ்வூட்டும் வகையிலும், அந்த இடத்தினை மேம்படுத்தி இயற்கை எழில் கொஞ்சும் பூங்கா அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களது குடும்பச் சூழ்நிலைகளையும், தற்போதைய காலச் சூழ்நிலையையும், கருத்தில் கொண்டு, பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 6,000 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே போன்று, பத்திரிகையாளரின் மனைவிக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் 3,000 ரூபாயிலிருந்து 4,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் முக்கிய அங்கமாக விளங்கும் அரசு மைய அச்சகம் பல்லாண்டுகளாக தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. இங்கு அரசுத் துறைகளைச் சார்ந்த அனைத்து ஆவணங்களும் அச்சிடப்படுகின்றன. இந்த மையத்தின் காகிதக் கிடங்கு பழமை வாய்ந்த கட்டடத்தில் ஓடு வேய்ந்த கூரையின் கீழ் சிதிலம் அடைந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழமை வாய்ந்த அக்கட்டடத்தில் ஏற்படும் சேதங்கள் அவ்வப்போது சீரமைக்கப்பட்டு வந்தாலும், மழைக் காலங்களில் நீர் கசிவு ஏற்பட்டு காகிதங்கள் சேதம் அடைய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே அரசு மைய அச்சகத்திற்கு என புதிய காகித கிடங்கு 4,000 சதுர அடியில், 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் நடவடிக்கைகள் தமிழ் மொழியின் பெருமையையும், தமிழ் அறிஞர்களின் பெருமையையும் உலக அரங்கில் எடுத்துச் செல்ல வழி வகுப்பதோடு மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# ரூ.1,481 கோடி மதிப்பீட்டில் கடலோரப் பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம்! -15.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைத்துத் துறைகளுக்கும் தாய்த் துறையாகவும், அரசாங்கத்தின் முதுகெலும்பாகவும், ஏழை, எளிய மக்களின் துயர்களை களைந்து அவர்களை ஏற்றிவிடும் ஏணியாகவும் விளங்குகின்ற வருவாய்த் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு முனைப்புடன் எடுத்து வருகிறது.

வருவாய்த் துறையின் சேவை மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் உள்ள வருவாய் வட்டங்களில், 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட வட்டங்களை பிரிக்க பரிந்துரை செய்யும் வகையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு 4 இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை கொண்ட 62 வட்டங்களை கண்டறிந்து அவற்றில் 51 வட்டங்களை முதலில் பிரிக்க பரிந்துரை செய்துள்ளது. அதில் முதற்கட்டமாக மாநகரப் பகுதியில் உள்ள வட்டங்களை பிரிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

அதன்படி, இந்த நிதியாண்டில் சென்னை மாவட்டத்தில் உள்ள கோட்டை – தண்டையார்பேட்டை வட்டத்தினை பிரித்து புரசைவாக்கத்தில் ஒரு புதிய வட்டமும்; புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டத்தினை பிரித்து அயனாவரத்தில் ஒரு புதிய வட்டமும்; எழும்பூர்–நுங்கம்பாக்கம் வட்டத்தினை பிரித்து அமைந்தகரையில் ஒரு புதிய வட்டமும்; மைலாப்பூர்–திருவல்லிக்கேணி வட்டத்தினை பிரித்து வேளச்சேரியில் ஒரு புதிய வட்டமும்; மாம்பலம் –கிண்டி வட்டத்தினை பிரித்து கிண்டியில் ஒரு புதிய வட்டமும்; திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் வட்டத்தினை பிரித்து திருவொற்றியூரில் ஒரு புதிய வட்டமும்; அம்பத்தூர் வட்டத்தினை பிரித்து மதுரவாயலில் ஒரு புதிய வட்டமும்; திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வட்டத்தினை பிரித்து திருப்பூர் (தெற்கு) என்ற ஒரு புதிய வட்டமும்; அவினாசி வட்டத்தைப் பிரித்து ஊத்துக்குளியில் ஒரு புதிய வட்டமும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி வட்டத்தினை பிரித்து திருச்சிராப்பள்ளி (கிழக்கு) என்ற ஒரு புதிய வட்டமும்; மணப்பாறை வட்டத்தைப் பிரித்து மருங்காபுரியில் ஒரு புதிய வட்டமும்; மதுரை மாவட்டம், மதுரை (தெற்கு) வட்டத்தினை பிரித்து திருப்பரங்குன்றம் மற்றும் மதுரை (மேற்கு) ஆகிய இரு புதிய வட்டங்களும்; மதுரை (வடக்கு) வட்டத்தினை பிரித்து மதுரை (கிழக்கு) என்ற புதிய வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) வட்டத்தினை பிரித்து பேரூர் மற்றும் மதுக்கரை ஆகிய இரு புதிய வட்டங்களும்; சேலம் மாவட்டம், சேலம் வட்டத்தினை பிரித்து சேலம் (மேற்கு) மற்றும் சேலம் (தெற்கு) ஆகிய இரு புதிய வட்டங்களும்; வேலூர் மாவட்டம், வேலூர் வட்டத்தினை பிரித்து அணைக்கட்டில் ஒரு புதிய வட்டமும்; திருப்பத்தூர் வட்டத்தை பிரித்து நாட்றாம்பள்ளியில் ஒரு புதிய வட்டமும்; கரூர் மாவட்டம், கரூர் வட்டத்தைப் பிரித்து மண் மங்கலத்தில் ஒரு புதிய வட்டமும்; விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டத்தைப் பிரித்து, விக்ரவாண்டியில் ஒரு புதிய வட்டமும்; கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டத்தைப் பிரித்து,

வேப்பூரில் ஒரு புதிய வட்டமும்; தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டத்தைப் பிரித்து பூதலூரில் ஒரு புதிய வட்டமும்; திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தைப் பிரித்து, திண்டுக்கல் (மேற்கு) என்ற புதிய வட்டமும் என மொத்தம் 25 புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டில் உருவாக்கப்பட்ட 9 புதிய வருவாய் வட்டங்கள் மற்றும் தற்போது உருவாக்கப்பட உள்ள 25 புதிய வருவாய் வட்டங்கள் ஆகியவற்றை சேர்த்து கடந்த இரண்டாண்டு காலத்தில் 34 புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிக அளவு வருவாய் வட்டங்களை மட்டும் உருவாக்கினால் போதுமானதல்ல, அந்த வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு உரிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் குத்தாலம், திருவள்ளூர் மாவட்டத்தில் மாதவரம், திருப்பூர் மாவட்டத்தில் மடத்துக்குளம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சோழிங்கநல்லூர் மற்றும் வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர் ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மொத்தம் 16 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, நடப்பாண்டில் 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் தலா 14 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் குறு வட்ட அளவர்களை எளிதாக தொடர்பு கொள்ள வசதியாக, மொத்தமுள்ள 1,136 குறு வட்டங்களில், 100 குறு வட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் தலா 14 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் செலவில் குறு வட்ட அளவர்களின் பயன்பாட்டிற்காக கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், நடப்பாண்டில் 114 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள் தலா 8 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 9 கோடியே 36 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், 5,000 கிராம நிருவாக அலுவலகக் கட்டடங்கள் 25 கோடி ரூபாய் செலவில் நடப்பாண்டில் புதுப்பிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக கடலோர மாவட்ட மக்களுக்கு, கடல் சீற்றம், சுனாமி, புயல் போன்ற பேரிடர்களினால் ஏற்படும் பாதிப்பினை தணிக்கும் வகையில், ஏறத்தாழ 1,481 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடலோர பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம், அதாவது Coastal Disaster Risk Reduction Project இந்த நிதியாண்டில் உலக வங்கி நிதி உதவியுடன் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் 121 கடலோர பாதுகாப்பு மையங்கள் அமைத்தல், பாதுகாப்பு மையங்களுக்கான 50 கிலோ மீட்டர் நீளமுள்ள வழித் தடங்கள் அமைத்தல், 439 முன்னெச்சரிக்கை அறிவிப்பு கருவிகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். எனது தலைமையில்

அமைக்கப்பட்டுள்ள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், அதாவது Tamil Nadu Disaster Management Authority மூலமாக இத் திட்டத்தின் பணிகள் கண்காணிக்கப்படும். மேலும் இந்த ஆணையத்தின் மூலம் பேரிடர்களினால் ஏற்படும் இன்னல்களை கண்காணித்து அவற்றை தணிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாணையத்தை வலுப்படுத்தும் வகையில் புதிய கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இந்த ஆணையத்தின் மூலம் கடலோர மக்களுக்கு பேரிடர் தொடர்பான விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், இயற்கை சீற்றங்களினால் அதிக பாதிப்பிற்கு உள்ளாகும் கடற்கரை மாவட்டங்களான கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களின் நகரப் பகுதிகளில் அமைந்துள்ள மின் இணைப்புகளை மாற்றி புதியதாக பூமிக்கு அடியில் மின் கம்பிகளை பதித்து மின் இணைப்புகள் வழங்கப்படும் என்பதையும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டமானது, நடப்பாண்டில் தொடங்கி 5 வருடங்களில் முடிவடையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த திட்டங்கள் மூலம் பொதுமக்களும், வருவாய்த் துறையினரும் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## 150 பள்ளிகள் நிலை உயர்வு! புதிதாக 54 தொடக்கப் பள்ளிகள் அமைப்பு!-15.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மனித வாழ்க்கை வளம் பெறுவதற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது வற்றாத செல்வமாம் கல்வி என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் கல்விக்காக காசு செலவழிக்கத் தேவையில்லை என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி தமிழ்நாட்டில் கல்விப் புரட்சியையே ஏற்படுத்தியுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

மக்கள் தொகை 300 பேர் கொண்ட குடியிருப்பு பகுதிகளில் இருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் ஒரு தொடக்கப்பள்ளி அமைய வேண்டும் என்ற அடிப்படையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 54 குடியிருப்பு பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள் இல்லாதது கண்டறியப்பட்டுள்ளது. இந்த 54 குடியிருப்புப் பகுதிகளிலும் புதிய தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்பதையும், அப்பள்ளிகளுக்கு தேவைக்கேற்ப ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஒரு இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளை பொறுத்த வரையில், 5 கிலோமீட்டர் தொலைவிற்குள் ஓர் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தப்பட

வேண்டும் என்பதன் அடிப்படையில், மத்திய அரசால் நிதி உதவி அளிக்கப்படாத நிலையிலும், மாணவர்களின் நலன் கருதி, மாநில நிதியிலிருந்து 2013–2014ஆம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 300 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

இதே போன்று, 2013–2014ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்பதையும், இவ்வாறு தரம் உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 100 தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் பள்ளி ஒன்றுக்கு ஒன்பது முதுகலை ஆசிரியர் பணியிடம் வீதம் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1,000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென ஆண்டொன்றுக்கு 45 கோடி ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

தமிழகம் மற்றும் பிற மாநிலங்களை சார்ந்த தொழிலாளர்கள் பணிநிமித்தம் இடம்பெயர்ந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் தங்களது குடும்பங்களுடன் தற்காலிகமாக குடியேறுகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்த 6,081 தொழிலாளர்களின் குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தக் குழந்தைகளுக்கு கல்வி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் நல்நோக்குடன் “இடம் பெயர்ந்த தொழிலாளர்களின்

குழந்தைகளுக்கு கல்வி வசதி அளிக்கும் திட்டம்'' என்ற புதிய திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, இடம் பெயர்ந்து வந்த தொழிலாளர்களின் குழந்தைகள் அவர்தம் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள பள்ளிகளில் முறையாக சேர்க்கப்படுவர். இவர்களுக்கு அவர்களது தாய் மொழியும் கற்பிக்கப்படும். இதன் மூலம் அரசுக்கு தோராயமாக 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

மாணவ–மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் தரமானதாகவும், குறித்த காலத்திலும் வழங்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் வெவ்வேறு இயக்ககங்கள் கல்வி சார்ந்த பணிகளில் தனிக் கவனம் செலுத்தி சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், மாணவ – மாணவியருக்காக வழங்கப்படும் அனைத்து பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணி இனி வருங்காலங்களில் தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு வழங்கப்படும் என்பதையும், தமிழ்நாடு பாடநூல் கழகம் கொள்முதல் ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட ஏதுவாக ''தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்'' என பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு, விளையாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தருவது, பள்ளிகளில் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது, தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களை விளையாட்டு உபகரணங்கள் வழங்கி ஊக்குவிப்பது என பல்வேறு

முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நடப்பாண்டு முதல் மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறும் மாணவ–மாணவியருக்கு உதவி புரியும் வகையில், இதற்கென முதன் முறையாக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண் குழந்தைகள் மேல்நிலைப் படிப்பு பயில ஏதுவாக, மத்திய – மாநில அரசுகளின் நிதி உதவியுடன் 44 பெண்கள் விடுதிகள் கட்டுவதற்கு 2009–2010 ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டது. இருப்பினும், ஒப்பளிக்கப்பட்ட தொகை இவ்விடுதிகள் கட்ட போதுமானதாக இல்லை என்கின்ற காரணத்தினால், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. மத்திய – மாநில அரசுகளின் நிதி உதவியுடன் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதைக் கருத்தில் கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கூடுதல் நிதியை அளிக்குமாறு மத்திய அரசை கேட்டுக் கொள்ள உத்தரவிட்டேன். மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வராத சூழ்நிலையில், பெண்களுக்கான விடுதிகள் உடனடியாக கட்டப்பட வேண்டும் என்பதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு விடுதியிலும் 100 பெண்கள் தங்கக்கூடிய 44 பெண்கள் விடுதிகள் கட்டத் தேவைப்படுகின்ற கூடுதல் நிதியான 31 கோடியே 46 இலட்சம் ரூபாயை மாநில அரசின் நிதியிலிருந்து உடனடியாக ஒதுக்கீடு செய்யுமாறு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் 4,400 பெண் குழந்தைகள் பயன்பெறுவார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள 13 மாவட்டங்களில் 44 ஒன்றியங்கள் கல்வியில் பின்தங்கியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்த பகுதியில் உள்ள மாணவ–மாணவியரின் கல்வி தரத்தை

மேம்படுத்துவதற்காக 2012–2013 ஆம் ஆண்டு 26 மாதிரி பள்ளிகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிராமப்புற மாணவர்களுக்கு பயனளிக்கக்கூடிய இந்த மாதிரி பள்ளிகளை தரமுடன் உடனடியாக கட்டி முடிக்க கூடுதல் நிதி உதவி தேவைப்படுவது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இதற்கென 38 கோடியே 44 இலட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்மூலம் 10,640 மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

மேற்காணும் அரசின் நடவடிக்கைகள், கல்வியின் தரத்திலும், உட்கட்டமைப்பிலும், விளையாட்டுத் துறையிலும் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## சென்னையைப் போன்றே இதர 9 மாநகராட்சிகளிலும் மலிவு விலை உணவகங்கள்!-15.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்” என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் மலிவு விலையில் வயிறார உணவு உண்ணும் வகையில், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளிலும் மலிவு விலை உணவகங்களை நான் திறந்து வைத்துள்ளேன் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இந்தத் திட்டத்தின்படி, காலை 7 மணி முதல் 10 மணி வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், மதிய உணவாக நண்பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் பொதுமக்கள் மத்தியில் அமோக வரவேற்பினை பெற்றுள்ளது.

இந்தத் திட்டம் தமிழகத்தின் இதர பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், மற்றும் ஈரோடு ஆகிய ஒன்பது மாநகராட்சிகளில் முதற்கட்டமாக ஒவ்வொரு மாநகராட்சியிலும் 10 இடங்களில் மலிவு விலை உணவகங்கள் இந்த மாத இறுதிக்குள் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உணவகங்களிலும் காலை 7 மணி முதல் 10 மணி வரை இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், மதிய உணவாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் உணவகங்களுக்கு வரும் பொதுமக்கள் காலை சிற்றுண்டியில் கூடுதலாக பொங்கல் சேர்க்க வேண்டும் என்றும், மதிய உணவின் போது, கூடுதலாக சாத வகைகளை சேர்க்க வேண்டும் என்றும், மாலை நேரங்களில் சப்பாத்தி விநியோகிக்க வேண்டும் என்றும், கோரிக்கைகள் விடுத்துள்ளனர். பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, சென்னை மாநகரத்தில் செயல்படும் அனைத்து மலிவு விலை உணவகங்களிலும், காலை சிற்றுண்டியின் போது இட்லி தவிர, பொங்கல் – சாம்பார் 5 ரூபாய்க்கும், மதிய உணவின் போது எலுமிச்சை சாதம் அல்லது கருவேப்பிலை சாதம் 5 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாலை நேரங்களில் சப்பாத்தி விற்பனை செய்வதைப் பொறுத்த வரையில், சப்பாத்தி தயாரிப்பதற்கு தேவையான இயந்திரங்கள் மற்றும் பாத்திரங்களை ஒப்பந்தப் புள்ளி மூலம் கொள்முதல் செய்வதற்கு தேவைப்படும் கால அவகாசத்தைக் கருத்தில் கொண்டு, இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் சென்னை மாநகராட்சி நடத்தி வரும் 200 மலிவு விலை உணவகங்களிலும் மாலை வேளைகளில் இரண்டு சப்பாத்தி மற்றும் பருப்பு கடைசல் அல்லது குருமா 3 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும்.

இதன் மூலம், ஏழை, எளிய, நடுத்தர மக்கள் விலைவாசி உயர்விலிருந்து ஓரளவு பாதுகாக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✲ ✲ ✲

## விவசாயிகளுக்கு 80 விழுக்காடு மானியத்தில் 2,000 சூரியசக்தி பம்பு செட்டுகள்! -15.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையிலும், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாடு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்திற்கு இப்பொழுது கிடைக்கும் நீரினை வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்தி, பயிரிடும் பரப்பினை அதிகரித்து அதிக மகசூல் பெறுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதிகரித்து வரும் மின்சாரத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை மானியத்தில் வழங்கும் திட்டத்தை எனது தலைமையிலான அரசு முதன் முதலாக சென்ற ஆண்டு அறிவித்தது. இதனைச் செயல்படுத்தும் வகையில், டெல்டா மாவட்டங்களில் 500 சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை 80 விழுக்காடு

மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் பணிகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலம் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த பம்பு செட்டுகள் விரைவில் வழங்கப்படும்.

தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த பாசன நீர் மற்றும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, மின்சாரத்திற்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகின்ற இந்தச் சூழ்நிலையில், வேளாண் பாசனத்திற்கு ஒரு சிறந்த மற்றும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கவும், அதனுடன் நுண்ணீர் பாசன அமைப்புகளை இணைத்தும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2013–2014 ஆம் நிதியாண்டில், வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு குழாய் கிணறு, ஆழ் குழாய் கிணறு, திறந்த வெளி கிணறு மற்றும் தரை மட்ட நீர் தேக்க தொட்டியிலிருந்து நீரை இறைக்க ஏதுவாக, 80 விழுக்காடு மானியத்துடன் கூடிய, 5 குதிரைத் திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் சூரிய ஒளியினை முழுமையாக தொடர்ந்து பெற ஏதுவாக, நகரும் வகையில், Solar Tracking வகையில் அமையும் சூரிய தகடு பயன்படுத்தப்படும் 2,000 ஏ.சி பம்பு செட்டு அமைப்புகளை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தற்போதுள்ள நுண்ணீர் பாசன அமைப்புகளை நடைமுறையில் உள்ள நெறிமுறைகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்ற முதன்மை தொழில் நுட்பங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. ஒரு அமைப்பிற்கான செலவு தோராயமாக 5 இலட்சம் ரூபாய் ஆகும். இதில் அரசு மானியம் 80 விழுக்காடு, அதாவது

4 இலட்சம் ரூபாய் ஆகும். விவசாயியின் பங்களிப்பு 20 விழுக்காடு, அதாவது ஒரு இலட்சம் ரூபாய் ஆகும். இதற்கென அரசுக்கு 100 கோடி ரூபாய் செலவு ஏற்படும். விவசாயிகளின் பங்களிப்பான 20 விழுக்காடு தொகையை விவசாயிகள் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு ஏதுவாக, தேவைப்படும் விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு கூட்டுறவு வங்கிக் கடன் வசதி பெறவும் ஏற்பாடு செய்து தரப்படும்.

இத்திட்டம், விவசாயிகளுக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு உகந்த சூரிய சக்தியினை பயன்படுத்திடவும், நுண்ணீர் பாசனம் மூலம் பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்திடவும், வேளாண் பயிர்களில் உயரிய சாகுபடி முறைகள் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் பசுமை குடில் மற்றும் நிழல் வலை முறையில் சாகுபடி போன்ற பல்வேறு நவீன தொழில் நுட்பங்களுடன் உயர் மகசூல் ரகங்களையும் பயன்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்திடவும் இத்திட்டம் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## வீரத்தாய் குயிலிக்கு நினைவுச் சின்னம்- ஹைதர் அலி, திப்புசுல்தான் மற்றும் சுவாமி சகஜானந்தா ஆகியோருக்கு மணிமண்டபங்கள்! -15.5.2013

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட சுதந்திர போராட்ட வீரர்களையும், ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல் கொடுத்து தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காக பாடுபட்டவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்தும் அரும்பணியை எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம், தியாகி சங்கரலிங்கனார், வீரபாண்டிய கட்டபொம்மன், மனு நீதிச் சோழன் ஆகியோருக்கு மணி மண்டபங்களை அமைக்கவும், தீரன் சின்னமலை, வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கவும், தியாகி சிதம்பரநாதன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள் எழுப்பவும் ஆணையிட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், வீரமங்கை வேலு நாச்சியாரின் படைத் தளபதியாய் விளங்கி தன் உயிரை மாய்த்துக் கொண்ட வீரத் தாய் குயிலி அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படவிருக்கும் வளாகத்திலேயே ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதே கோரிக்கையை, இதற்கு முன்பே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களும் இந்த அவையில் வைத்திருக்கிறார். இவர்களின் கோரிக்கையை ஏற்று, வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு வரும் வளாகத்தில் வீரத்தாய் குயிலிக்கும் நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, மனித நேய மக்கள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் நேற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில், ஆங்கிலேயர்களை எதிர்ப்பதற்காக வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களை திண்டுக்கல்லுக்கு வரவழைத்து பீரங்கிகளையும், படை வீரர்களையும் வழங்கிய மாவீரன் ஹைதர் அலி மற்றும் ஆங்கிலேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய அவரது புதல்வர் திப்பு சுல்தான் நினைவாக திண்டுக்கல்லில் நூலகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன் அவர்களும் செல்வி

பாலபாரதி அவர்களும், திப்பு சுல்தான் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர்.

இவர்களது கோரிக்கையை ஏற்று, ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய ஆட்சிக்கும், அடிமைத்தனத்திற்கும் எதிராக கிளர்ந்தெழுந்து தன்னுயிரையும் துச்சமென மதித்து போராடி வீரமரணம் அடைந்த ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் ஆகியோர் நினைவாக திண்டுக்கல் மாவட்டத்தில், அரசின் சார்பில் ஒரே வளாகத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை மக்கள் உயர்வு பெற தன் வாழ்வை அர்ப்பணித்தவரும், மக்களின் அறியாமையைப் போக்க கல்வி நிறுவனம் தொடங்கியவரும், காந்தி அடிகளை அழைத்து வந்து அறநெறி பரப்பியவரும், சட்டமன்ற மேலவை மற்றும் பேரவை உறுப்பினராக பணியாற்றியவரும் ஆன சுவாமி சகஜானந்தா அவர்களுக்கு, அவர் வாழ்ந்த இடமான சிதம்பரத்தில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார். இதே கோரிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.பாலகிருஷ்ணன் மற்றும் திரு.ஆர்.ராமமூர்த்தி ஆகியோரும் விடுத்திருந்தனர். இவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, சுவாமி சகஜானந்தா தொண்டு செய்து வாழ்ந்த இடமான சிதம்பரத்தில் அரசின் சார்பில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, எனது ஆட்சிக் காலத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2000ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட சென்னையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபத்தினை சிறப்பான முறையில் புதுப்பித்து, புனரமைத்திட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். இவரது கோரிக்கையினை ஏற்று, சென்னை, மந்தைவெளி, பசுமை வழிச் சாலையில் அமைந்துள்ள சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களது மணிமண்டபம் புதுப்பித்து புனரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

"நமது இலட்சியம் உயர்வானது!
நமது பார்வை தெளிவானது!
நமது வெற்றி முடிவானது!"

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

